# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 05 திங்கட்கிழமை (20.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 024


# ஐ.நா. நிபுணர்குழு - நல்லிணக்கக் குழு சந்திப்பு பகிரங்கமாக நடக்க வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வலியுறுத்து



கொழும்பு, டிசெம்பர். 20

**ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவை சந்திப்பது முக்கியமான விடயம். அதன் பொருட்டே ஐ.நா. நிபுணர் குழு வரவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. நிபுணர் குழுவினர் நல்லிணக்க ஆணைக்குழு முன்னர் பகிரங்கமாகச் சாட்சியம் அளிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.**

**இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

மேற்கண்டவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள காரணத்தினாலேயே இலங்கை அரசு ஐ.நாவின் முடிவுக்கு இணங்கியுள்ளது. (27 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவினருடன் வெளிவிவகார அமைச்சர் திடீர் சந்திப்பு

கொழும்பு, டிசெ.20

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களை இலங்கை வெளிவிகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த நியமித்துள்ள (27 ஆம் பக்கம் பார்க்க)

## மாத இறுதியில் இலங்கை வருகிறார் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் மேனன்

கொழும்பு, டிசெ. 20

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இம்மாத இறுதியில் இலங்கை வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் குறித்த வருடாந்த பேச்சுகளில் கலந்து (27 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை - பிரிட்டிஷ் உறவில் விரிசல் நிலை கமெரூனின் கடிதத்தை வெளியிட அரசு மறுப்பு

கொழும்பு, டிசெ. 20

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமெரூன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தின் பின்னர் அனுப்பிய கடிதத்தை பகிரங்கப்படுத்துவதற்கு இலங்கை அரசு மறுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பாதுகாப்புச் செயலர் லியாம் பொக்ஸ் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த தனிப்பட்ட விஜயமொன்று ஏனைய பிரிட்டிஷ் அமைச்சர்களினதும் புலம்பெயர்ந்த தமிழர்களினதும் அழுத்தங்கள் காரணமாக இரத்துச் செய்யப்பட்டது என வெளியான செய்திகளுக்கு மத்தியில் மேற்படி விடயமும் தெரியவந்துள்ளது என கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனாதிபதி செயலகத்தில் இத்தகைய கடிதங்களைக் கையாளும் கொள்கை அமுலாக்கல் மற்றும் தகவல் பிரிவு, பிரிட்டிஷ் பிரதமரிடமிருந்து இத்தகைய கடிதம் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தது. இது குறித்து வெளிவிவகார அமைச்சுடன் கேட்குமாறும் பிரிட்டிஷ் மகாராணியாரிடமிருந்து கிடைத்த கடிதம் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பு பணிப்பாளர் பந்துல ஜயசேகர இது குறித்து உபசரணை பிரிவுத் தலைவர் ஏ.எல்.ரட்னபாலவிடம் கேட்குமாறு தெரிவித்தார்.

பிரிட் (27 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் இலங்கை வருகை

கொழும்பு,டிசெ.20

நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவொன்று ஜனவரி முதல் வாரம் இலங்கை வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் எரிக் சொல்ஹெய்ம் முதல் தட (27 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல் சிரேஷ்ட அமைச்சர்களின் அலுவலகம் தயார்

கொழும்பு, டிசெ. 20

அண்மையில் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அமைச்சர்கள் 10 பேரும் நாளை முதல் தமது புதிய அலுவலகத்துக்குச் செல்லவுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

சரியான அலுவலகம் ஒன்று இல்லாமையினால் தமக்குரிய கடமைகளை ஒழுங்காக மேற்கொள்ள முடிய (27 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடாளுமன்றத்தை புலிகளின் ஆதரவாளர்கள் பயன்படுத்துகின்றனர்

### இலங்கைத் தூதுவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 20

இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றும் அந்நாடாளுமன்றம் இதற்கு அனுமதியளிக்கிறது எனவும் இலங்கை அரசு குற்றஞ் சுமத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம், லக்ஸம்பர்க் ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியவன்ஸ இது தொடர்பாக மேலும் கூறியவை (27 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இனப்படுகொலைகள் குறித்து நேரில் சாட்சியமளிப்பதற்குத் தயார்

### ஜெயானந்தமூர்த்தி கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 20

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இனப் படுகொலைகள் தொடர்பாக நேரில் சாட்சியமளிக்கத் தயார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பான சாட்சியங்கள், ஆவணங்கள் ஆகியவை தம்வசம் இருக்கின்றன என்றும் அவர் (27 ஆம் பக்கம் பார்க்க)

# 50,000 வீடுகள் அமைக்கும் பணி தடைப்படமாட்டாது

## பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

வடக்கு, கிழக்கில் உதவி வழங்கும் நாடுகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் புதிய கட்டடங்களை நிர்மாணிக்கும் பணிகள் இடை நிறுத்தப்பட்டாலும் இந்தியாவின் உதவியுடனான 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுமெனப் பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் (27 ஆம் பக்கம் பார்க்க)


A/L 2011 உயிரியல்
07 மாதகால துரித மீட்டல் வகுப்பு
பகல்நேரம் வாரத்தில் 05 நாட்கள்
Dec 30 இல் ஆரம்பம் பிரிவு - A 10.00-12.00 பிரிவு - B 12.00-02.00
C.T.C யாழ் இந்துமகளிர் கல்லூரி அருகில், பிறவுண் வீதி
மேலதிக விபரங்களுக்கு The Express Institute
வகுப்புகள் நடைபெறும் இடம்
ஆசிரியர் திரு. ஆ. தங்கராஜா B.Sc




நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....
சொல்பெக் EW 050
Hayleys
ஹேலீஸ் காட்சியறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292




NIBM BUILDING COMPETENCIES
ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்
நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்
• மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
• வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி
A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62
அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன! முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.
NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### வடக்கு, கிழக்கில் உள்ளகப் பயிற்சியைப் பூர்த்திசெய்து

# புதிய நியமனம் பெறும் வைத்தியர்கள் இனி இரண்டு வருட சேவை புரிவது கட்டாயம்

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் உள்ளப் பயிற்சியைப் பூர்த்தி செய்யும் வைத்தியர்கள் இரண்டு வருடங்கள் அந்தந்த மாவட்டங்களில் பணியாற்ற மத்திய சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

''யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் வைத்தியர்கள் வடக்கு, கிழக்கில் இரு வருடங்கள் சேவையாற்ற வேண்டும்'' என்ற தலைப்பில் நேற்றைய பதிப்பில் வெளியான செய்திக்கு விளக்கம் அளிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தமை வருமாறு:-

தற்போது உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து முதல் நியமனத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நியமிக்கப்படும் வைத்தியர்கள் ஒரு வருட கால சேவையை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிறைவு செய்தால் அவர்களுக்கு வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இக் காலத்தை இரண்டு வருடங்களாக உயர்த்துவதாக மத்திய சுகாதார அமைச்சு மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ-ஐ-14)

## அமெ.நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை தேவையற்ற ஒன்றாகும்

### இலங்கை அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ,20

இலங்கையில் கடைசிக் கட்ட யுத்தத்தின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை தேவையற்ற ஒன்றாகும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மூலம் வலுவான பொறிமுறையொன்றை நாம் கொண்டிருக்கிறோம் என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்புப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழு தனது இலக்கை அடைவதற்கு அவகாசம் வழங்கப்பட வேண்டுமென அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனே கூறியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹிலாரி கிளின்டனுக்கு அனுப்பிய கடிதமொன்றில், இலங்கை அரசாங்கத்தின் இந்த ஆணைக்குழு எடுக்கும் எந்த முடிவும் ஐ.நா. ஆதரவுடனான சர்வதேச விசாரணையொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என உறுதியாக நம்புகிறோம் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுமத்திராத் தீவுகளில் நிலநடுக்கம்; சுனாமி ஏற்படாதென அறிவிப்பு!

ஜகார்த்தா, டிசெ.20

இந்தோனேசியா, சுமத்திரா தீவுகளில் நேற்றுக் காலை 5.1 ரிச்சர்ட் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவியியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

சுமத்திரா தீவின் வடபகுதியில் இந்நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை, அத்தோடு சுனாமிக்கான எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

தற்போது நிலநடுக்கம் ஏற்பட்ட இதே பகுதியில்தான், கடந்த 2004ஆம் ஆண்டு இதே மாதத்தில் (டிசெம்பர்) பெரும் நிலநடுக்கத்தால் உருவான சுனாமி இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான மக்களின் உயிர்களை காவுகொண்டது குறிப்பிடத்தக்கது.

இதனால் அப்பகுதி மக்கள் கடந்த ஆண்டுபோலவே இம்முறையும் சுனாமி ஏற்படுமா என அச்சத்தில் இருக்கின்றனர்.

இதேவேளை நேற்றுக்காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கையில் இம்முறை சுனாமி ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை என இலங்கை வானிலையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)



சிவனொளிபாதமலைக்கான யாத்திரை பருவகாலம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது. இதனையொட்டி இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜமஹா விகாரையில் வைக்கப்பட்டிருந்த சமன் தேவ விக்கிரமும் பூஜைப் பொருள்களும் இரத பவனியாகக் கொண்டு செல்லும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த இரத பவனி பெல்மதுளை, இரத்தினபுரி,அவிசாவளை, கிதுல்கல, கினிகத்தேனை, வட்டவளை, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, நல்லத்தண்ணி பகுதிகள் ஊடாக சிவனொளிபாத மலையின் அடிவாரத்தை நேற்றிரவு சென்றடைந்தது.

## காக்கைதீவு இறங்குதுறை நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணம், காக்கைதீவில் சர்வதேச தொண்டு நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட இறங்கு துறை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த இறங்கு துறையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் யாழ்.அரச அபதிர் இமெல்டா சுகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-ஐ-15)

## இந்திய கோழியிறைச்சி கிலோ 350 ரூபா

கொழும்பு, டிசெ.20

சந்தையில் கோழியிறைச்சிக்கு ஏற்பட்டுள்ள விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 500 மெட்ரிக் தொன் இறைச்சி நாளைமறுதினம் இங்கு வந்து சேருமென கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் கிரிசேன தெரிவித்தார்.

உச்ச பட்ச சில்லறை விலையாக கிலோவொன்று 350 ரூபா வீதம் இந்த இறைச்சி லக், ச.தொ.ச. மூலம் அடுத்த வாரம் முதல் விற்பனை செய்யப்படும். பொருளாதார மத்திய நிலையங்களிலுள்ள ச.தொ.ச. விற்பனை நிலையங்களிலிருந்து மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படும்.

அத்துடன் இந்தியாவிலிருந்த 50 லட்சம் முட்டைகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அவை வந்து சேர்ந்தவுடன் ச.தொ.ச. மூலம் குறைந்த விலைக்கு விற்கப்படுமெனவும் அவர் கூறினார். (ஒ-5)

## தனியார் துறை ஊழியர் விடுமுறை குறித்து ஆலோசனை

கொழும்பு, டிசெ.20

தனியார் துறை ஊழியர்களுக்கு வாரம் இரண்டு நாள்கள் விடுமுறை வழங்குவது தொடர்பான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான கலந்துரையாடல் நாளை 21 தேசிய தொழில் ஆலோசனைக்குழுவில் இடம் பெறவுள்ளது என்றும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் உபாலி விஜேவீர தெரிவித்தார்.

தனியார்துறை ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு 9 மணித்தியாலம் வீதம் வாரத்துக்கு 45 மணித்தியாலங்கள் வேலை செய்வதற்கான பிரேரணைகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## ஜனாதிபதிக்கு ஆதரவாக யாழ்.நகரில் உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம், டிசெ.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரிட்டனில் ஏற்பட்ட அவமானத்துக்காக, சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான வேல் முருகு தங்கராசா யாழ்.நகரில் நேற்று ஆரம்பித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்குச் சென்றபொழுது அங்கு அவருக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானத்துக்காகவே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். புலம்பெயர் தமிழ் மக்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் அவர்கள் இனி வரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டமானது பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை 8 மணி முதல் ஆரம்பமானது.

(ஒ-14-15-86)

## தமிழரசுக் கட்சியிலிருந்து விலக்கியதற்கு எதிராக பியசேன எம்.பி. வழக்கு

கொழும்பு, டிசெ.20

தமிழரசுக் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து தன்னை விலக்கியதை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர் எச்.பியசேன தாக்கல் செய்த மனுவை ஜனவரி மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர் சலீம், மார்சூப், சுரேஷ் சந்திர ஆகியோரே இந்த விசாரணைத் திகதியை உறுதிப்படுத்தியுள்ளனர்.

திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரான பியசேன தாக்கல் செய்த இந்த மனுவில் பிரதிவாதிகளாக தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராஜா, பதில் நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க கிலத்துல் கொட மற்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திசாநாயக்க ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு-

நான் தமிழ் பேசும் சிங்கள இனத்தவன். 2010 ஏப்ரல் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். அதன் பின் நடந்த 18ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது நான் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தேன். அதனை முன்னிட்டு என் மீது ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதற்கான எனது சுயவிளக்கத்தைக் கட்சி கோரியிருந்தது. அதனையடுத்து நவம்பர் மாதம் 28ஆம் திகதி எனது உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுவிட்டதாக கட்சி மேலிடம் எனக்கு தெரிவித்தது. எனவே, தனது உறுப்புரிமையை நீக்கியது செல்லுபடியற்றதென தமிழரசுக் கட்சிக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்.- இவ்வாறு பியசேன தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி திருமதி தம்மிக்க தர்மதாசவின் அனுசரணையில் சட்டத்தரணி திருமதி கௌசல்யா மொல்லிகொட, ஜனாதிபதி சட்டத்தரணி டி.எஸ். விஜேசிங்க ஆகியோர் ஆஜராகினர்.

(எ)

## பெறுமதிசேர் வரி நீக்கத்தால் மாகாணசபைக்கு ஏற்படும் வருமான இழப்பை திறைசேரி ஈடுசெய்யும்

கொழும்பு, டிசெ.20

வரவு செலவுத் திட்டத்தில் பெறுமதி சேர்வரி (வற்) நீக்கப்பட்டதால் மாகாண சபைகளுக்கு ஏற்படவுள்ள வருமானம் இழப்பு திறைசேரியினால் ஈடு செய்யப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாகாண சபை முதலமைச்சர்களுடன் ஜனாதிபதி அண்மையில் நடத்திய கலந்துரையாடலை அடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சகல மாகாண சபைகளினதும் வரவு செலவுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும், பெறுமதி சேர் வரி நீக்கத்தால் நிதி நிலைமையில் பாரிய நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் முதலமைச்சர்கள் இதன் போது ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார்.

மாகாண சபைகளின் 70 சதவீத வருமானம் பெறுமதி சேர் வரி மூலமே ஈட்டப்படுகிறது. எனினும் வரவு செலவுத் திட்டத்தில் இவ்வரி நீக்கப்பட்டு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் மூன்றில் ஒரு பங்கும், வாகன பதிவுகள் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 70 சதவீதமும் முத்திரைக்கட்டணம் முழுதாகவும் மாகாண சபைகளுக்கு உரித்தாகுமாறு திட்டமிடப்பட்டது. பெறுமதிசேர் வரி நீக்கப்பட்டதால் மாகாண சபை வரியிறுப்பாளர்கள் தமது தொழிலை இழக்க வேண்டி வரும் என்ற அச்சம் அண்மையில் உருவானது. அவர்களது தொழிலுக்கு எவ்வித பங்கமும் ஏற்படாது எனவும் ஜனாதிபதி சந்திப்பின் போது உறுதியளித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ் குற்றச்சாட்டுக்கு தமிழ் அமைச்சர்கள் மறுப்பு

கொழும்பு, டிசெ.20

'விக்கிலீக்ஸ்' வெளியீடு களில் குறிப்பிட்டிருப்பது போல் தமது ஆயுதக் குழுக்கள் சிறுவர் களை போராளிகளாக இடம் பெயர்ந்த முகாம்களில் இருந்து. இணைத்துக் கொள்ளவும் சட்ட விரோத கொலைகள் புரியவும் இராணுவ முகாம்களுக்குள் விப சார விடுதிகள் நடத்தவும் இலங்கை அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக் ளஸ் தேவானந்தா, பிரதி அமைச் சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய இருவரும் கடுமையாக மறுத்திருக்கிறார்கள் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது. அச்செய்தி மேலும் தெரி விப்பதாவது:-

அமைச்சர் முரளிதரன் கூறுகை யில், இலங்கை இராணுவம் மிக ஒழுக்கம் நிறைந்தது. எந்த ஒரு பெண்ணையும் ஒருபோதும் வல்லுறவுக்குட்படுத்தியதில்லை. அவ்வாறு ஏதும் நடைபெற்றிருந் தால் அவை இதுவரைக்கும் வெளி வந்திருக்கும்.

இந்த விடயத்தை அமெரிக்கா அரசாங்கத்துடன் விவாதிக்கும் படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

அமைச்சர் தேவானந்தா தமது குழுவினர் வயது குறைந்தவர் களை மலேசியாவுக்குக் கடத்தி னார்கள் என்பதை மறுத்தார். அவ் வாறு நடந்திருந்தால் மக்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் தோன்றி அதனை வெளிப் படுத்தியிருப்பார்கள் - என்றார்.

இலங்கையில் முன்பு அமெ ரிக்க தூதுவராக இருந்த றொபேர்ட் பிளேக் தமது நாட்டுக்கு 2007 ஆம் ஆண்டு அனுப்பிய அறிக் கையில் இவ்வாறான குற்றச் சாட் டுக்கள் தொடர்பாக அறிவித் திருந்தார் என விக்கிலீக்ஸ் தக வல் வெளியிட்டிருந்தது. (ப)

## சிறுவர் துஷ்பிரயோகத் தொலைபேசிச் சேவைக்கு; 5 மாதங்களுக்குள் 18 ஆயிரம் அழைப்புகள்

கொழும்பு, டிசெ.20

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறார்க ளுக்கு உதவும் வகையில் 1929 என்ற எண்ணைக் கொண்ட தொலைபேசிச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட ஐந்து மாத காலத்துக்குள் முறைப் பாடுகள் மற்றும் உதவிகளைக் கோரி 18 ஆயிரத்து 200 தொலை பேசி அழைப்புகள் அதிகார சபைக்கு கிடைத்துள்ளதாக தேசிய அதி கார சபையின் தலைவர் திருமதி அனோமா திஸநாயக்க தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2805 அழைப்புகள் பாரதூர மான துஷ்பிரயோகச் செயல்கள் சம்பந்தப்பட்டவை. அச்சம்பவங் கள் தொடர்பாக சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அச் சம்பவங்களுக்கு உரிய பொலிஸ் நிலையங்கள் மூலமா கவோ அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மூலமாகவோ அது சம்பந்தமாக வழக்குகளைத் தொடுப்பதற்கு அல்லது அவசிய மான சட்டமயச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளன. பெருமளவு தொலைபேசி அழைப்புகள் சிறார்களிடம் இருந் ததே கிடைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (எ-22)

## புலிகளுக்குச் சார்பாகச் செயற்படும் 5 இணையத்தளங்களை அரசு கண்காணிப்பு

கொழும்பு, டிசெ.20

பாதுகாப்பு படையினருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதத்தில் புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் புலிகளுக்கு சார்பாக பிரசாரங்களை மேற் கொள்ளும் ஐந்து இணையத் தளங் களை பாதுகாப்புப் பிரிவினர் கண் காணித்து வருவதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து சிங் களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கருத்துக்களை வெளிப் படுத்தும் இந்த இணையத் தளங் களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற் படும் அச்சுறுத்தல் குறித்து இதன் போது விசேடமாக ஆராயப்பட வுள்ளது.

குறிப்பிட்ட ஐந்து இணையத் தளங்களுக்கு அடிப்படை நிதி உதவிகளை வழங்குவோர் யார்? அவற்றை இயக்கிச் செல்வோ ருக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையில் நிலவும் தொடர்புகள் எத்தகையன என்பது பற்றிய விசா ரணைகள் முடிவுற்றதன் பின்னர் அது சம்பந்தமான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ள தாக வும் அச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ-22)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் 60ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஆசீர்வாத பூஜைகளும் மத அனுஷ் டானங்களும் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுனா ரணதுங்க, லக்ஷ் மன் கிரியெல்ல உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், ஆதர வாளர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

# புலிகள் அமைப்பின் பிரமுகரான கரிகாலனும் இறுதிப் போரின்போது கொல்லப்பட்டுவிட்டார்

### பிரதி அமைச்சர் முரளிதரன் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.20

விடுதலைப் புலிகள் அமைப் பின் முக்கிய தலைவர்களில் ஒரு வரான கரிகாலன் இறுதிப்போரின் போது கொல்லப்பட்டு விட்ட தாக மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளி தரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

'லக்பிம நியூஸ்' ஆங்கில வார இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இந்தத் தக வலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து இணையத்தளம் ஒன்றில் வெளியான தகவல் கள் வருமாறு:-

போரின் இறுதிக்கட்டத்தில் கடந்த வருடம் மே மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர் களான யோகி, பாலகுமாரன், கரிகாலன், லோறன்ஸ் திலகர், புதுவை இரத்தினதுரை உள் ளிட்ட பலர் படையினரிடம் சர ணடைந்திருந்தனர்.

இவர்கள் படையினரால் பேருந்து ஒன்றில் ஏற்றிச் செல் லப்பட்டதை அவர்களின் உற வினர்கள் நேரில் கண்டுள்ளனர்.

அதன் பின்னர் இவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர், இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்த எந்த விவரங் களும் வெளியாகவில்லை.

ஆனால் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலரும் இறுதிப் போரில் கொல்லப்பட்டு விட்ட தாக இலங்கை அரசாங்கம் தற் போது கூறி வருகிறது.

முன்னதாக யோகி, பால குமாரன் ஆகியோர் இறுதிப் போரில் கொல்லப்பட்டு விட்ட தாகவும் தடுப்புக்காவலில உள்ள வர்களில் அவர்கள் இல்லை என்றும் அமைச்சர் டியு.குணசேகர அண்மையில் கூறியிருந்தார்.

தற்போது அமைச்சர் முரளி தரன் கரிகாலனும் இறுதிப் போரில் கொல்லப்பட்டு விட்ட தாகக் கூறியுள்ளார்.

போரின் முடிவில், கொல் லப்பட்டதாக பாதுகாப்பு அமைச் சினால் அறிவிக்கப்பட்ட புலி களின் முக்கிய தலைவர்களின் பட்டியலில், படையினரிடம் சர ணடைந்த புதுவை இரத்தின துரை, கரிகாலன், யோகி, பால குமாரன், லோறன்ஸ் திலகர் போன்றோரின் பெயர்கள் இடம் பெற்றிருக்கவில்லை.

ஆனால் இப்போது அரசாங் கம் அவர்கள் சரணடையவில்லை என்றும் போரிலேயே கொல் லப்பட்டதாகவும் கூறிவருகிறது.

பொட்டுஅம்மானின் சட லம் படையினரால் கண்டுபிடிக் கப்படாத போதும் அவரும் இறந்து விட்டதாக அறிவித்திருந்தது அரசாங்கம்.

அதுபோலவே அரசாங்கம் கூறுவது போன்று பாலகுமாரன், யோகி, புதுவை இரத்தினதுரை, கரிகாலன் போன்ற முக்கிய தலை வர்களும் இறுதிப் போரிலேயே கொல்லப்பட்டிருந்தால், இவர் களின் பெயர்களை அந்தப் பட் டியலில் பாதுகாப்பு அமைச்சு சேர்க்காதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது - என்று இணை யத் தளச் செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## ஏறாவூர் பிரதேச செயலருக்கு விளக்கமறியல்

ஏறாவூர் பிரதேச செயலாளர் எஸ்.ஹில்மியை விளக்கமறிய லில் வைக்குமாறு திருகோண மலை நீதிவான் நீதிமன்றம் உத் தரவிட்டது.

ஆறு வருடங்களுக்கு முன் னர் பெண் எழுதுவினைஞர் ஒரு வரைக் கொலை செய்த குற்றச் சாட்டுத் தொடர்பாகவே ஏறா வூர்ப் பிரதேச செயலாளரை டிசெம்பர் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் ஜே.எம்.லாஹிர் உத்தரவிட்டார்.

குறித்த சந்தேகநபர் ஏறாவூர் சுகாதாரத் திணைக்களத்தில் பிர திப் பணிப்பாளராக இருந்த போதே இக்குற்றத்தைச் செய் துள்ளதாகப் பொலிஸார் நீதி மன்றத்தில் தெரிவித்தனர். (எ)

# ஓய்வுபெற்ற நீதிபதிகளை அமர்த்தி வார இறுதி நாள்களில் விசாரணை

### நீதி அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.20

விசாரிக்கப்படாமல் குவிந் துள்ள பெருமளவு வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்வ தற்காக அடுத்த வருடம் முதல் 3 வருட திட்டமொன்று முன் னெடுக்கப்படும். இதன்படி ஓய்வு பெற்ற நீதிபதிகளைப் பயன் படுத்தி வார இறுதி நாள்களில் வழக்குகளை விசாரணை செய்ய வும் நீதிமன்றங்களின் தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நீதிபதிகளின் வருடாந்த மாநாடு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. பிர தம நீதியரசர் அசோக டி சில் வாவின் தலைமையில் நடை பெற்ற இந்த மாநாட்டில் நாடு முழுவதிலும் உள்ள நீதிவான் கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

நீண்ட காலம் விசாரிக்கப் படாமல் குவிந்துள்ள வழக்கு களைத் துரிதமாக தீர்ப்பது குறித்து பிரதம நீதியரசருடனும் நீதிச் சேவை ஆணைக்குழு வுடன் பேச்சு நடத்தியுள்ளோம். இதன்படி, வழக்குகளை துரிதப் படுத்த அடுத்த வருடம் முதல் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற் காக 450 மில்லியன் ரூபா வரவு செலவுத்திட்டத்தினூடாக ஒதுக் கப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கு வழங்கும் வசதிகளை அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுத்துள் ளோம். நீதிபதிகள் அன்றாடம் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தயாராக உள்ளோம். வழக்குகள் தாமதமாவதற்கு யாரையும் குற்றங்கூற முடியாது. இதனை ஒன்றுபட்டே தீர்க்க வேண்டும்.

நீதிபதிகளுக்கு பயிற்சி வழங் கவும் நடவடிக்கை எடுத்துள் ளோம். நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு நவீன வசதிகள் வழங்கப்பட வுள்ளன.

கொழும்பில் நீதிபதிகள் தங் கிப் பயிற்சி பெற உச்ச நீதிமன்ற வளாகத்தில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்த வருட முதற் பகுதியில் ஜனாதிபதி திறந்து வைப்பார். 60 நீதிமன்றங்களை புதிதாக உருவாக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

உள்நாட்டிலும் வெளி நாட்டி லும் பயிற்சிகளை வழங்க இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. தற் பொழுது இந்தியாவில் நீதிபதி களுக்கு பயிற்சி வழங்கி வரு கிறோம்.

நீதிபதிகளுக்கு 120 வாக னங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் பல புதிய சட்டங்கள் உருவாக்கப் பட உள்ளன.

வழக்குகளை துரிதமாக விசா ரணை செய்யும் திட்டத்திற்கு நீதிபதிகள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுமார் 850 வழக்குகள் 10 வருட காலத்திற் கும் மேலாக விசாரணை செய் யப்படாதுள்ளன.

நானும் ஜனாதிபதியும் சட் டத்தரணிகள் என்பதால் நீதித் துறையில் காணப்படும் பிரச் சினைகளைத் துரிதமாக தீர்க்க முடியும் என்றும் கூறினார்.

பிரதம நீதியரசர் உரை

இந்நிகழ்வில் பிரதம நீதியர சர் அசோக டி சில்வா கூறியதா வது:-

நீதிபதிகளுக்கு போபாலில் பயிற்சி வழங்கி வருகிறோம். தொடர்ந்து இந்த பயிற்சி வழங் கும் திட்டம்முன்னெடுக்கப்படும். 4 முதல் 5 வருட பயிற்சியின் பின்னரே நீதிபதியாக ஒருவர் தெரிவாவார். ஏனென்றால் நீதி பதிகளுக்கு அனுபவம் முக்கிய மாகும்.

முன்னர் 6 வருட அனுபவத் தின் பின்னரே நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். தற்பொழுது அது 3 வருடங்களாகக் குறைக் கப்பட்டுள்ளது. மீளவும் 6 வருட அனுபவத்தின் பின் நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

நீதிபதிகள் பக்கச்சார்பாக அன்றி பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் வகையில் தீர்ப்பு வழங்க வேண்டும். தண்டனை வழங்கும் போதும் உச்சகுன டனையை விட அதிகமாக வழங் கக் கூடாது - என்றார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் மின்னஞ்சல் வசதி ஆட்டம் காணும் கூகுள்




புதிதாக 'பேஸ்புக்'கில் மின்னஞ்சல் வசதி கிடைக்கும் சூழலில், கூகுள் பயனாளர்கள், மின்னஞ்சலுக்காக 'ஜிமெயி' லுக்கு போகவேண்டிய அவசியமே இருக்காது. இதன் மூலம் கூகுளின் அடித்தளத்தையே ஆட்டம்காண வைத்துள்ளது 'பேஸ்புக்'.

அமெரிக்காவில் அண்மையில் ஆரம்பித்த இணையதளக் கருத்தரங்கில் பங்கேற்ற 'பேஸ்புக்' ஜூக்கர்பெர்க் 'பேஸ்புக்கின்' இமெயில் சேவையினை முறைப்படி அறிவித்தார்.

இதில் இன்னொரு வசதி, 'பேஸ்புக்' மின்னஞ் சலைப் பெற 'பேஸ்புக்' தளத்தில் உங்கள் கணக்குக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது தனியாக வெளியிலிருந்தபடி பாவித்துக் கொள்ளலாம்.செய்திகளும், படங்களையும் அனுப்ப முடியும்.

சுருக்கமாக சொன்னால், மெயில் சேவையில் கூகுள், யாஹூ போன்றவை தரும் வசதிகள் அனைத்தையும் 'பேஸ்புக்கே' தரப் போகிறது. 'மைக்ரோசாப்ட் வேட் டொக்குமெண்ட்களையும்' தர விறக்கம் செய்யாமல் அட்டாச்மென்ட்களாகவே பார்க்கும் வசதியை 'பேஸ்புக்' தருகிறது.

இந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வர இன்னும் ஓரிரு மாதங்கள் பிடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்குள், மேலும் சில புதிய மின்னஞ்சல் வசதிகளைத் தர கூகுள் திட்டமிட்டுள்ளது. அத்துடன் 'பேஸ்புக் ' போன்ற பெரிய சமூகத்தளம் ஒன்றையும் அறிமுகப்படுத்த உள்ளது . ஏற்கனவே நான்கு சிறிய சமூக இணையதங்களை வாங்கியுள்ளது கூகுள். இவற்றைக் களமிறக்கி 'பேஸ்புக்குக்கு' அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க திட்டமிட்டுள்ளது கூகுள் நிறுவனம்.

சர்வதேச நிலைவரப்படி இணைய தரவரிசையில் கூகுள் முதலிடத்திலும், பேஸ்புக் இரண்டாம் இடத்திலும், யூட்டியூப் மூன்றாவது இடத்திலும், யாஹூ நான்காவது இடத்திலும் உள்ளன.

ராமன்.

# வயர்கள் இன்றி மின்னேற்றம்

வயர்கள் அற்ற முறையில் கையடக்கத் தொலைபேசிகளையும், ஏனைய உபகரணங்களையும் மின்னேற்றம் செய்யும் புரட்சிகரமான முறை வின்ட்ஸர் சர்வதேச விமான நிலையத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது விரைவில் உலகமயமாக்கப்படும் என்று இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ள நிறுவனம் தெரிவித்துள்ளது.

மிஸோரியை தளமாகக் கொண்டு செயற்படும் லெகட் அன்ட் பிளட் நிறுவனமே இந்தத் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.


கையடக்கத் தொலைபேசிகளை வரையரையின்றி இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மின்னேற்றம் செய்து கொள்ளலாம். விமானங்களின் இருக்கைகள், சமையலறைகளின்



மேல்தளம், வாகனதிருத்துமிடம், ரயில் மற்றும் பஸ் வண்டி நிலையங்கள் என்பனவற்றில் இதைப் பயன்படுத்தலாம்.

60 இற்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் மற்றும் அவை சம்பந்தமான உபகரணங்களின் விநியோகத்தர்கள் ஆகியோருடன் விரிவான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியே இந்த தொழில்நுட்பமுறை உருவாக்கபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொடரும் கொள்ளை..


இவர்தான் அந்தக் கொள்ளைக்காரன்

அடுத்தவர் உழைத்து சம்பாதித்த பொருளை கொள்ளையடிப்பது மனித குலத் திற்கு மட்டுமே உரிய குணம் என்று நினைப்பது தவறு.

சில காட்டு விலங்குகளும், பறவைகளும் கூட, இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றன.

கடலில் பயணிக்கும் கப்பல்களை வழிமறித்து கொள்ளையடிக்கும் கடற்கொள்ளையர்களைப் போலவே ஸ்குவாஸ் என்ற கடற்பறவை, மற்ற பறவைகளின் உணவை வழிமறித்து கொள்ளையடிக்கின்றது.

ஸ்குவாஸ் என்பது, கடலில் வாழும் ஒரு வகைப் பறவை. தாக்கும் குணம் கொண்டது. டெர்ன், பப்பன் உள்ளிட்ட மற்ற கடற்பறவைகள், தங்களின் குஞ்சுகளுக்கோ அல்லது கூடுகளுக்கோ கொண்டு செல்லும் உணவை, இப்பறவை இடை மறித்து கொள்ளை அடிக்கும். வானில் பறந்து கொண்டே சண்டை போட்டு ஏனைய பறவைகளை கொல்லும் இயல்புடையது. சில நேரங்களில் ஸ்குவாஸ் பறவைகள் ஒன்று சேர்ந்து, ஏனைய பறவைகளை துரத்திச் சென்று வேட்டையாடுவதும் உண்டு. இதனால் ஸ்குவாஸ் பறவைகளை கண்டாலே ஏனைய கடற் பறவைகள் கதிகலங்குகின்றன. அமெரிக்கா மற்றும் ஆட்டிக் பகுதிகளில் உள்ள ஸ்குவாஸ் பறவைகள், ஒட்டுண்ணி பறவைகள் என்று அழைக்கப்படுகின்றன. முரட்டுத்தனமாக தாக்குதல் நடத்துவது பெரும்பாலும் விலங்குகளிடம் காணப்படும் குணமாகும். ஏனைய உயிரினங்களிடம் இருந்து கொள்ளையிட்டு உண்பதற்கு, 'கிளிப்டோபாராசிடிசம்' என்று அழைக்கப்படும். ஸ்குவாஸ் பறவைகளில் சில, கொள்ளை அடிப்பதற்காகவே தனியாக வாழ்கின்றன.

ஆட்டிக் பகுதிகளில் வாழும் ஸ்குவாஸ் பறவைகள், பெரும்பாலும் கடலிலேயே வாழும். இனப்பெருக்க காலமான கோடை காலத்தில் மட்டும் கரைக்கு வருகின்றன. ஸ்குவாஸ் குஞ்சுகள் வளர்ந்தாலும் கடலிலேயே இருக்கும். இவை, இனப்பெருக்கத்திற்கு தயாராக இரண்டு ஆண்டுகள் ஆகும். பொதுவாக, வேட்டையாடப்படும் உயிரினம், முட்டைகள், சிறிய பறவைகள் ஆகியவற்றையே மற்றவை உணவாக உண்ணும். ஆனால், ஸ்குவாஸ் பறவை சிறிய விலங்குகள் மற்றும் மீன்களையும் உண்ணும் இயல்புடையது. ஸ்குவாஸ் பறவைகள் நீண்ட தூரம் பறக்க வல்லவை. பெரும்பாலான நேரங்களில், கடல் பகுதிகளில் பறந்து கொண்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்டிக் பகுதியில் குளிர்காலம் தொடங்கியதும், பூமியின் தென்பகுதிக்கு அவை இடம்பெயர்ந்து விடுகின்றன.

# இசைக் கருவிகள் ஏதுமின்றி ஐ போனிலும் ஐ போட்டிலும் இசை



இசைக்கருவிகள் ஏதுமின்றி 'விட் ஜெட்கள்' தையே எனப்படும் அமைப் புகளால் ஐ போன் மற்றும் ஐ போட்களில் இசையை மீட்டி அதிசயிக்க வைத்திருக்கிறார்கள் அமெ ரிக்காவின், ஜோர்ஜியாவை சார்ந்த குழுவினர்.

இதற்கென்றே இவர்கள் இசைக்குழுவினையும் வைத்திருக்கிறாகள். மொபைல் போன் கண்டு பிடித்த எப்படிக் கண்டுபிடித்தார் கள் என்று நினைக்கையிலே தலை சுற் றும் போது, இந்த ஐ போன், ஐ போட் களில் எவ்வாறு இசைக்கருவிகள் இன்றி இசையை மீட்ட வைக்கிறார் கள் என்று நினைக்கும் போது அதற்கு மேலே தலை சுத்துகிறது அல்வா. மூன்று கிறிஸ்துமஸ் பாடல்களை இசைக்கருவிகளே இல்லாமல் மீட்டி வாயை பிளக்க வைத்து விட்டார்கள். நீங்களும் பாத்து வியக்க வேண்டிய நேரமிது.




# சாப்பிடுவதைச் சுவைத்துச் சாப்பிடலாமே...

தினமும் நாம் சாப்பிடுகிறோம். வாழ்நாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சாப்பிடாமல் நாம் உயிர்வாழ முடியாது என்பது நமக்கு மறப்பதற்கில்லை.

ஆனால் சாப்பிடும்போது செய்யவேண்டிய சில விஷயங்களைத்தான் நாம் மறந்து விடுகிறோம்.

சிலர் மிக வேகமாக சாப்பிடுவார்கள். சிலர் மிக மெதுவாக சாப்பிடுவார்கள். எப்படி சாப்பிட்டாலும் சரி, வாயில் போடப்பட்ட உணவு நன்றாக கடிக்கப் பட்டு மெல்லப்பட்டு, சுவைக்கப்பட்டு, கூழாக்கப் பட்டு, அதன்பின் வயிற்றுக்குள் போக வேண்டும். அது தான் முக்கியம். அப்படியே விழுங்கக் கூடாது.

சிலர் இரண்டே நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து விடுவர். இன்னும் சிலர் ஒவ்வொரு வேளையும் சுமார் முக்கால் மணி நேரம் சாப்பிடுவர். அதுவும் தவறு, இதுவும் தவறு.

சைவ உணவை சீக்கிரம் சாப்பிட்டு முடித்து விடலாம். அசைவ உணவு சாப்பிடும்போது கொஞ்சம் தாமதிக்கத்தான் செய்யும். குறைந்தது சுமார் 5 நிமிடங்களும், கூடுதலாக சுமார் பதினைந்து நிமிடங்களும் சாப்பிடுவதற்காக ஒதுக்குவது நல்லது. ஐந்து நிமிடங்களுக்கு குறைவாக சாப்பிடுவதும் நல்லதல்ல. பதினைந்து நிமிடங்களுக்கு அதிகமாக சாப்பிட்டுக் கொண்டிருப்பதும் நல்லதல்ல.

எந்த உணவை நாம் சாப்பிட்டாலும் கடித்து சுவைத்து அதன்பின்தான் விழுங்க வேண்டும். கோழி விழுங்குவதைப்போல வாயில் போடும் உணவை அப்படியே விழுங்கக்கூடாது. நிறையபேர் இப்படித் தான் சாப்பிடுகிறார்கள்.

ஒரு முழு நெல்லை கோழி அப்படியே விழுங்குகிறது. கோழிக்கு பற்கள் கிடையாது. அதனால் மெல்லுவது கிடையாது. அதற்கு அலகு அதாவது மூக்கும், நாக்கும்தான் உள்ளது. கோழி உண்ணும் உணவு அதனுடைய அலகாலும், வயிற்றினாலும்தான் சிறுசிறு துண்டுகளாகவும் கூழாகவும் ஆக்கப்படுகிறது. அந்த பச்சை நெல்லை ஜீரணிக்க வைக்கக்கூடிய அளவுக்கு மிக சக்தியான 'என்சைம்' மற்றும் உணவு மண்டல அமைப்பு கோழிக்கு இருக்கிறது. நமக்கு அப்படி இல்லை.



நாம் சாப்படும் உணவு ஜீரணம் அடைவதற்கு வாயிலுள்ள உமிழ் நீர் முக்கிய பங்கு வகிக்கின்றது. மனிதனின் வாயின் இரண்டு பக்கங்களிலும் மூன்று ஜோடி உமிழ்நீர் சுரப்பிகள் இருக்கின்றன. அவையா வன.

1.பரோட்டிட் சுரப்பி,
2.சப்மேன்டிபுலார் சுரப்பி,
3.சப்லிங்குவல் சுரப்பி.

இந்த மூன்று சுரப்பிகளிலிருந்தும் வரும் குழாய்கள் வாயினுள் வந்துதான் திறக்கின்றன.

பரோட்டிட் சுரப்பிதான் இந்த மூன்றில் மிகப் பெரியது. அடுத்ததாக உள்ள சப்மேன்டிபுலார் சுரப்பிதான் 70 சதவீத உமிழ்நீரை சுரக்கிறது. ஐந்து சதவீத உமிழ்நீர், மூன்றாவதாக உள்ள சப்லிங்குவல் சுரப்பியிலிருந்து சுரக்கின்றது.

உணவை பார்த்தவுடன், உணவை நினைத்தவுடன், உணவின் வாசனையை நுகர்ந்தவுடன் உமிழ்நீர் அதிகமாக சுரக்க ஆரம்பக்கிறது. உமிழ்நீரில் மியூகஸ், புரோட்டின், தாது உப்புக்கள் மற்றும் அமைலேஸ் என்கிற என்சைம் ஆகியவை இருக்கின்றது. ஒரு நாளைக்கு சுமார் 1 முதல் 2 லிட்டர் உமிழ்நீர் வாயிலிருந்து வயிற்றுக்குள் தள்ளப்படுகிறது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நிபுணர் குழு விஜயம் என்னாகும்?

எங்கள் நாட்டில் நடைபெற்றதாகச் சொல்லப்படும், குற்றஞ்சாட்டப்படும் விடயத்தில் வெளியார் எவரையும் தலையிட விடமாட்டோம். இதனை நாமே கையாள்வோம், கண்டறிவோம் என்று விடாப்பிடியாக நின்ற இலங்கை அரசாங்கம், இப்போது தனது சன்னதத்தை நிறுத்தி உள்ளது; வீராவேசத்தைத் தணித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு இங்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இலங்கை அரசாங்கம் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டும் என்ற கருத்து உலகளாவிய ரீதியில் பலமடைந்தது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையில் அத்தகைய ஒரு தீர்மானம் வராமல் இலங்கை அரசு தனது ராஜீக உத்திகளாலும், யுக்திகளாலும் தடுத்து வந்தது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அவசர அவசரமாக நியமித்து, விசாரணை எதனையும் ஐ.நா. சபை செய்யவிடாது தடுத்துக் கொள்வதில் அரசு வெற்றி கண்டது என்றும் சொல்லலாம். இது விடயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ- மூனுக்கும் இடையில் நிலவும் நெருங்கிய தோழமையும் முக்கிய காரணம் என்று கூறப்பட்டது.

எப்படியோ, இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டிய விடயத்தில், தமக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு ஒன்றை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மூனுக்கு ஏற்பட்டது. அதனையும் இலங்கை அரசு ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவித்தது.

நிபுணர்குழு நியமிக்கப்பட்டதை இலங்கை அரசு கண்டித்தது. தனது ஆதரவாளர்களைக் கொண்டு கொழும்பில் உள்ள ஐ.நா.தூதரக அலுவலகத்தை முற்றுகையிடச் செய்தது. அதனால் அலுவலகம் மூடப்பட்டு இங்கிருந்த ஐ.நா வின் நிரந்தரப் பிரதிநிதி திருப்பி அழைக்கப்பட்டார். இரண்டு தரப்புகளும் பரம எதிரிகள் போன்று வசை பாடியும் மோதிக் கொள்ளவும் செய்தன. எனினும் அவை பின்னர் விட்டுக் கொடுப்பையும் சமரசச் செயற்பாடுகளையும் கையாண்டன.

இவற்றின் உச்சக்கட்டம் அமைச்சர் விமல் வீரவன்ச உண்ணாவிரதம் இருந்ததும் அவர் உயிரைக் காப்பாற்றுவதாகக் கூறி ஜனாதிபதி பழரசம் கொடுத்து அதனை முடித்து வைத்த நிகழ்வுகள் எனலாம்.

கடந்த ஜூலை மாதத்தில் பான் கீ- மூன் நிபுணர் குழுவை நியமித்ததும், அதனை நியமிக்காமல் தடுப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எஸ்.பீரிஸ் நியுயோர்க் சென்று தோல்வியுடன் திரும்பியதும் முந்திய ராஜீக அரங்கங்களில் ஒன்று.

அவை எல்லாவற்றையும் மறந்துபோன, மறைத்துப் போன பதிவுகளாக்கிவிட்டு, ஐ.நா நிபுணர் குழு இலங்கை வருவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இம்மாதம் பதினைந்தாம் திகதியுடன் முடிவடைய இருந்த நிபுணர் குழுவின் பதவிக் காலமும் எதிர்வரும் முப்பதாம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

சுயாதீனமான விசாரணைகள் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பூதாகரமாக எழுந்து நிற்கும் இவ்வேளையில், அவற்றைத் தணிப்பதற்கும் தடுப்பதற்குமான ஓர் உத்தியாகவே இலங்கை அரசாங்கம் ஐ.நா. நிபுணர் குழுவின் வருகையை அனுமதித்திருக்கிறது எனலாம்.

''இலங்கை ஜனாதிபதியின் நெகிழ்வுத் தன்மையை வரவேற்கிறேன்'' என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ -மூன் மெச்சியிருப்பதில் இருந்து, ஏதோ ''ஒருவகை ஒழுங்கின்'' பிரகாரமாகவே நிபுணர் குழுவுக்கு இலங்கை வர அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் கொள்ள இடமுண்டு.

ஐ.நா.நிபுணர்களின் இலங்கை விஜயத்தை இன்னொரு கோணத்திலும் நோக்கலாம், பார்க்கலாம். அந்தக் குழு விடுத்த அறிவித்தலை அடுத்து இதுவரை 1,100 சாட்சியங்கள் மின்னஞ்சல், விரைவுத் தபால் ஆகிய இரண்டு வழிகளிலும் கிடைத்துள்ளன.

அவற்றில் பல உறுதிப்படுத்தப்பட்டனவாக அமைந்துவிட்டால் அதற்கு இலங்கை அரசு பதில் கூறியாக வேண்டும்; அல்லது குற்றச்சாட்டுக்கள் குறித்துப் பொறுப்புக் கூறும் ஒரு இக்கட்டு நிலை ஏற்படும் சாத்தியமும் உருவாகலாம். ஐ.நா நிபுணர்கள் இங்கு வரும் பட்சத்தில், அதற்கான சில ராஜதந்திரக் குறுக்குக் கட்டைகளைப் போட்டுத் தடுக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு வாய்ப்பாக்கிக் கொள்ளும் சூழல் உருவாக்கப்படக்கூடும் எனவும் சொல்லப்படுகிறது.

இலங்கை வரும் ஐ.நா. நிபுணர் குழு, பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் சாட்சியங்களைப் பெறவுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும், அதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதால் அதன் விஜயம் வெறும் கண்துடைப்பாகி விடக்கூடும் என்ற நிலையும் உண்டு.

இதுவும் பான் கீ-மூன் மஹிந்த தோழமைச் செல்வாக்குக்கு உட்படுமோ என்ற ஒரு வகை அச்சம் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் எழுப்பப்படுகிறது. அதனால் ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் வந்தோம், பேசினோம்,கேட்டோம் என்று வட்டம் கீறுவதோடு முடிந்துவிடக் கூடாது என்பது பாதிக்கப்பட்டவர்களின் உள்ளக்குமுறலாக உள்ளது.

எதற்கும் ஐ.நா. நிபுணர் குழு கொழும்பு வந்த பின்னர், வந்து சென்ற பின்னர், தெரிய வரும் என்று காத்திருப்பதே உகந்தது; நல்லது.

### வடக்கு கிழக்கில் காணப்படும் பௌத்த சின்னங்கள்

# தமிழர்களும் அங்கு பௌத்தர்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதைக் காட்டும்

### அமைச்சர் அழகப்பெரும தரும் விளக்கம்

கொழும்பு, டிசெ.20

வடக்குக் கிழக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்க முடியாதா? லாவோஸ் பௌத்தர்கள், வியட்னாம் பௌத்தர்கள், மியன்மார் பௌத்தர்கள் என்று இருக்கிறார்கள். பௌத்த சமய அனுட்டானங்களிலும், கலாசாரங்களிலும் இவர்களிடம் சிறிது மாற்றங்கள் இருக்கலாம்.

இளைஞர் விவகார மற்றும் திறமை அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இவ்வாறு கூறியுள்ளார். பிக்வல எனும் இடத்தில் பௌத்தபிக்கு ஒருவரால் எழுதப்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் அழகப்பெரும உரைநிகழ்த்தினார். பௌத்த கலாசாரம் தொடர்பான ஜீ.சி.ஈ உயர்தரத்துக்காக வண தெமுவாவத தேரரால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

சில சமயத் தலைவர்களும், பௌத்த பெரியோர்களும் வடக்கு கிழக்கில் காணப்படும் பௌத்த சின்னங்கள் மற்றும் புராதன பொருள்கள் தொடர்பாக வெளியிடும் கருத்துக்கள் குழப்பமாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் சிங்கள, பௌத்தர்கள் மாத்திரமே வாழ்ந்திருக்கிறார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். வடக்குக் கிழக்கில் தமிழ் பௌத்தர்கள் இருந்திருக்க முடியாதா? பௌத்த சமய அனுட்டானங்களிலும் கலாசார நடைமுறைகளிலும் சிறிய வித்தியாசம் காணப்பட்டாலும் லாவோஸ், மியன்மார், வியட்னாம் ஆகிய நாடுகளிலும் பௌத்தர்கள் இருக்கிறார்கள். அதேபோல் முன்னொரு காலத்தில் வடக்கு கிழக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்க முடியும் என்றார் அமைச்சர்.

ஏனைய சமயங்களை கண்டித்துக் கொண்டு எவரும் பௌத்த சமயத்தை பிரசாரம் செய்யலாகாது என்று கூறிய அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:-

கடந்த கால எமது ஆட்சியாளர்கள் ஏனைய சமூகங்களின் மொழிகளையோ, ஆங்கிலம் போன்ற உலக மொழிகளையோ மக்கள் பயில்வதற்கு வசதிசெய்து தரவில்லை. அவ்வாறு செய்வது தான் இன சௌஜன்யத்தையும், சமூக ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்கான உறுதியான வழியாகும். ஆனால் அவர்கள் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் தமது உயர்கல்விக்காக சென்று வந்தார்கள்.

கடந்த காலத்தில் வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது என்று கூறிய அமைச்சர் அழகப்பெரும, ஒருவர் தனது கலாசாரம், சமயம் பற்றியே பேசிக்கொண்டிருப்பதைக் கைவிட வேண்டிய காலம் வந்து விட்டது. அது இன ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க உதவமாட்டாது. இலங்கையர்கள் இலங்கையின் அடையாளத்தை, கலாசாரத்தை, பழக்கவழக்கங்களைப் பற்றியே பேச வேண்டும் என்றார் அமைச்சர்.

அல்பேர்ட் ஈன்ஸ்ரீன் மற்றும் கால் மார்க்ஸ் போன்றோர் கடந்த நூற்றாண்டில் உலகப் போக்கினை மாற்றி அமைத்தார்கள். அவர்கள் எவரும் தமது புதிய கருத்துக்களை புகுத்திய போது சமயம், கலாசாரம் மற்றும் தேசியம் பற்றியெல்லாம் வாதித்துக் கொண்டிருக்கவில்லை. எனவே நாம் அடுத்தவர்களின் கலைகள், சமயங்கள், மொழிகள் ஆகியவற்றை மதிப்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# தேசிய கீதம் தொடர்பான சர்ச்சை; அரசின் திட்டவட்ட நிலைப்பாடு என்ன?

நேற்று 19. 12. 2010 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

தேசிய கீதம் தொடர்பாக அரசமைப்பில் காணப்படும் அம்சங்களை அமுல் செய்வதற்கு அமைச்சரவை முடிவு செய்திருப்பதாக கடந்தவாரம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறினார்.

அவ்வாறே அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய கீதம் எவ்வாறு பாடப்பெறவேண்டும் என்பது பற்றியும் மக்கள் எவ்வாறு அதனை கௌரவிக்கவேண்டும் என்பது பற்றியும் விவாதித்தோம்.

1978 ஆம் ஆண்டு அர சமைப்பின் சிங்கள பகுதியில் 7ஆவது பகுதியில் '' இலங்கைக் குடியரசின் தேசிய கீதம் ஸ்ரீலங்கா மாதா'' வாக இருக்க வேண்டும், சொற்கள், இசை போன்றவை 3ஆவது அட்டவணையில் காணப்படுகின்றது என்றுள்ளது என்றார்.

தேசிய கீதத்தின் தமிழ் பிரதியைத் தொகுத்தவரான அமரர் எம்.நல்லதம்பியின் மாணவரான பேராசிரியர் கே.சிவத்தம்பி தேசிய கீதம்பற்றி விளக்கிய போது: தமிழ் கீதம் ''ஸ்ரீலங்கா தாயே, நம் ஸ்ரீலங்கா'' என்று ஆரம்பிக்கின்றது. 1950 ஆம் ஆண்டிலிருந்து இது அமுலில் இருக் கின்றது. இந்திய தேசிய கீதம் வங் காளத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் இருப்பு அதிலும் கூட அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ''திராவிட உட்கல நந்தா'' என்ற சொற்கள் இதை எடுத்துக் காட்டு கின்றன என்றார் அவர்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பின் தமிழ் மொழிபெயர்ப்பில் அந்த மொழியில் தேசிய கீதம் அமைந்திருப்பதற்கு வழிசெய்துள்ளது. ஆனந்த சமரக்கோனால் எழுதப்பெற்ற சிங்களமொழி தேசிய கீத மூலத்திலிருந்து புலவர்மணி எம். நல்லதம்பியால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அது ''ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா'' என ஆரம்பிக்கின்றது. இதில் முரண்பாடு இருக்குமானால் அரசமைப்பின் சிங்கள மொழி மூலமே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என அமைச்சரவை வட்டாரங்கள் கருதுகின்றன.

வடக்கு- கிழக்கிலுள்ள உயர் அதிகாரிகளிடம் இது பற்றி வினாவியபோது பல்வேறு விதமாக இது நடைமுறையில் இருப்பதாக அவர்கள் கூறினார்கள் பெயர் குறிப்பிட விரும்பாத அவர்கள் கூறுகையில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் தமிழர்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் தமிழ் மொழியில் பாடப்படுகிறது. சிங்களமொழியில் சிங்கள சமூகத்தினரின் வைபவங்களில் பாடப்பெறுகின்றது. இருதரப்பினரும் கலந்து கொள்ளும் தேசிய நிகழ்வுகளில் தேசிய கீதம் பாடப்பெறுமாயின் அதன் இசை மட்டுமே இசைக்கப்படுகின்றது என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு நிகழ்ச்சிகள் பற்றி ஓர் அதிகாரி விவரித்தார். தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பெற்றபோது இராணுவ அதிகாரிகள் அதனை நிறுத்தி சிங்கள மொழியிலான பதிவு செய்யப்பட்ட பாடலை போடும் படி உத்தரவிட்டார்கள் சிங்களத்திலான தேசிய கீதத்தின் பிரதிகளை இராணுவத்தினர் பாடசாலைகளில் விநியோகித்துள்ளனர். இனிமேல் சிங்களத்தில் மட்டுமே பாடப்பட வேண்டும் என அவர்கள் உத்தரவிட்டுள்ளனராம்.

தேசிய கீதத்தை ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பாடும் நாடுகள் இருக்கின்றன. தென்ஆபிரிக்காவில் விரிவாகப் பேசப்படுகின்ற ஐந்து மொழிகளில் பாடப்படுகின்றது. ஷோஸா சூலு, செசொதோ, ஆப்ரிக்கான்ஸ் மற்றும் ஆங்கில மொழியாகும் அவை. சுவிட்சர்லாந்தில் ஜேர்மன் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பாடப்பெறுகின்றது. ஆப்கானிஸ்தானில் பாஷ்தோ, தாரி ஆகிய மொழிகளில் பாடப்பெறுகின்றது. நியூஸிலாந்தில், கோட்டிபென்ட் நியூஸிலந் மற்றும் கோட்சேவ் தகுயீன் ஆகிய இரண்டும் பாடப் பெறுகின்றன.

ஐக்கியதேசிய கட்சி கடந்த வியாழனன்று விடுத்த அறிக்கையில் அரசாங்கம் தேசிய கீதம் தொடர்பான த்னது நிலைப்பாட்டை திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியது.

ஐக்கிய தேசியக்கட்சி கடந்த வியாழனன்று விடுத்த அறிக்கையில் அரசாங்கம் தேசிய கீதம் தொடர்பான தனது நிலைப்பாட்டை திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியது. அக்கட்சி விடுத்த அறிக்கையில் இலங்கைக்கு 1948இல் சுதந்திரம் கிடைத்ததின் பின்னர் ஆனந்த சமரக்கோன் நமோ நமோ மாதா என்ற தேசிய கீதத்தை இயற்றினார். பின்னர் 1950 ஆம் ஆண்டு அதனை சிறப்பாக தமிழில் மொழிபெயர்ப்பவருக்கு பரிசு வழங்குவதாக அரசு அறிவித்தது எம்.நல்லதம்பி அதில் வெற்றி பெற்றார் என்று தெரிவித்துள்ளார்.

**தொகுப்பு: கோகுலன்**

## நாளை

மார்கழி 06 21.12.2010

| | |
|---|---|
| திதி | : பூரணை |
| | பி.ப. 02.33 வரை |
| நட்சத்திரம் | : மிருகசீரிடம் |
| | பி.ப. 05.11 வரை |
| சுபநேரம் | :10.54-12.24 வரை |
| ராகுகாலம் | :03.24-04.54 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

எனவே பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப் பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை மாவட்ட நிலை ரீதியாக 'உதயன்' தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. ஒரு தொகுதி மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கலை**

ம.தர்ஷிகா-ஏ2பி, கு.அழகுவதனா-3பி, ந.ஜெயப்பிரியா-ஏபிசி, சி.துஷியந்தினி-ஏபிசி, அ.மேரி பற்றிமா ராணி-ஏ2சி, இ.இராஜி-ஏ2சி, ம.சாளினி-ஏ2சி, ப.சக்திப்பிரியா-ஏ2சி, கு.சிந்துஜா-ஏ2சி.

ம.மேரி சான்ஸனா-ஏசிஎஸ், அ.ஜெயரூபி-ஏசிஎஸ், யோ.தர்சினி-ஏசிஎஸ், ந.கஸ்தூரி-2பிசி, த.விஸிதா-2பிசி, யோ.துஷ்யந்தினி-2பிசி, செ.செல்வலீனா-2பிசி, ச.சுஜேந்தினி - பி2சி, சி.அனுஜா-பி2சி, சி.ஆன்றொமீலியா-பி2சி, சி.கிரிஜா- பிசிஎஸ்.

**வர்த்தகம்**

வி.ஜயந்தினி - 2பிசி, அ.பேர்ஜின் அனோசியா - பிசிஎஸ்.

**யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி**

**உயிரியல்**

விஜிதா வீரசிங்கம்-2ஏபி, கிருஷாந்தி பாலச்சந்திரன்-ஏ2சி.

**கலை**

வேலுப்பிள்ளை சதீஸ்கரன்-ஏ2சி, அல்போன்ஸ் சிங்கராஜா கிஷான்-ஏ2சி, பவித்திரா பாஸ்கரன்-ஏ2சி, நியோமி தியாகராஜா - ஏசிஎஸ், சிவபாலன் சிந்து ஜன்-2பிசி, முகமது காசிம் முகமது பௌசான்-பி2சி, நிருபா ஸ்ரீகாந்தன்-பி2சி, மாதுரி கேதீஸ்வரன்-பி2சி, பியூலா வில்பிறட்-பிசிஎஸ்.

**வர்த்தகம்**

துஷாரா கருணாகரன்-பிசிஎஸ்.

**புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்**

**கலை**

எல்- றேணுகா சாளினி-2ஏபி, ஆர்.டியூலா-2ஏபி, ஜீ.தனுசியா-2ஏசி, ஈ.ஏஞ்சலா-2ஏசி, ஆர். யூடித் றொம்மியா-ஏ2பி, ஏ.மேரி அனுசியா-ஏ2பி, எஸ்.மேரி வனிஸ்ரா -ஏ2சி, ஏ.நிறோசன்-ஏ2சி, ஏ.ஜெனார்த்தன்-ஏ2சி, ஏ.சர் மிளா-ஏபிசி.

ஈ.லக்ஷிலானி-ஏபிசி, எஸ். மேரி சிந்துஜா-2பிசி, இ.ஏஞ்சலின் நிலோஜினி-பி2சி, எம்.கனிந்தினி-பி2சி, எஸ்.ஜெனா வியல் சர்மிலி-பி2சி, ஏ.மரினா அனோஜா-பி2சி, ஏ.ஜி.மரிய சிலோஜினி-பி2சி, ரி.புஸ்பமாலினி-3சி, எஸ்.டிஸ்மன்-3சி, என்.கில்டா-3சி.

**இடைக்காடு மகா வித்தியாலயம்**

**கணிதம்**

சி.தவநீஸ்-2ஏபி, சி.கஸ்தூரி-3சி, வ.நிருஷா-பிசிஎஸ், த.சாரூபன்-2சிஎஸ், து.சுமைதினி-சி2எஸ்.

**கலை**

க.ஜனா-2ஏபி, க.காயத்திரி-ஏ2பி, இ.பத்மரதி-ஏ2பி, கு.நிரோசா-2ஏசி, து.சாருகா-ஏபிசி.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

**கணிதம்**

ஸ்ரீகாந்தன் சுபாங்கன்-2ஏபி, பத்மநாதன் கீர்த்தனன்-ஏபிசி, சிவா உதயராஜ்-சி2எஸ்.

**உயிரியல்**

எலியஸ் டினேஸ்-2பிசி, சிவபாதம் டிசாந்-3சி.

**வர்த்தகம்**

கிருஷ்ணசாமி துளசிதரன்-ஏபிசி, ஏகாம்பரமூர்த்தி தனேஷ்-2பிசி, ரங்கநாதன் கோகுலன்-2பிசி, ஸ்ரீசந்தானராஜா கற்பகராஜ்-பி2சி.

**கலை**

மனோகரன் நிஷாந்தன்-2ஏபி, ஜெயசுதாசன் ஜோன்சன்-2ஏசி, விக்ரர் அன்ரனி-2ஏசி,வெள்ளிமயில் வினோத்-ஏ2பி, சுந்தரலிங்கம் யாதவன்- ஏபிசி, பாலசிங்கம் பாஸ்கரன்-ஏ2சி, மரியதாஸ் மதிசன்-ஏ2சி, சண்முகராஜா மஜித்-ஏ2சி, விஸ்வலிங்கம் பகித்தன்-2பிசி, ரவீந்திரன் இந்துதாஸ்-2பிசி, முருகானந்தன் வினோத் -2பிசி, குணசேகரன் தனுசன்-2பிசி, கனிஸ்ரநாதன் கவிராஜ்-பி2சி.


## விற்பனைக்கு

CHINA விலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட School Bags, File Bags, Travelling Bags, Ladies Bags மொத்த விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 077 4724570

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத்தெரு, கிருஷ்கேசன் பேக்கரிக்கு (சித்தப்பா பேக்கரி) அருகில் 42-23 விண்டர் வரை கட்டப்பட்ட கட்டடத்துடன் கட்டுக்கிணறுடன் கூடிய 1 1/3 பரப்பளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 1605802, 077 1880406




## துயர் பகிர்கின்றோம்

யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தி யாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி தயாபரராணி ஆனந்தராசா அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி மாணிக்கம் பூரணம்**

17.12.2010 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(107643) யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

நான்காம் ஆண்டு

**மலர்வு**
**14.05.1956**

**உதிர்வு**
**02.01.2006**



### திருமதி தர்மராசா புஸ்பலீலா

திதி: 20.12.2010

அடுப்பு இருப்பது போல்
அடுத்து அடுத்து மூன்று ஆண் குழந்தைகள் பெற்றெடுத்தாய்
அத்தனையும் வீணாகி ஆதரிக்க யாருமின்றி சிதைந்து
சின்னாபின்னமாகினோம் அம்மா!
வஞ்சமில்லா உன் வண்ணமுகம் காணாமல் எம் கவலை தீரா
உம் மடிசாயவும் காத்திருந்த காலமெல்லாம்
ஏமாற்றம் கடந்து போய்விட்டதம்மா
நான்கு ஆண்டு சென்றும் நான்கு நாள்போல் இருக்குதம்மா
நித்தமும் நீ உரைத்த பக்குவப் பாடல் அத்தனையும்
எம் மனதில் நிறைந்திருக்குதம்மா நித்தமும் வாழ்வோம்
உம் நினைவில் என்றும் எம் மனதில் நிலையான தெய்வம்
அம்மா! அம்மா!!........

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூன்றாம் ஆண்டு



**மலர்வு**
**14.06.1916**

**உதிர்வு**
**18.12.2007**

### திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை

அம்மா அம்மா என்று அழைக்க
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்பு மொழிபேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
மூன்றாண்டு சென்றதம்மா ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் மீண்டும்
இப் பூவுலகில் பிறப்பீர்கள்
எம் அம்மாவாய் மீளாத் துயிலில் நீங்களும்
மீளாத் துயரில் நாங்களும்...

சங்குவேலி வடக்கு, மானிப்பாய். ...பிள்ளைகள், ...பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு இராசேந்திரம்



2ஆம் குறுக்குத்தெரு, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராசேந்திரம் (ஓய்வுபெற்ற ஊழியர், மின்சாரசபை) நேற்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் மார்க்கண்டு மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கோணர் - முத்தம்மா தம்பதியரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சசிதரன், கலைவாணி, சத்தியவாணி, சுதர்சன், டயானவாணி, இந்துவாணி, தாரகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நா.ரவிச்சந்திரன், ச.கலைமகள் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: புவனேந்திரன் (பவுண்),
துரைரத்தினம் (வேரி), 0774409601
அமிர்தநாதன் (மலர்),
சசிதரன் (சசி), சுதர்சன் 0779994618

*ஐயனார் வீதி,*
*சண்டிலிப்பாய்.* (107644)

### திருமதி நடராசா வேதநாயகி



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகி நடராசா நேற்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொலிஸ் வேலாயுதபிள்ளை மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும் ரமேஸ்(ஜேர்மனி), பிரகாஸ், தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் தயானந்தன், பரமேஸ்வரன் (ஓய்வூதியர், இலங்கை வங்கி), சத்தியபாமா(இத்தாலி), தளையசிங்கம், மங்களேஸ்வரி, பத்மநாதன்(மேக்கன்டைல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி, ஜெயகாந்தன் (யாழ்.பொது நூலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மகேஸ்வரி(கனடா), மகேஸ்வரி, லிங்கமூர்த்தி, காலஞ்சென்ற கலாமதி, செல்வநாதன் ஆகியோரின் மைத்துனியும் லவ்ரா, லியோனா, மிதுசன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் தயாளினி, தயானி, தயானா, கார்த்திகா, ஜீவிதா, பாமதி, பிரியந்தி ஆகியோரின் அத்தையும் செந்தூரன், மயூரன், பிரதீபன், பிரேமாவதி, பிரசாந்தன், மிதுசன் ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானதத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ரமேஸ்கிரி',*
*ஆனைக்கோட்டை வீதி,* (107645)
*கொக்குவில் மேற்கு, 0214916827*

தகவல்: ஜெயகாந்தன்,
தர்சினி.

### திருமதி வைரவசுந்தரம் செல்லம்மா



மல்லாகம், நீதிமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைரவசுந்தரம் செல்லம்மா கடந்த (18.12.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி திருஞானசம்பந்தர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைரவசுந்தரத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, நடராஜா, செல்லத்துரை மற்றும் நாகம்மாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சோதிமணியம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுசீலா, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கு.சாந்தமோகன் (பிரதேச செயலகம், தெல்லிப்பழை), ர.ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் சா.சத்ஜன், ர.சேயோன், ர.சேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (20.12.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.* (107647)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு வித்தகபுரம் பகுதியில் விறகுக்காக மரங்களை வெட்டும் பொலிஸார்

## மக்கள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள காணிகளில் பொலிஸார் விறகுக்காக மரங்களை வெட்டிச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

இத்தகைய ஒரு சம்பவம் நேற்று வலி.வடக்கு வித்தகபுரத்தில் இடம்பெற்றது.

கடந்த மாதம் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:


வித்தகபுரம் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றனர்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்த குறித்த காணிகளில் இப்பில் இப்பில், மஞ்ச வண்ணா போன்ற மரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன.

இந்த மரங்களை காணி உரிமையாளர்கள் தமது காணிகளில் வெட்டிவைத்துள்ள நிலையில் இவற்றைப் பொலிஸார் வாகனங்களைக் கொண்டு வந்து ஏற்றிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர். நேற்று மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த பொலிஸார் மரங்களை ஏற்ற முற்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதனைத் தடுக்க முற்பட்ட மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.மக்கள் தமது மரங்களை எடுத்துச் செல்ல வேண்டாம் என விடுத்த வேண்டுதல் புறந்தள்ளப்பட்டு மரங்களை பொலிஸார் ஏற்றிச் சென்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம)

# கைதடியில் இடம்பெறும் திருட்டுகள்; கட்டுப்படுத்த விழிப்புக்குழு தெரிவு



யாழ்ப்பாணம்,டிசெ.20

கைதடிப்பகுதியில் இடம்பெற்றுவரும் திருட்டுச்சம்பவங்களை பூரணமாகக் கட்டுப்படுத்துவதன் நோக்கில் அந்தப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றும் தமது அங்கத்தவர்களைக் கொண்டு விழிப்புக்குழுக்களை அமைத்து காவல் கடமையில் ஈடுபடுத்தவுள்ளது.

அத்துடன் பாதுகாப்புப் படையினர் ரோந்து சென்று மேற்படி குழுக்களுடன் இணைந்து திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு நல்குவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் திருட்டுச்சம்பவங்களை ஒழிப்பது தொடர்பாக கைதடி இணுங்கித் தோட்ட கந்தசாமி ஆலய முன்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேற் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கைதடி மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் க.திருச்செந்தூர்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஐ.பி.சிறிபால, 523 ஆவது படையணியைச் சேர்ந்த மேஜர்களான றுவான்புர, ரணதுங்க மற்றும் கைதடிப் பிரதேச கிராம சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், சமயப் பெரியோர்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் தீர்மானத்தை சகலரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதுடன் விழிப்புக்குழுக்களை உடனடியாக ஆரம்பிப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (201-228)

## புதியன புகுதல்...





சேவை விஸ்தரிப்பு- 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் தையல் இயந்திரங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பொருள்கள் என்பன அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பை நிறைவு செய்த யுவதிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தையல் இயந்திரத்தினையும், சான்றிதழையும் வழங்குகிறார். சாவகச்சேரிப் பிரதேச ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான உபகரணங்கள் பொதுச்சுகாதார பரிசோதகர் க.கர்ணனிடம் கையளிக்கப்படுகின்றன. (204-207)

## ஈச்சமோட்டை வீதிக்கு புதிய மின் விளக்குகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.ஈச்சமோட்டை பிரதான வீதிக்கு புதிதாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த வீதிக்கு ஏற்கனவே பொருத்தப்பட்ட மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதால் மீண்டும் புதிய மின்விளக்குகள்பொருத்தப்பட்டுள்ளன.

அதனைவிட கொழும்புத்துறை பிரதான வீதியின் மின்சார விளக்குகள் சில பழுதடைந்து காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-26)

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் படிவத்தினைப் பூர்த்தி செய்யவும்

தென்மராட்சி,டிசெ.20

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை வலய தாபன பகுதியுடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து வழங்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (204-207)

# '49 சிசி' வகைக்குட்பட்ட மோ.சைக்கிள்களை பதிவு செய்வதில் நெருக்கடி நிலைமை

வலி.வடக்கு,டிசெ.20

யாழ்.குடாநாட்டில் 49 சிசி வகைக்குட்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யுமாறு மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து சிசி 49 வகை மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் பலத்த சிரமங்களுக்கும் ஆளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி வாகனங்களைப் பதிவு செய்வதற்கான ஆவணங்களை விற்பனை நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியாது இவர்கள் திண்டாடுவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ்.செயலக மோட்டார் வாகனப் பிரிவின் குறிப்பிட்ட வாகனங்களைப் பதிவு செய்ய உரிய வாகனம் கொள்வனவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையால் குறித்த மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-86)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோரை மேலும் ஊக்கத்துடன் வழிநடத்துவது பெற்றோர்களின் கடமை

## நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.20

''மாணவர்களை, புலமைப் பரிசில் பரீட்சை சித்திபெற்றதுடன் நிற்க விடாது, அவர்களை ஊக்கத்துடன் பெற்றோர்கள் தொடர்ந்தும் வழிநடத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா.

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், கல்வியையும் கற்றுத் தருகிறது பாடசாலை. நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு பாடசாலையே அத்திவாரமிடுகிறது. பாடசாலைக் கல்வியைச் சிறந்த முறையில் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்ததுடன் மட்டும் நில்லாது அதனுடன்இடைநிலைக் கல்வியையும் சிறந்த முறையில் தொடர்ந்தால்தான் வாழ்வில் வெற்றி காணலாம்.

மேலும் மாணவர்களின் கல்வியின் வீழ்ச்சி முக்கிய காரணம், கைத்தொலைபேசி பாவனை என்றுதான்கூற வேண்டும். மாணவர்களின் கல்வியில் பெற்றோரே அதிக கவனம் எடுக்க வேண்டும்.

அவர்களின் எதிர்காலம் பற்றிய நன்மை, தீமை தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக பெண்பிள்ளைகளின் பருவமாற்றங்கள் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் வெளிப்படையாகக் கலந்து பேச வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் நாட்டில் மும்மொழியும் அவசியமாகிறது. எனவே நல்ல [illegible] யில் அவற்றைத் தேர்ந்[illegible]துக் கற்க வேண்டும். சிறந்த ஆளுமையையும் திறமையையும் வளர்த்து வெற்றியைக் காண பாடசாலைவாழ்வைப் பயன்படுத்த வேண்டும் - என்றார் அவர்.

பாடசாலை அதிபர் திருமதி கனகரஞ்சினி துரைசிங்கம் உரையாற்றுகையில்: தனியார் கல்வி நிலையங் களில் வைக்கும் நம்பிக்கையையும் காட்டும் ஆர்வத்தினையும் பாடசாலை மீது காட்ட வேண்டும்.

பாடசாலைக் கல்வியை மீள் பரிசீலனை செய்யாமை போன்ற தவறுகள்தான் சித்தி பெறாமைக்கு காரணமாக அமைகிறது.

ரியூசன் கலாசாரம் மாற வேண்டும். பாடசாலையில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

மேலும் நகர்ப்புறப் பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தால் தான் சிறந்த கல்வியைப் பெறுவர் என்ற எண்ணமும் மாற வேண்டும்.

எங்கு படித்தால் தான் [illegible] கற்பிக்கப்படுகிறது. அதை கிரகிக்கும் மாணவர் களைப் பொறுத்தே கல்வியின் ஆளுமை அமைகிறது.

எங்கள் பாடசாலையில் 172 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்களில் 23 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்குள் சித்தியடைந்தார்கள். ஏனைய மாணவர்கள் அனைவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று கல்வித் திணைக்களம் எதிர்பார்த்த அடைவை அடைந்துள்ளனர்.

இதில் புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 6 ஆம் இடத்தை துளசிகா மூர்த்தி பெற்றுள்ளார். தேனுகா செவஸ்ரியர் குரூஸ்- 173, சுவேதிகா ஜெயத்தன் - 170 ஆகியோர் பாடசாலையில் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாகாணக் கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்வரன், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (201-311)

## நடமாடும் பற்சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்ட வாகனம் கொழும்புக்குச் சென்றது

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நடமாடும் பற்சிகிச்சைக்கென கொண்டுவரப்பட்ட வாகனம் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

குடாநாட்டிலுள்ள கிராமப்புற மக்களின் வசதி கருதி இந்த நடமாடும் வாகனத்தில் வைத்து பற்சிகிச்சையை மேற்கொள்வதற்கே மேற்படி வாகனம் கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டது.

குடாநாட்டின் வீதிகளில் பயணிக்க ஏற்றவகையில் இந்த வாகனம் அமையாததால் அந்த வாகனத்தை சீர் செய்வதற்கு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (204-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



சங்கானை இலுப்பைத் தாழ்வு வெல்வில்
ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருவும்
சர்வதேச இந்துமத குருபீடத்தின்
யாழ்.மாவட்டத் தலைவரும் எமது
பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
நி.ஜெகானந்தசர்மாவின் தந்தையுமாகிய
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவாகம கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ
**சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்**

அவர்கள் 15.12.2010 அன்று புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் எமது பாடசாலையில் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையில் சகல துறைகளிலும் பங்குகொண்டு சிறந்த நற்சேவையாற்றிக் கற்பித்தலில் சாதனை படைத்த ஆசிரியர் உயர்திரு .நி.ஜெகானந்தசர்மா அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது தந்தையாரின் புனித ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், உப அதிபர், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்.

யா/சித்தன்கேணி
ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
சித்தன்கேணி.

## கண்ணீர் அஞ்சலி



சங்கானை இலுப்பைத் தாழ்வு வெல்வில்
ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன
குருவும் சர்வதேச இந்துமத குருபீடத்தின்
யாழ்.மாவட்டத் தலைவருமாகிய
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவாகம கலாநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ
**சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்**

அவர்கள் 15.12.2010 அன்று புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது புனித ஆத்மா சாந்தியடைப் பிரர்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: திரு.சிவலிங்கம் தனேஸ்வரலிங்கம்,
சவுதி அரேபியா ஜி.எச்.ரான்ஸ்போட் லிமிட்டெட்.
திருமதி தனேஸ்வரலிங்கம் யோகராணி,
தேவாலய வீதி சங்கானை.
செல்வி ஜெயராணி நாகலிங்கம் ,
அதிபர், யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர் பொன்னம்பலம்
கேதீஸ்வரன் அவர்களின்
அன்புச் சகோதரன்
**பொன்னம்பலம் சிவானந்தன்**
15.12.2010 அன்று சுவிஸில்
காலமான செய்தியறிந்து
துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம், வவுனியா. பாடசாலைச் சமூகம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**தில்லையம்பலம் விஜேந்திரன்**
(வினோதன்)



மலர்வு
06.03.1987

உதிர்வு
30.12.2009

திதி: சதுர்த்தசி (20.12.2010)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் மனசு
ஏக்கத்துடன் கலங்கவிட்டு
ஏன் மகனே நீர் சென்றீர்
பாவிகள் நாம் தவிக்கிறோம்
எமை விட்டு சென்றாயோ?
விண்ணோடு நீர் சென்றீர்
வேதனையில் தினம் வாடுகின்றோம்.



குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: அம்பன் கிழக்கு, குடத்தனை.
தற்காலிக முகவரி: மாளிகைத்திடல், குடத்தனை.

# வடக்கு- கிழக்கில் நன்கொடை நிதியில் கட்டப்படும் சகல புதிய கட்டடங்களுக்கும் முற்றுப்புள்ளி

### அமைச்சர் பசில் ராஜபக்ஷ நடவடிக்கை

கொழும்பு,டிசெ.20

நன்கொடை வழங்கல் கடன் ஆதரவில் அல்லது வேறு நிதி வழங்கல் மூலமாக வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல விதமான புதிய கட்டட நிர்மாண வேலைகள் அனைத்துமே டிசெம்பர் மாதம் 9ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு விட்டன.

இந்த அபிவிருத்தி வேலைகளின் பெரும் பகுதியை மேற்பார்வை செய்து வரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார் என கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது உள்ள கட்டடங்களைத் திருத்தி அமைப்பதற்கும் மீளக்கட்டி அமைப்பதற்கும் மட்டுமே முன் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

நெல் சேமிப்பு மற்றும் வேறு பயிர்கள் சேமிப்பதற்கான கட்டட அமைப்புகளுக்கு மட்டுமே இதில் விதிவிலக்கு அளிக்கப்படுவதாக தெரிகின்றது.

அமைச்சரின் இந்தத் திடீர் நடவடிக்கைக்குக் காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. அமைச்சரின் இந்த உத்தரவு வடக்கு, கிழக்கில் உள்ள சம்பந்தப்பட்ட எல்லா அமைச்சு பிரிவுகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ளக கட்டமைப்பு விஸ்தரிப்பு மற்றும் கட்டட அமைப்புகளுக்கென பெருமளவு நிதி ஆதாரங்களை வழங்கிவரும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவர் அமைப்பு ஆகியவற்றின் உள்ளூர் அலுவலகங்களுக்கும் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட் டுள்ளது. அமைச்சரின் இந்த உத்தரவின் காரணமாக 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் இந்திய திட்டமும் பாதிக்கப்படுமா என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் ஆயிரம் வீடுகளை அமைப் பதற்குத் தேவையான காணியை வழங்குவதற்கு இடம் ஒதுக் கப்பட்டு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (ப)

## வளர்மதி சனசமூக நிலைய ஏற்பாட்டில் திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிசெ.20

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் ஆண்டுதோறும் திருவெம்பா வழிபாட்டு நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில் ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க் கிழமை அதிகாலை 5.30 மணிக்கு திருவெம்பா பூசைநிகழ்வுகளை நடத்தவுள்ளது.

உரும்பிராய் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் விசேட பிரார்த்தனை நிகழ்வு அன்றையதினம் காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மேற்படி ஆலய குருமார்களால் அம்பாள் திருவுருவப் படத்துக்கு பூசையும் கூட்டுப் பிரார்த்தனை மற்றும் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறும். (201)

## இன்னிசை விழா

வடமராட்சி, டிசெ.20

பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் கிறிஸ்து பிறப்பு இன்னிசை விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கட்டவேலி சேகர முகாமைக்குரு வண.என். அருள்நாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் 'அன்பின் வடிவில்' என்னும் தொனிப் பொருளில் இலங்கை திருச்சபையின் யாழ். பிராந்திய குரு முதல்வர் வண பிதா எஸ். பி.நேசகுமார் உரை நிகழ்த்த வுள்ளார். (204)

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

யாழ்ப்பாணம், டிசெ.20

இணுவில்சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் சித்திரத் தேர் வெள்ளோட்ட வீழாதிர்வரும் முதலாம் திகதி சனிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடை பெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல்11மணிக்கு கணபதி பூசை, கலச [illegible] (204)


## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், மற்றும் பொதிகள் சேவை



**Arrul Global Express**
International Courier & Cargo Service

24 மணி, மற்றும் 72 மணிநேரத்தில் குறித்த முகவரியில் பொருட்கள் ஒப்படைக்கப்படும்

நத்தார் புதுவருட விசேட சலுகை

மிகக்குறைந்த கட்டணங்கள்
அதிவிரைவு சேவை Speed Courier Service
✓ லண்டன் 800/=
✓ கனடா, அமெரிக்கா, நோர்வே, சுவிஸ் , டென்மார்க் அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஜேர்மனி இத்தாலி 950/=

சாதாரண சேவை (Normal Service)
✓ லண்டன், சுவிஸ் 350/=
✓ கனடா 450/=

Arrul Global Express
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
0212226113

Arrul Global Express
E-mail : arrulexpress@gmail.com
Arrul Global Express

## ஆசிரியைகள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல
பாடசாலைக்கு ஆங்கில அறிவுடைய
ஆசிரியைகள் தேவை.
அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய்,
சுன்னாகம், யாழ்ப்பாணம் போன்ற
இடங்களுக்கு அண்மையில்
உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நேர்முகப்பரீட்சை:-
நாளை (21.12.2010) செவ்வாய்க்கிழமை
காலை 9 மணிக்கு நடைபெறும்.

இல.140, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 5796




## நித்தியானந்தக் குருக்களின் மறைவு அந்தணப் பெருமக்களுக்கு பேரிழப்பு



எந்தவித பிரதிபலன்களையும் எதிர்பாராது
அந்தணப் பெருமக்களுடைய பூர்வ, அபரக்
கிரியைகளை நடத்தி வைத்து சஹாயம்
செய்து கொண்டிருந்த
சிவப்பிரம்ம ஸ்ரீ சி.நித்தியானந்த
குருக்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும்.
அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் சிவானந்தன்**
(நந்தன்)



சிறுப்பிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவானந்தன் அவர்கள் 15.12.2010 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பொன்னம்பலம்- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், மஞ்சுளாதேவி, தவமதி, கேதீஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜ்மோகனின் அன்பு மைத்துனரும், ஹம்சத்வனன், ஹரிகரன் ஆகியோரின் ஆசை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2010) செவ்வாய்க்கிழமை சுவிட்ஸர்லாந்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.கேதீஸ்வரன்
(ஆசிரியர்-சகோதரன்)
வ/ நெடுங்கேணி ம.வி)

சிறுப்பிட்டி கிழக்கு,
சிறுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புமாறு பாடசாலை அதிபர் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.20

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பாடசாலை அதிபர் நாகேந்திர ராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் இந்தப் பாடசாலையிலிருந்து நான்கு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இந்த வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமலேயே உள்ளன. இடமாற்றலாகிச் சென்ற ஆசிரியர்கள் தமது சிறப்பான கற்றல் நடவடிக்கைகள் மூலம் மாணவர்களை உயர் வகுப்புகளுக்கு இட்டுச் சென்றனர். ஆனால் தற்போது இவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு நிலை தோன்றியுள்ளது.

ஆகவே வளர்ந்து வரும் இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# பாம்பினால் கடியுண்ட மூதாட்டி வைத்தியசாலையில் அனுமதி

பளை.டிசெ. 20

மீளக்குடியமர்வதற்காகக் காணியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது மூதாட்டி ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை வண்ணான்கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி (வயது 65) என்ற மூதாட்டியே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். அண்மைக் காலங்களில் பளைப் பிரதேசத்தில் பாம்புக்கடிக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-207)

# ஸ்கந்தபுரம் சந்தைக்குரிய இடத்தை தெரிவு செய்யுமாறு கோரிக்கை

கிளிநொச்சி.டிசெ, 20

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொதுச் சந்தைக்கென ஒரு சரியான இடத்தைத் தெரிவு செய்து நிரந்தர கட்டடத் தொகுதிகளை அமைத்துத் தருமாறு பொதுச் சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் பொதுச்சந்தை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம் பெயர்வின் போது பொதுச் சந்தை அழிவடைந்ததையடுத்து மீளவும் அவ்விடத்தில் பொதுச் சந்தை இயங்கி வருகிறது.

இந்த நிலையில் இந்த தனியார் காணியில் நிரந்தரக்கட்டடம் எதனையும் அமைக்க முடியாது எனவும் வேறு இடத்துக்கு சந்தையினை மாற்ற வேண்டியுள்ளதாகவும் தமக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்ரென பொதுச்சந்தை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சந்தைக் கட்டடத் தொகுதியில் 35 இற்கும் அதிகமான வர்த்தகர்கள் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க.11)




நல்லதோர் ஆரம்பம்:- தேசிய மரநடுகை நாளில் அளம்பில் றோ.க.வித்தியாலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சத்திய சீலன் மரநடுகை செய்வதை பாடசாலை அதிபர் நேவிற் ஜீவராசா மற்றும் மாணவர்கள் அவதானிக் கின்றனர். (555)

# நிதிக் கொடுப்பனவுகள்

முல்லைத்தீவு, டிசெ.20

முல்லைத்தீவில் முகாமுக்கு வெளியே தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கான மீதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கின்றன.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா நிதியில் முதற்கட்டமாக ஐந்தா யிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது மீதி 20 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முதலில் ஒட்டுசுட்டானில் இது வழங்கப்படவுள்ளது. (க-500)




# கண்டாவளையில் மாற்று வலுவுடையோருக்கு உபகரணங்களும் உரிய பயிற்சிகளும்

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் யுத்தத்தினாலும் இயற்கையினாலும் பாதிக்கப்பட்ட மாற்று வலுவுடையோருக்கு சரீர புனர்வாழ்வு நிறுவனத்தினால் உபகரணங்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்துக்குட்பட்ட புளியம்பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, நடைபெற்ற சரீர புனர்வாழ்வுத் திட்டத்தில் காயப்பட்டவர்களுக்கு அசையும் சமநிலையினைப் பேணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் அங்கவீனமடைந்தால் முன்னேற்றுவதற்கான செயற்பாடுகள், மாற்றுவலுவுடையோரின் நடமாட்டத்தினை ஊக்குவிக்கும் நடமாட்ட உபகரணங்கள் வழங்குதல் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

சரீர புனர்வாழ்வு நிறுவனத்தின் இந்த நடமாடும் சேவையின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுவலுவுடையோர் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர். (க-11)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிர்களுக்கு கட்டாக்காலிகளால் பெரும் அழிவு

முல்லைத்தீவு. டிசெ.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் இந்தக் கால்நடைகள் பட்டிகளில் அடைக்கப்படாது அலைந்து திரிகின்றன. இதனால் இவை பயிர் நிலங்களுக்குள் புகுந்து பெரும் நாசத்தை விளைவித்து வருகின்றன. ஆனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதனையும் கமக்காரர் அமைப்புக்களோ அல்லது கமநலச் சேவைத் திணைக்களமோ மேற்கொள்ளவில்லை.

மீள்குடியேறிய மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பெரும் போக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ளனர். காட்டு யானைகளால் ஒரு புறம் அழிவுகள் ஏற்படுகின்றன. மறுபுறத்தில் கட்டாக்காலிகளான கால்நடைகளால் இத்தகைய அழிவுகள் நிகழ்கின்றன. ஆனால் எவருமே இதுபற்றிக் கவனத்தில் கொள்ளவில்லையெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கமநலச் சேவை நிலையம் விவசாயத்துக்கான அச்சாணியாகத் திகழ்கின்ற போதிலும் பாராமுகமாக இருப்பதாகவும், கமக்காரர் அமைப்புக்களும் கண்ணை மூடிய நிலையில் உள்ளதாகவும் கூறும் இவர்கள் அரச அதிபர் தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# அடிப்படை வசதிகள் இல்லாது அவதியுறும் வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை

முள்ளியவளை, டிசெ.20

மீளக்குடியமர்வின் பின்னர் சொந்த இடத்தில் இயங்கி வரும் முல்லைத்தீவு வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை எந்த வித அடிப்படை வசதிகளுமில்லாது பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன்பது வரை கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் இன்னல்களுக்கு மத்தியிலேயே இப்பாடசாலையில் கல்வி கற்று வருவதாகத் தெரியவருகின்றது.

மலசலகூட வசதிகளோ, கட்டட வசதிகளோ இல்லாமல் மாணவர்கள் அவதிப்படுவதாகவும் ஒரேயொரு பழைய கட்டடத்திலேயே அனைத்து வகுப் புக்களும் இயங்கவேண்டியுள்ளதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை அலுவலகம் இயங்குவதற்கென தனியான அறைகூட இல்லையெனவும் இதனால் அலுவலகப் பொருள்கள் அயல் வீடொன்றில் வைத்துப் பராமரிக்கப்படுவதாகவும் பெற்றார் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் வெளிமாவட்டத்திலிருந்து வருகை தந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எந்தவிதமான தங்குமிட வசதிகள் இங்கு இல்லையெனவும் இத்தகைய அடிப்படை வசதிகள் இல்லாது இயங்கும் பாடசாலையை கல்வி அதிகாரிகளும் கவனத்தில் எடுத்து உரிய வசதிகளைச் செய்து கொடுக்க முயற்சிகள் எடுக்கவில்லையெனவும் இப்பாடசாலைச் சமூகத்தினர் கவலையோடு தெரிவிக்கின்றனர். (க-555)

# கிளிநொச்சியில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வுகள்

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம், ஊரியான் அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபை ஆகியவற்றிலேயே ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. கடந்த வாரம் முருகானந்த மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் ஒளிவிழா நிகழ்வு நடைபெற்றது. அதேபோன்று ஊரியான் பிரதேசத்திலுள்ள அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபை முன்பள்ளியின் ஒளிவிழா நிகழ்வு ஊரியான் பிரதேச பொது மண்டபத்தில் முன்பள்ளி ஆசிரியை சேந்தன் லீலாவதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-11)

# வட்டக்கச்சி மாணவிக்கு முதலிடம்

அண்மையில் வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவி விஞ்ஞானப் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

புவனேஸ்வரன் ஜோதிகா என்ற இந்த மாணவி 2ஏபி எனும் பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டதோடு விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பிடித்து தான் கற்ற பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இந்தப் பாடசாலையில் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் ஏனைய பிரிவுகளிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (க-405)

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள்

(தொடர்ச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயம்

**உயிரியல் பிரிவு**

புவனேஸ்வரன் ஜோதிகா -2ஏபி (01), தனராஜா தலைக்ஷி - பி2சி (11).

**கணிதப்பிரிவு**

முருகவேல் தர்சிகா - பிசிஎஸ் (13).

**[illegible]**

பாலசுப்பிரமணியம் சுஜீபா 2ஏபி (15), அருந்தவநாதன் சுகீதா ஏ2பி (21).

**2பிசி பெற்றவர்கள்**

தேவராசா கௌசிகன், தேவராசா செந்தூரன், ஜெயரஞ்சன் டயானி, ஞானசுந்தரன் பிரசாந்தினி, சிவலிங்கம் சிவதர்சன்.

புனித திரேசா பெண்கள் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

லோகநாதன் நேருஜா - 3பி (04), அமிர்தலிங்கம் சாரங்கி-3சி (20), நாகராஜா திவாரகா-சி2எஸ் (25).

**வர்த்தகப் பிரிவு**

திருச்செந்தூர் நாதன் திவ்வியா - எபிசி(17), அ.விஜய கௌரி - 2பிசி (27).

**கலைப்பிரிவு**

நி.சரண்யா - ஏ2பி (11), யோ.சர்மிளா - 3பி (33).

(தொடரும்) (க-450-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 580

திகதி 2010/12/18

சுப்பர் இலக்கம் 23

வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 30 37 48

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 34,807,480.00 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 13 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 327 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 661 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 16,653 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீகிதம் | 9,668 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 241,927 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 38,801 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 11,631,580.00
சுப்பர் பரிசு சேர்க்க ஜிப் வைப்புடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 34,953,773.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


# கரைச்சிப் பிரதேச சபை அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாகக் கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினைத் திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதிபெற்றவர்கள் அனுமதிபெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்திக் கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

### காணி உபபிரிவிடுகை

ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு காணித் துண்டினைக் கொள்வனவு செய்ய நேரிடும் சந்தர்ப்பத்தில் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நில அளவைப் படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர் மாற்ற நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு காணி பிரிக்கப்படும்போது நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகக் காணி பிரிவிடப்படுதல் வேண்டும். இவ்வாறு பிரிக்கப்படும் ஒவ்வொரு துண்டுகளும் 150 சதுர மீற்றர் (அண்ணளவாக குளி 10.7) இற்குக் குறையாது பிரிக்கப்படல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

### சூழல் பாதுகாப்பு உரிமம்

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2008ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி 1533/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'இ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளைப் பிரதேச எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை/ வியாபாரத்தினை நடத்துபவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி இவ் உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். இவ் உரிமம் பெறாது மேற்படி தொழில்கள்/ வியாபாரம் நடத்த அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

### வியாபார உரிமம் - 2011

சகல வியாபார/ தொழில் நிலையங்களும் தங்கள் வியாபாரத்துக்கான தொழில் மீதான வரி, வியாபார உரிமம், வியாபார வரி என்பன கோரும் விண்ணப்பப் படிவத்தினைப் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி உரிமத்தினை/ பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். 31.03.2011ஆம் திகதிக்கு முன் உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

### வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம் - 2011

இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்டோர் தமது வளர்ப்பு நாய்களுக்கும் துவிச்சக்கரவண்டிகளுக்கும் 2011ஆம் ஆண்டுக்குரிய உரிமத்தை 31.03.2011ஆம் திகதிக்கு முன்னர் இவ் அலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தரப்படுகின்றது.

கரைச்சிப்பிரதேச சபை,
கிளிநொச்சி.

திருமதி சோ. அருள்சோதி,
செயலாளர்.

(சி/573242)

# மனித உரிமைகள் தினத்தையொட்டி மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரை, கவிதை, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் பின்வருமாறு:

### கட்டுரைப்போட்டி

கீழ்ப் பிரிவு:

க.அபர்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெ.கிருஸாந்தி (சென் யோசப் மகா வித்தியாலயம்), ந.டிலக்ஸன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ச.கேமப்பிரியா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), யே.சிபோறினி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க), தே.தனுசியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.).

மத்திய பிரிவு:

சி. பிரசன்னா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), ப.சயந்தினி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), ஜெ. நிலுஸா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க), அ.சிந்துஜா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), அ.வினுஜன் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), சா. சதீஸ்குமார் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.).

மேற்பிரிவு:

ந.துஸ்யந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

### கவிதைப்போட்டி

கீழ்ப்பிரிவு:

யோ.சுமித்திரா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), றெ.மானுஜா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), ம.நிவேனிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

மத்திய பிரிவு:

சி.லங்ஜெயரூபிகா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), ச. தட்சாயினி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க), பா.பாலாஜினி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), அ.றாஜேஸ்வரி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.), கு.ஜலஸா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.).

மேற்பிரிவு:

ந. தர்சனா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஈ.சுதர்சன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

### சித்திரப்போட்டி

ஆரம்பப்பிரிவு:

ஜே.நிரோஜன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அ. நவோமியா (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), வி.தர்ஸிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), இ.லோஜிதன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), பு.பவித்திரா (மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்), வ.லாவண்யா (மாதகல் சென்ட் தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), பா.புகழிஸா (மாதகல் விக் னேஸ்வரா வித்தியாலயம்).

கீழ்ப்பிரிவு:

இ. பதுஸா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.யோசுவா (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), இ.சுகிதரன் (மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்), றெ.ஜோண் பற்றிக் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க), சி.தோனுசன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.துஸாந்தன் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.).

மத்திய பிரிவு:

யோ. நிஷாந்தன் (சுதுமலை சிந்மயபாரதி), ச.ரவிராஜ் (சுதுமலை சிந்மயபாரதி), உ.துஸ்யந்தன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.மோகனராசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ச.கிரிசாந் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), இ.தனுசன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), கி.துஸாந்தன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

மேற்பிரிவு

தி.மதுஷன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெ. கோகுலன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), இ.கவிராஜ் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ந.மிதுனன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

(204-313)

# ஒளி விழா

கைதடி, டிசெ.20

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் அதிபர் ஏ.அருள்தாசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். மேற்படி நிகழ்வில் இந்த வருடம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படுவதுடன், நவீன கற்பித்தல் சாதன வள நிலையமும் திறந்து வைக்கப்பட உள்ளது. (201-288)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் சமூகப்பணிகள் வரிசையில் பருத்தித்துறை ஆத்தியடி சைவ மன்ற முன்பள்ளி மாணவர்கள், தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கு 62 தண்ணீர்ப் போத்தல்கள், புத்தகப்பைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு 3 சேலைகள் என்பன வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி உதவிகள் வழங்கப்பட்டன. (201)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் நடைபெற்ற தேசியமட்டத்தினாலான தமிழ்த்தினப் போட்டியில் நடனம் தனி, பிரிவு-05இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்விபயிலும் மாணவியும், யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு B.சயந்தன் அவர்களின் புத்திரியுமாகிய

செல்வி **லாவண்யா சயந்தன்**

அவர்கள் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்று யாழ். பல்கலைக்கழகப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கும் பெருமையைத் தேடித்தந்தமைக்காக இவரைப் பாராட்டி வாழ்த்தி மேன்மேலும் நடனக் கலையைத் தொடர்ந்து சகல சௌபாக்கியங்களைப் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு பரிசோதகர்கள்,
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

தகவல்:
பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 83
திகதி - 18.12.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து J — அதிர்ஷ்ட இலக்கம் 04 — வெற்றி இலக்கம் 4 5 3 3 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J 04 4 5 3 3 6 | ரூ. 5,000,000.00 | - |
| 1 பரிசு | 04 4 5 3 3 6 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 4 5 3 3 6 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 5 3 3 6 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | 3 3 6 | ரூ. 1,000.00 | 267 |
| 5 பரிசு | 3 6 | ரூ. 50.00 | 2620 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 25305 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 5 3 3 | ரூ. 1,000.00 | 29 |
| 8 பரிசு | 4 5 3 | ரூ. 100.00 | 267 |
| 9 பரிசு | 4 5 | ரூ. 50.00 | 2647 |
| 10 பரிசு | J | ரூ. 20.00 | 10432 |
| 11 பரிசு | J 04 | ரூ. 100.00 | 1155 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,056,290.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.5,363,995.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுவெலவில் 105 வயது வயோதிபருக்கு 8 பிள்ளைகள்; 75 பேரப்பிள்ளைகள்

கொழும்பு, டிசெ.20

கடுவெல பிரதேசத்திலுள்ள தெடிகமயில் உள்ள ஸ்டீவன் சீயா என அழைக்கப்படும் வயோதிபர் செப்ரெம்பர் 23 ஆம் திகதி தனது 105 ஆவது பிறந்தநாளை சுற்றம் சூழ கோலாகலமாகக் கொண்டாடினார்.

1906 ஆம் ஆண்டு பிறந்த ஸ்டீவன் சீயாவுக்கு எட்டுப் பிள்ளைகளும் இதுவரை 75 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

மாலபே, மிஹிந்து மாவத்தையில் உள்ள 63 வயதான தனது மகளின் இல்லத்தில் உள்ள ஸ்டீவன் சீயா ஊடகவியலாளரிடம் தனது இளமைக் கால நினைவுகளை பிசிரற்ற குரலில் பகிர்ந்து கொண்டார்.

வீட்டுத் தோட்டத்தில் விளையும் பலா, ஈரப்பலா, கிழங்கு, வற்றாளை, கீரை வகைகள் போன்றவையே எனது தினசரி ஆகாரம். புகைப்பதில்லை, மதுபானத்தை இதுவரை தொட்டதில்லை. இன்றும் நான் கண்ணாடியின்றி பத்திரிகை வாசிக்கிறேன். எனக்கு மனைவியாக வாய்த்தது ஜேன் நோனா உயிருடன் இல்லை என்பதே எனது ஒரே ஆதங்கம். பல காலமாக நான் செய்தது மெத்தை வியாபாரம். கடுவெலயிலிருந்து மெத்தைகளை தலையில் சுமந்து கொண்டு மொரட்டுவ வரைக்கும் நடந்த காலமும் உண்டு.

எனது எட்டுப்பிள்ளைகளும் மணம் முடித்துவிட்டார்கள். மூத்த மகன் ஜினதாசவுக்கு 72 வயது, அடுத்து குசுமாதேவி (71), சிரியாவதி (64), ஐராங்கனி (63), சமரசிங்க (60), ரோஹினி (58), சீதா (54), ஞானசேன (50) மொத்தமாக 75 பேரப்பிள்ளைகள். எல்லோருடைய பெயர்களும் சட்டென்று ஞாபகத்துக்கு வருவது கடினம்.

எல்லாப் பண்டிகைக் காலங்களிலும் அல்லது மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளிலும் எனது குடும்பம் மொத்தமாகக் கலந்து கொள்ளும்.

இன்னும் பல வருடங்கள் நான் வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என 105 வயதுப் பெரியவர் ஸ்டீவன் சீயா கூறுகிறார். (ம-5)

# அரச வைத்தியசாலைக்கு வழங்கிய மருந்துகள் 60 வீதமானவை தரம் குறைந்தவையாம்

கொழும்பு, டிசெ.20

இவ்வருடத்தில் முடிவடைந்த 11 மாத காலத்தில் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருந்து வகைகள் மற்றும் தடுப்பூசிகளில் 60 வீதமானவை தரத்தில் குறைந்தவை.

இது நிரூபணமாகியுள்ளதாகப் பேராசிரியர் சேனகபிபிலே ஞாபகார்த்த மன்றத்தின் அமைப்பாளர் வைத்திய கலாநிதி ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மருந்துகளில் 20-30 சதவிகிதம் வரை தரமற்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ம-5)

# நீதிமன்ற வளாகத்தில் சரத் பிறந்தநாள் கொண்டாட்டம்

சிறைவாசம் அனுபவித்துவரும் முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா, தமது 60 ஆவது பிறந்த நாளை புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிமை கொண்டாடியுள்ளார்.

ஆதரவாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளுடன் சேர்ந்து, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து கேக் ஒன்றை வெட்டி அவர் தமது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி-12)

# புலிகளுக்கு ஆயுதம்வழங்கிய குற்றவாளிக்கு 5 வருடச் சிறை

## அமெரிக்க நீதிமன்று விதிப்பு

கொழும்பு, டிசெ. 20

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் சிங்கப்பூரில் கைதுசெய்யப்பட்ட பால்ராஜ் நாயுடுக்கு அமெரிக்க நீதிமன்றம் ஐந்து வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

48 வயதுடைய பால்ராஜ் நாயுடுவின் வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர் கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார்.

விடுதலைப் புலிகள் தமக்கான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு பால்ராஜ் நாயுடு மிக முக்கிய பங்கு வகித்துள்ளார் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (சி)

# நல்லிணக்க ஆணைக்குழு - நிபுணர்குழு சந்திப்பால் எந்தவொரு தீர்வும் கிட்டாது

## இப்படிக் கூறுகிறார் சிவாஜிலிங்கம்

கொழும்பு, டிசெ. 20

ஐ.நா.வின் நிபுணர் குழுவும் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவும் கண்துடைப்பு நாடகங்களே. இக்கண்துடைப்பு நாடகங்களை நடத்தும் இரு தரப்பினர் சந்திப்பதால் இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வோ நீதியோ கிடைக்கப் போவதில்லை என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்காக நல்லிணக்க ஆணைக்குழுவை ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு சந்திக்கவுள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :-

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டபோது அதைத் தடுக்குமாறு புலம்பெயர் தமிழர்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்களை உலகெங்கும் முன்னெடுத்தனர். அப்போது மௌனம் சாதித்த ஐ.நா., இன்றுவரை அரசாங்கத்தின் தடுப்புக் காவலிலுள்ளோரின் பெயர் விபரங்களைக் கூட வெளியிடுமாறு நிர்ப்பந்திக்கத் தவறியுள்ளது. அத்தோடு போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணைகூட ஐ.நா வில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் வெறும் கண்துடைப்பாக ஒரு ஆலோசனைக் குழுவை ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் நியமித்திருந்தார். இதைப்போல இலங்கை அரசாங்கமும் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக் குழுவும் என்ற ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றி வருகிறது.

இரு கண்துடைப்பு நாடகங்களையும் நடத்துபவர்கள் சந்திப்பதன் மூலம் போரில் கொல்லப்பட்ட, பாதிக்கப் பட்ட, இன்னமும் தடுப்பு முகாம்களி லும் சிறைகளிலும் வாடிக்கொண்டிருக் கக் கூடிய மக்களுக்கு தீர்வோ அல்லது இந்த படுகொலைக்கு நீதியே கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை - என்றார். (எ)

# வவுணதீவில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மின்சார விநியோகம்

கொழும்பு, டிசெ. 20

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுணதீவு மற்றும் மட்டக்களப்பு துலாமடு ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மஹிலவட்டுவான் பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கும், மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட துலாமடு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட 90 குடும்பங்களுக்கும் இவ்வாறு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இவ்விரு மின்சார திட்டங்களை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். (சி)

# மின்சார சபைக்கான எரிபொருள் சலுகை அடுத்த ஆண்டுக்கும் வழங்கத் தீர்மானம்

கொழும்பு, டிசெ.20

மின்சாரசபைக்கு வழங்கப்படும் எரிபொருள் சலுகையை அடுத்த ஆண்டிலும் வழங்குவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்கு இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் லீற்றர் 26 ரூபாவாக மின்சார சபைக்கு எரியெண்ணெய் வழங்கப்பட்டது. கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து அந்த விலையை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 40 ரூபாவாக அதிகரித்திருந்தது.

இந்நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுவதாகவும் அதன் காரணமாக ஜனவரி முதலாம் திகதி முதல் அதன் விலையை 60 ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு அறிவித்திருந்தது. இந்நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரியெண்ணெயின் விலையை 60 ரூபாவாக அதிகரிக்குமானால் மின்சாரசபைக்கு ஆண்டொன்றில் 2000 கோடி ரூபா வரையில் மேலதிகச் செலவினம் ஏற்படும் எனவும் மின்சக்தி அமைச்சு சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தக் காரணங்களை அடுத்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் பெற்றோலிய வளத்துறை அமைச்சுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் பின்னர் தற்போது வழங்கப்படும் எரிபொருள் சலுகையை அடுத்த ஆண்டிலும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரமே ஜயந்த தெரிவித்துள்ளார். (ம-22)

# கஞ்சா தோட்டம் சுற்றி வளைப்பு; சந்தேகத்தில் ஐவர் கைதாகினர்

கொழும்பு, டிசெ.20

யால தேசிய வனத்தில் மூன்றாம் வலயத்துக்குச் சொந்தமானதும் கல்கே வனப் பாதுகாப்பு அலுவலகத்துக்குச் சுமார் 40 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுமான பிரதேசத்தில் மிகவும் சூட்சுமமாக நடத்திவரப்பட்ட ஆறு கஞ்சாத்தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டபோது ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாகக் கதிர்காமப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சுற்றி வளைப்பின்போது ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மூன்று தோட்டங்களும் இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இரண்டும், 4 ஏக்கர் கொண்ட தோட்டம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பதப்படுத்தி விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 50 கிலோ கஞ்சா மிகவும் உயரமான மரமொன்றின் உச்சியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தபோது மீட்கப்பட்டுள்ளது.

தோட்டங்கள் அனைத்தும் பொலிஸாரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம-5)

# பொலிஸ் சான்றிதழ் தயாரிப்பில் மோசடி மூவர் புலனாய்வுப் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ.20

பொலிஸ் சான்றிதழ்களைப் போலியாகத் தயாரித்து விற்பனை செய்து வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், இரு முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிளின் தொடாங்கொட வீடு சோதனை செய்யப்பட்ட போது, அத்தகைய போலிச் சான்றிதழ்கள் பலவும், 30 இறப்பர் முத்திரைகளும் கைப்பற்றப் பட்டன.

இந்த இறப்பர் முத்திரைகளில் பொலிஸ் உயரதிகாரிகள் சிலரின் பெயர்களும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்களும் பொறிக்கப் பட்டு இருந்தன.

வெளிநாடு செல்பவர்களுக்கு விசேடமாகத் தமிழர்களுக்கு இந்த பொலிஸ் சான்றிதழ் கட்டாய நிபந்தனையாகும். அவர்களுக்கு சான்றிதழ் ஒன்றை வழங்க 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை இந்த கான்ஸ்டபிள் அறவிட்டு வந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் சிறிது காலம் பொலிஸ் சான்றிதழ் வழங்கும் பிரிவில் பணி புரிந்துள்ளார். அப்பிரிவிலிருந்து வேறு பிரிவுக்கு மாற்றப்பட்ட பின் இந்த சட்டவிரோத செயற்பாடு மூலம் ஏராளமான பணத்தைச் சம்பாதித்துள்ளார்.

கைதான மூவரிடமும் புலனாய்வுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர் இடமாற்றம்

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இடம்மாற்றப் பட்டியல் உள்ளூராட்சி திணைக்களத் தினால் வெளியிடப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் 92 முகாமைத்துவ உதவியாளர்கள், 36 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், 5 தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள், நூலகர்கள் ஆகியோர் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடம்மாற்றம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-207)

## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

சங்கானை, டிசெ.20

அராலி, பொன்னாலை வரையான உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் தொடர் பான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலி.மேற்கு பிர தேச செயலகத்தில் நடைபெறும் என வலி.மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

நாளை காலை 9 மணிக்கு நடைபெற இருந்த இக்கூட்டம் தவிர்க்க முடியாத கார ணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-29)





டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை 2439422
லிபட்டி பிளாசா 2574446

சோதிடம்

கல்வியில் சித்தியுண்டா? திருமணம் நிகழுமா?
உத்தியோகம் கிடைக்குமா? நோய் நீங்குமா?
வியாபாரம் விருத்தியாகுமா? வெளிநாடு போக முடியுமா?

கேட்டுப்பாருங்கள்!
ஜாதகம் கணிக்கவும், கைரேகை பார்க்கவும்,
எண் விஞ்ஞானம் அறியவும்
நேரில் சந்தியுங்கள்.
த.சிவானந்தன்
பிரபலசோதிடர்,
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(107482)

யாழ் மண்ணில் முதற் தடவையாக பிருந்தாவன் கல்லூரி....

Brindavan College
Group of Institutions, Bangalore, India
Approved by AICTE, Recognized by Govt. & UGC and Affiliated to Bangalore University & VTU



www.brindavancollege.com

Engineering courses
- B.E- Electronics & Communication Engineering
- B.E- Computer Science Engineering
- B.E- Information Science Engineering
- B.E- Mechanical Engineering
- B.E- Civil Engineering

Under-graduate courses
- BCA - Bachelor of Computer Application
- BBM - Bachelor of Business Management
- B.Com - Bachelor of Commerce
- B.Sc., Computer Science
- B.Sc., Biotechnology
- B.Sc., Microbiology
- B.Sc., Genetics

A/L 2"S" சித்திகள் போதுமானது

Post-graduate courses
- MBA - Master of Business Administration
- MCA - Master of Computer Applications
- M.Sc., Biotechnology
- M.Sc., Microbiology
- M.Sc., Applied Genetics

Pre-university courses (10+2)
Science, Arts & Commerce courses




- Presently over 100 Sri Lankan students are studying
- About 800 Sri Lankan students have graduated.
- Degree recognized by UGC - Sri Lanka.
- Pay US$100/- for reservation and book the seat.
- Students with 2/3 A/L passes or awaiting results can register for UG courses and save one year.

Free Seminar & Spot Admission by Chairman / Principal at JAFFNA

| VENUE | DATE | TIME |
|---|---|---|
| Green Grass Hotel 33, Aseervatham Lane, Hospital Road | 20- Dec- 2010 | 10 AM |

கொழும்பில் தொடர்புகளுக்கு: S.K.சிவராம். 0779703866

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு: S.M. CONSULTANTS (S.MARIARATNAM), 148, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 0774528818.

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

17.12.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2332

வெற்றி எழுத்து: T
வெற்றி எண்கள்: 8 7 6 8 9 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 8 | 7 | 6 | 8 | 9 | 7 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 7 | 6 | 8 | 9 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 7 | 6 | 8 | 9 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 6 | 8 | 9 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 138 |
| 4 பரிசுகள் | | | | | 8 | 9 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1357 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13429 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 132831 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 7 | 6 | 8 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 7 | 6 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 134 |
| 9 பரிசுகள் | | 8 | 7 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1365 |
| 10 பரிசுகள் | | 8 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13330 |
| 11 பரிசுகள் | T | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53034 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,364,200.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


# யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம்

## உயர்திரு. சாம்பசிவம் தியாகலிங்கம்

அதிபர், SLPS -I (Sp.Trd. Maths, B.A)



### சேவைக்காலம்

| | |
|---|---|
| மட்/ திருப்பழுகாமம் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை | -08.02.1972 - 01.03.1972 |
| மட்/ தம்பலவத்தை அ.த.க. வித்தியாலயம் | -02.03.1972 - 26.05.1976 |
| மட்/ சிவானந்த வித்தியாலயம் | -26.06.1976 - 31.12.1978 |
| யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம் ஆசிரியர் | -01.01.1979 - 31.05.1993 |
| அதிபர் | -01.06.1993 - 26.06.2007 |
| யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் அதிபர் | -27.06.2007 - 20.12.2010 |

நீண்ட கால சைவப்பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும், திரு. சாம்பசிவம் தியாகலிங்கம் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாட்டின் பல பாகங்களிலும் அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. எமது பாடசாலையில் குறுகிய கால சேவையில் ஆரவாரமின்றி, தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி, மகிழ்வுடன் விடைபெறும் எம் அதிபரின் சேவையைப் பாராட்டுவது எளிதல்ல.

க.பொ.த உயர்தர கலைப்பிரிவு ஆரம்பம், விளையாட்டுத்துறை படைத்த சாதனைகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் வெற்றி, திருப்தி தரும் கல்விப் பெறுபேறுகள் இவரின் சேவைக்காலத்தைப் பறைசாற்றி நிற்கின்றன. எளிமையான, மனிதநேயம் மிக்க இவர் அதிபராக மட்டுமன்றி, நல்லாசானாகவும் மாணவர் மனங்களில் நிறைந்துள்ளார். அத்துடன் பெற்றோர், பழைய மாணவர்களுடனும் நல்லுறவுகளைப் பேணியவர். சமூகத்தின் நலன்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்த இவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவருமாவார். கடமை நேரத்தில் ஒரு நிமிடத்தையாவது தனது சொந்தத் தேவைக்காக செலவழிக்காது நற்பணிபுரிந்தவர். இத்தகையோரை இன்றைய சமூகத்தில் காண்பது அரிது. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மகிழ்வான சூழலை அளித்து பாடசாலைச் செயற்பாடுகள் யாவற்றையும் சிறப்பாக நிறைவேற்றி, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை முன்வைத்து ''ஓய்வும் ஓர் மகிழ்வான அனுபவம் தான்'' எனக்கூறி விடைபெறுகின்ற எம் அதிபரின் ஓய்வுக்காலம் சிறப்பானதாக அமையவும், அவர் குடும்பத்தினருடன் எல்லா நலன்களும் பெற்று மகிழ்வுடன் வாழவும் எல்லாம் வல்ல வதிரிபீட விநாயகனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நலன்புரிக் கழகம்,**
**யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.**

(107514)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயத்தை மீள இயக்கக் கோரிக்கை

காரைநகர்,டிசெ.20

காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு தோப்புக்காடு பிரதேசத்தில் மக்கள் மீள்குடிய மர கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதை அடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு மீள்குடியமர்ந்தன.

மீள்குடியமர்ந்தோரில் 10 வயதுக்குட்பட்ட 60 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் அதிக தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்கே கல்வி பயிலச் செல்கின்றனர். இதனால் அந்த மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் பெற்றோரே சிறுவர்களைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதுடன் மீள அழைத்து வர வேண்டிய நிலையும் உள்ளது.

இதனால் மேற்படி மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாததால் அவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக அந்தப் பகுதி பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு தோப்புக்காடு கிராமத்தில் உள்ள மறைஞான சம்பந்தர் வித்தியாலயத்தை மீள ஆரம்பித்து குறைந்தது தரம் 1-5 வரையாவது கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்ற பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக அ.விநாயகமூர்த்தி, எஸ்.சிறிதரன் ஆகியோரும் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (201-250)

## சாதனைப் பயணம்....



கௌரவிப்பு: கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் பாடசாலை அரங்கிலே இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலையின் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தமைக்காக வை.இராஜேஸ்வரனுக்குத் தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.முத்துலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (201-288)

# பாடசாலைச் சுற்றாடலில் மதுப்பிரியர்களின் அட்டகாசம்



கைதடி,டிசெ.20

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயச் சுற்றாடலில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் மிக மோசமடைந்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலைக்கு முன்னால் நிற்கும் மரங்களின்கீழ் இளைப்பாறும் மதுப்பிரியர்கள் மதுப்போத்தல்களைக் கொண்டு வந்து வெளிப்படையாகவே அங்குவைத்துக் குடித்து விட்டு அருகில் உள்ள குளத்தில் போத்தல்களைப் போடுகின்றனர்.

பின் போதையேறியதும் அந்த இடத்திலேயே தூங்குவதாகவும் கூறப் படுகிறது.

இது தொடர்பாக எவராவது தட்டிக் கேட்க முற்பட்டால் அச்சுறுத்தப்படுவதாகவும், பயத்தின் காரணமாகப் பெற்றோர்கள் பேசா மடந்தைகளாகத் தமது பிள்ளைகளைப் பாடசாலையில் காலைவேளையில் கொண்டு வந்து விட்டுப் பின் பாடசாலை முடியும் வரை காத்து நின்று அழைத்துச் செல்வதாகவும் கூறுகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கும் உதவுமாறு பெற்றோரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (201-288)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வலி.கிழக்கு,டிசெ.20

இலங்கை சிறுவர் நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற திறன் மற்றும் தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் பிராந்திய முகாமையாளர் ராஜன் தவசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கை சிறுவர் நிதியத்தின் தேசியப் பணிப்பாளர் குரு சரண்நாயக்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் ஆகியோரும்-

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை சிறுவர் நிதியத்தின் நிதி முகாமையாளர் பொன்னம்பலம் ஜெகநாதன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வரதகுலசிங்கம் ராதாகிருஷ்ணன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐயாத்துரை புவனேந்திரன், வடமாகாண தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைராஜா லெனின் அறிவழகன் ஆகியோரும் கலந்துகொள்வர். (201-86)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.20

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 5 இல் தனி நடனப் போட்டியில் பங்கு கொண்டு அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவி செல்வி ச.லாவண்யாவுக்கு பாராட்டுவிழா இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். (ம-23)

## நோர்வே அகதிகள் சபையால் பாடசாலைக்கு மலசலகூடம்

நாவற்குழி,டிசெ.20

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்க நோர்வே அகதிகள் சபை முன்வந்துள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் விடுத்த கோரிக்கையின் பேரில் மேற்படி உதவி கிடைத்துள்ளது. (201-121)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வீதியைவிட்டு விலகிய உழவுஇயந்திரம் வடிகாலில் விழுந்தது அதன் சில்லு



யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.நகரிலிருந்து கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகியதால் நகரின் வீதி ஓரமாக அமைக்கப்பட்டிருந்த வடிகாலுக்குள் அதன் முன் சில்லு விழுந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

இதன் காரணமாக அந்த வீதியூடான போக்குவரத்துச் சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

யாழ்.நகரினுள் ஒரு வழிப்பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த குறித்த வீதி வழியே வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது வந்த உழவு இயந்திரமே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (204-14)

# கணினி மயப்படுத்தப்படும் பிறப்பு, இறப்புப் பதிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைக் கணினி மயப்படுத்தப்படும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கணினிமயப்படுத்தப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் பிறப்பு, இறப்பு, விவாகச்சான்றிதழ்கள் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒரு வாரகாலத்துக்கு வழங்கப்படமாட்டாது என்றும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201)

# சவால்களை வெற்றி கொள்வதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

வடமராட்சி,டிசெ.20

சவால்களை வெற்றி கொள்ள எமது மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது. எமக்குக் கிடைக்கின்ற நிதிவளம் போதுமானதாக இல்லை. வெளிநாடுகளில் உள்ள எமது உறவுகள் கஷ்டப்படும் எமது மக்களுக்கு நல்ல வழிகளில் உதவி செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையினருடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எனக்கு பதவி முக்கியமல்ல. மக்களுக்குப் பணி செய்வது தான் முக்கியம். இதற்கு ஊடகங்களும் உதவி செய்யவேண்டும். அதைவிடுத்து தமது கருத்துக்களை எனது கருத்தாக எழுதக் கூடாது. ஊடகங்களுக்கும் தார்மீகப் பொறுப்பு உண்டு. நாட்டின் அபிவிருத்திக்கு ஊடகங்கள் சிறந்த பணியாற்றுவதுடன் உங்கள் கோரிக்கைகளை கவனத்தில் எடுப்பதுடன் அவற்றுக்கு இயலுமானவரை நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வு காண்பேன்.

இன்று யாழ். மாவட்டத்தில் மக்கள் வசிப்பதற்கு காணிகள், வீடுகள் கிடைக்கவில்லை. பல நூற்றுக்கணக்கான விதவைப் பெண்கள் அன்றாட வாழ்வியல் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எதிர்காலம், மீள்குடியேற்றம், நிலக்கண்ணி வெடிகளின் அபாயம், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகிய பிரச்சினைகள் எமக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றன.

இந்தச் சவால்களை வெற்றி கொள்ள பெரும் அர்ப்பணிப்புடனும், இதயசுத்தியுடனும் நாம் பணியாற்றுகின்றோம்.

நான் தனிப்பட்ட முறையிலும் ஏழை மக்களுக்கு உதவி செய்து வருகின்றேன். அதனால் தான் வன்னிப் போரில் என்னை இறைவன் காத்துள்ளான்.

எமது மக்களினதும், மாவட்டத்தினதும் முன்னேற்றத்துக்காக வினைத்திறனுடன் அயராது பாடுபடுவேன். இதற்காக ஜனாதிபதியுடன் துணிச்சலுடன் பேசியுள்ளேன். அவர் எமது மக்களின் துயரங்களைக் கேட்டு உதவி செய்வதாகத் தெரிவித்துள்ளார்- என்றார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் தெணியான், சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் செயலாளர் நா.தமிழ் அழகன், மூத்த உறுப்பினர் பி.ஜே அன்ரனி, ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் க.சின்னராஜா, உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.இராஜநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (204-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். நண்பர்கள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். சேமித்த பணம் ஒன்றை முக்கியமான காரியத்துக்காக செலவிடலாம். நேற்று நடக்காமல் போன காரியம் ஒன்று இன்று நடந்து விடலாம். தொழில் ரீதியாக சிலருக்கு ஆலோசனை சொல்வீர்கள். சந்தோஷ அனுபவம் உண்டு.

**இடபம்:**
தேவைக்கேற்ற பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். குடும்பத்தினர் மீதான பாசம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கலாம். சுய தொழில் புரிவோர் அனுமதிகளைப் பெற ஒன்றுக்கு பல முறை அலைய லாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். மாலை நேரத்தில் சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம்.

**மிதுனம்:**
மரியாதை, கௌரவம் மேம்படும். தொழிலுக்காக கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதாகி செலவுகளை உண்டாக்கலாம். விருந்தினர்கள் வருகையால் பெண்கள் அதிக வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும்.

**கடகம்:**
பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். பல நாள் முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கலாம். வெளியூர் களில் இருந்து சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். சந்தோஷமான செய்தி கேட்கலாம்.

**சிங்கம்:**
செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். அன்போடு பழகிய சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். எந்த வேலையிலும் முழு அக்கறை, ஈடு பாட்டுடன் செயற்பட வேண்டும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ளக் கூடாது. சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய மனம் இல்லாமல் மறுக்கலாம்.

**கன்னி:**
நல்லவர், கெட்டவர் எனப் பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக செயற்படுவீர்கள். சில விடயங்களில் குழப்பங் களுக்கு ஆட்படலாம். வழக்கமான வேலை ஒன்றில் தடை ஏற் படலாம். பஸ் பயணங்கள் தொந்தரவு கொடுப்பதாக அமையும்.

**துலாம்:**
எதிலும் பொறுப்போடும், அக்கறையோடும் செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டை பெறலாம். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று கைக்கு கிடைக்கலாம். குடும்பப் பெரியவர்களின் விருப்பங் களை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்கள் சிலருக்கு சில விடயங்களில் வழிகாட்டுவீர்கள். மேன்மை பெறும் நாள்.

**விருச்சிகம்:**
உங்களுக்கு எதிரில் பாராட்டும் சிலர் மறைமுகமாக விமர்சிக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். கடன் மிகுதி கள் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். ஆதாயத்தை விட செலவுகள் அதிகரிக்கும் நாள். மாலை நேரத்தில் பண வரவுகளுக்கு வாய்ப்பு உண்டு.


**தனுசு:**
சில நாள்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றை மீண்டும் செய்வீர்கள். செலவு ஒன்றைச் சமாளிக்க சிலரிடம் கடனுதவி பெறலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**மகரம்:**
விருப்பம் இல்லாமல் மற்றவர்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் சில வேலைகளைச் செய்யலாம். பல நாள்க ளாக விட்டுப் போன உறவு ஒன்று மீண்டும் வந்து ஒட்டிக் கொள்ளலாம். புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள்.

**கும்பம்:**
இறைவழிபாடு, தர்ம காரியங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். சிலர் குடும்பத்தை விட்டு வெளியூர் பயணம் செல்லலாம். பொது வாழ்வில் உள்ளோருக்கு செல்வாக்கு அதிகரிக்கும். காலை நேரத்தில் சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

**மீனம்:**
எதையும் எளிதில் சாதிக்க சந்தர்ப்பம் சாதகமாக அமையும். செய்யும் தொழிலில் சில மாற்றங்கள் ஏற் படலாம். ஏனையோரின் வேலைகளையும் நீங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். [illegible] மானமாக வைத்த பொருள்களுக்கு வட்டி கட்டலாம். உறவினர் கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள்.

## ஆரம்பம்...



ஊக்குவிப்பு: காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா கடந்த வெள்ளிக்கிழமை ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்தமண்டபத்தில் ஆரம்பமானது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகிறார். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபை நடத்திய சைவசமயப் பாடப்பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற மாணவி ஒருவருக்குத் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கின்றார். (201-250)

# மணிவாசகர் விழாவின் நான்காம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.20

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் 56 ஆவது ஆண்டு மணிவாசகர் விழாவின் நான்காம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் மணிவாசகர் சபைப் போஷகர் தி.விசுவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ''ஞானமார்க்கத்தில் மாணிக்கவாசகர்'' எனும் தலைப்பில் திருமதி சாந்தி திருநாவுக்கரசுவும், ''ஏந்திப் - பொலிபவனே'' எனும் தலைப்பில் தமிழ்மாமணி த.சிவகுமாரனும்,'' திருவாசகம் காட்டும் வாழ்க்கை முறை'' எனும் தலைப்பில் டாக்டர் சண்முகவடிவேலும், '' யார்கொலோ சதுரர்'' எனும் தலைப்பில் முருகு இராமலிங்கமும் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் நிகழ்ச்சியும் இடம்பெறும். (204-313)

# அர்த்தமே வேறுதான்!



அர்த்தமே வேறுதான்! சில பேர் பேசும்வார்த்தை ஒரு மாதிரியாக இருக்கும்! அதாவது அதற்கு அர்த்தம் வேறானதாக இருக்கும்!

அதனால்....நாம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரக் கூடாது. சிந்தித்துப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் விவரம் தெரிந்தவர்களைக் கேட்டு அதற்கு அர்த்தம் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும்.

ஓர் ஊரில் ஒரு பெரியார் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள்.

கடைசிக்காலத்திலே அவருடைய மூன்று பிள்ளைகளையும் அருகில் கூப்பிட்டு, மூன்று அறிவுரைகளைச் சொல்லி விட்டு இறந்து விட்டார்

அவர் சொன்ன அறிவுரைகள்.

''பெற்ற தாய்க்குச் சோறுபோடாதே!''

''கொடுத்த கடனைக் கேட்காதே!''

''விதை நிலத்துக்கு வேலிபோடாதே!'' என்பனதான் அந்த 3 அறிவுரைகள்.

''என்ன இது.....எல்லாம் ஒரு மாதிரியாக இருக்கிறதே?

இதையெல்லாம் பார்த்தால் அறிவுரை மாதிரி தெரியவில்லையே என்று மகன்மார் கேட்பதற்கு முன்பு அவர் இறந்து விட்டார். ''சரி.....அப்பா சொல்லி விட்டுச் சென்ற அறிவுரைகளின் அர்த்தம் என்ன? என்று கண்டு பிடிப்போம்'' என்று சொல்லி அந்த மூன்று பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு அறிவுரையை எடுத்துக் கொண்டு வெளியே சென்றனர்.

ஒரு பெரியவர் வந்தார்.....அவரைப் பார்த்து விளக்கம் கேட்டார்கள்.

''ஐயா.... கொஞ்சம் நில்லுங்கள். எங்கள் அப்பா சாகிற நேரத்தில் 'பெற்ற தாய்க்கு சோறு போடாதே!' என்று சொல்லிவிட்டு சென்றார். அப்படி என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார்கள்.

அந்தப் பெரியவர் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு விளக்கம் சொன்னார்.

''பெற்ற தாய்க்குச் சோறு போடாதே- என்றால் பொதுவாக வயதானவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும்....மருமகளோ, மற்றவர்களோ அளவாகச் சோறு போட்டால்......ஐயோ குறைத்து போடுகிறாளே தாராளமா போட மனம் வரவில்லையே என்பார்கள். ஆனால்

தாராளமாகச் சோறு போட்டால் ....'ஐயோ! ஆனால் இப்படி மாட்டுக்குக் கொட்டுறது மாதிரி கொட்டுறாளே' என்பார்கள்.... எப்படி போட்டாலும் அவர்களுக்குக் கோபம் வரும்....

அதனாலே இவர்களுக்கெல்லாம் நாம் சோறு போடக் கூடாது.....அவர்களாக எடுத்துப் போட்டுக் கொள்கிற மாதிரி அவர்களுக்கு முன்னால் வைக்க வேண்டும்...அது தான் புத்திசாலித்தனம்.... அதைத் தான் உங்கள் அப்பா 'பெற்ற தாய்க்கு சோறு போடாதே' என்று சொல்லியிருக்கிறார்!'' என்று விளக்கம் கொடுத்தார் அந்தப் பெரியவர்.

''சரி...அடுத்தபடியாக எங்கள் அப்பா 'கொடுத்த கடனை கேட்காதே!' என்று கூறினார்.... அது எப்படி...நாங்கள் கேட்காமலே இருக்க முடியும்?'' என்று கேட்டனர்.

பெரியவர் சொன்னார்: ''கொடுத்த கடனைக் கேட்காதே-என்றால் கடனைக் கொடுத்துவிட்டு அதைக் கேட்டுவாங்கிற அளவுக்கு நடந்து கொள்கிறவனுக்கு கடன் கொடுக்காதே என்று அர்த்தம். கொடுத்த கடனைக் கேட்காமலே திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கிற நல்லவர்களாகப் பார்த்துக் கடனைக் கொடுக்க வேண்டும். அதைத் தான் உங்கள் அப்பா கொடுத்த கடனைக் கேட்காதே! என்று சொல்லியிருக்கிறார்!'' என்றார் பெரியவர்.

உடனே இவர்கள்,

விதைத்த நிலத்துக்கு வேலிபோடாதே! என்று சொன்னாரே.... அது எப்படி வேலி போடாமே இருக்க முடியும்?'' என்று கேட்டனர்.

''ஏன் முடியாது? எமது நிலத்தைச் சூழ இருக்கற நிலத்துக்கு சொந்தக்காரர்கள் எல்லோரும் நல்லவர்களாக இருந்தால் எமது நிலத்துக்கு வேலி போட வேண்டிய அவசியம் இல்லையே!

அதனாலே நல்லவர்கள் நிலத்துக்கு மத்தியிலே எமது நிலம் இருக்கிறமாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் அதற்கு அர்த்தம்!'' என்றார். அந்தப் பெரியவர்.

அதற்குப் பிறகுதான் இந்த பிள்ளைகளுக்கு அப்பா சொன்ன புத்திமதியின் பொருள் புரிந்தது!

ஒருவர் உலகத்தைவிட்டுப் போகக்கூடிய நிலைமையிலே இருக்கிறார். நோயால் பீடிக்கப்பட்டு கட்டிலில் படுத்திருக்கிறார். சொந்தக்காரர்களையெல்லாம் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு புத்திமதி வீதமாகச் சொல்லிக்கொண்டே இருந்தார். அவர்கள் எல்லோரும் அருகில் வந்து அவர் சொல்லும் புத்திமதியைக் கேட்டுச் சென்றனர்.

கடைசியாக அவருடைய மனைவி அருகில் வந்தார்.

''உனக்கு எதுவும் புத்திமதி சொல்ல வேண்டாம். என்று நினைக்கிறேன்'' என்றார் அவர்.

''ஏன்?'' என்று மனைவி கேட்டார்.

''இதுவரைக்கும் நான் சொன்ன எந்த புத்திமதியை நீ ஒழுங்காகக் கேட்டிருக்கிறாய்?'' என்று கூறினார் அவர்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கேற்புடனான கிராமியத் திட்டமிடலும் அபிவிருத்தியும்

சங்கரப்பிள்ளை ரவி

**ஒரே மாதிரியான அணுகுமுறையை எல்லாக் கிராமங்களிலும் கடைப்பிடித்தமை திட்டங்களின் தோல்விக்கு மற்றுமொரு முக்கியமான காரணமாகக் கூறலாம். ஏனெனில், மக்களின் வாழ்க்கைமுறை, சமூக, பொருளாதார நிலை,அரசியல், கல்வி, பண்பாட்டுச் சூழல், மனப்பாங்கு ஆகியன கிராமத்துக்குக் கிராமம் மாறுபாடு கொண்டவை.**



ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு: கிராம மக்கள் எல்லோரும் ஒன்றித் துப் பங்கேற்கும் அபிவிருத்தித் திட்டங்களே வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்

அண்மைக்காலமாகப் போரினாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச,உள்ளூர்த் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் , அரச நிறுவனங்களும் பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.எதிர்காலத்திலும் அவற்றின் செயற்பாடுகளும், செயற்றிட்டங்களும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக சமுதாய உட்கட்டுமான அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி ,நுண்நிதி, நலச்சேவை,வீடமைப்பு ,சூழல் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம் போன்ற திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற பல நிதி நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு நிகொட், நியாப்,நெகடெப்,நீர்ப்,நெல்சிப் போன்ற திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.இவற்றில் அண்மைக்காலத்தில் உலகவங்கியின் அனுசரணையுடன் உள்ளூராட்சி சபைகளினூடாக அமுல்படுத்தப்பட்டுவருகின்ற நெல்சிப் திட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

நெல்சிப் திட்டத்தினூடாக அபிவிருத்தித் திட்டங்களினை முன்னெடுக்கும் நோக்கில் யாழ்.மாநகரசபையும் தன் ஆள்புலப்பரப்பினை - 23 வட்டாரங்களில் 47 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடங்கலாக- ஒன்பது கொத்தணிகளாக வகைப்படுத்தி, திட்டங்களினை தயாரித்து, நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.குறிப்பாக இத்திட்டங்களினைத் தயாரிக்கும் போது மக்கள் பங்கேற்பு அணுகுமுறை என்னும் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. உள்ளூராட்சி சபைகளின் ஜனநாயகம், சமத்துவம்,நல்லாட்சி போன்றன வெளிப்படுத்தப்படுவதோடு, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் உத்திமுறையாகவும் இது அமைந்துள்ளது.எனவே மக்கள் பங்கேற்பு அணுகுமுறை தொடர்பாக ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.குறிப்பாக இவ்விடயத்தினைக் கருத்திற்கொண்டே இலங்கை அரசானது கிராம மட்டத்தில் மக்கள் சபையெனும் கட்டமைப்பினையும், அதற்கென மக்கள் சபைச்செயலாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டுவருகின்றது.

### ராபர்ட் சேம்பரின் கண்டுபிடிப்பு

பிரிட்டனைச் சேர்ந்த கிராம முன்னேற்ற வல்லுநர் ராபர்ட் சேம்பரினால் அறிமுகம் செய்யப்பட்ட அணுகுமுறையே மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம ஆய்வு என்பதாகும். கிராமங்களைப் பொறுத்தமட்டில், தொடக்க காலத்தில் அவ்வூர் மக்களே ஒன்று கூடி, தங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து,, பிறருடைய உதவியை எதிர்பார்க்காமல் தாங்களே அவற்றைத் தீர்க்க முயன்றனர். சுதந்திரத்துக்குப் பின்னர், கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் பெரும்பங்கு வகிக்க ஆரம்பித்தது. இதனால் மக்கள் நலனை முன்னிறுத்தும் திட்டங்களை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் மக்களுக்கு குறிப்பிடும்படியான பங்கோ, ஈடுபாடோ கிடைக்காமல் போனது. இத்தருணத்தில் ராபர்ட் சேம்பர் கண்டறிந்த புதிய அணுகுமுறையே பங்கேற்புடன் கூடிய கிராம ஆய்வு. மக்கள் தங்கள் பிரச்சினைகளை அடையாளங் காணல், உள்ளூர் வளங்களைக் கண்டறிந்து ஒன்று சேர்த்தல்,அதற்கான திட்டங்களை உருவாக்குதல், அதைச் செயற்படுத்த முனைதல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் என்னும் செயற்பாடுகளின்போது மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது என ராபர்ட் சேம்பர் குறிப்பட்டுள்ளார்.

### திட்டங்களை விடவும் திட்டமிடலே அவசியம்

அண்மைக்காலமாக இலங்கையில் தேசிய ,மாகாண, மாவட்ட, கிராமிய ரீதியாக மேற்கொள்ளப்படும் திட்டங்களில் மக்களின் பங்கேற்புக்கு முக்கியத்துவம் அளித்து, திட்டங்களினை செயற்படுத்த முனைகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.குறிப்பாகப் போரினாலும், சுனாமி போன்ற அனர்த்தங்களினாலும் முற்றாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களினை மீளக்கட்டி எழுப்புவதற்கான திட்டங்களின் போது,அடிப்படைத்தரவு சேகரிப்பு, திட்ட முழுமை,கண்காணிப்பு,மீளாய்வு எனும் செயன்முறைகளில் மக்களின் பங்களிப்பு அத்தியாவசியம் என்பது நன்குணரப்பட்டுள்ளது.அதனடிப்படையில் மக்கள் பங்கேற்புடனான கிராமிய அபிவிருத்தி திட்டமிட்டமிடல் எனும் கருத்து அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் திட்டங்களினை விடவும் திட்டமிடல் என்பதே இவற்றில் மிக அத்தியாவசியமானதாக அமைகின்றது.

கிராமங்களே நமது நாட்டின் நாடித் துடிப்புக்கள்.நாட்டின் பொருளாதார வளர்ச்சி கிராமங்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. கிராமங்கள் உயர்ந்தால் தான் நாடு உயரும். இதனாலேயே கிராம வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களை அரசுதீட்டிச் செயற்படுத்தியுள்ளது. எனினும் இவற்றில் பெரும்பாலான திட்டங்கள், எதிர்பார்த்த அளவு கிராமங்களில் மாற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை . இதற்கு முக்கியமான காரணம் திட்டங்கள் அனைத்தும் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாக இருந்தனவே, தவிர மக்களை மையமாகக் கொண்டு தீட்டப்படவில்லை. திட்டங்களைத் தீட்டுதல், செயற்படுத்துதல், மதிப்பீடு செய்தல் போன்றவற்றில் ஒரேமாதிரியான அணுகுமுறையை எல்லாக் கிராமங்களில் கடைப்பிடித்தமை திட்டங்களின் தோல்விக்கு மற்றுமொரு முக்கியமான காரணமாகக் கூறலாம். ஏனெனில், மக்களின் வாழ்க்கைமுறை, சமூக, பொருளாதார நிலை,அரசியல், கல்வி, பண்பாட்டுச் சூழல், மனப்பாங்கு ஆகியன கிராமத்துக்குக் கிராமம் மாறுபாடு கொண்டவை. எனவே திட்டங்கள் தீட்டப்படும்போது, இத்தகைய அம்சங்களை முழுமையாகக் கருத்தில் கொள்ளவில்லையெனில் திட்டங்களுக்கு மக்களிடையே போதிய வரவேற்பு இருக்காது. எனவே, திட்டங்கள் தீட்டுவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பது முதல் மதிப்பீடு செய்தல் வரை மக்களின் எண்ணங்கள், கருத்துக்கள், முன்னுரிமைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவமளிப்பதும், மக்களின் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்துவதும் மிக அவசியம். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மக்களை உரியமுறையில் சென்றடைய வேண்டுமாயின் பங்கேற்பு முறையிலான கிராமிய திட்டமிடல் அணுகுமுறை மிகவும் பொருத்தமானதாக அமையுமென அண்மைக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### மக்கள் பங்கேற்பே ஆணிவேர்

திட்டமிடலில் மக்கள் பங்கேற்பு முறையானது பல்வேறுவகையிலும் முக்கியத்துவம் பெற்றதொன்றாகக் கருதப்படுகின்றது.குறிப்பாக ,கிராம வளர்ச்சிப்பணிகளுக்காகத் திட்டமிடுவதிலிருந்து மதிப்பீடு செய்வது வரை உள்ள பல்வேறு நிலைகளில் மக்களின் பங்கேற்பு அபரிமிதமாக இருக்கலாம் அல்லது பெயரளவில் இருக்கலாம், அல்லது எதிர்மறையாகக் கூட இருக்கலாம். எனினும் திட்டத்தில் எந்த அளவுக்கு மக்கள் உணர்வுபூர்வமான ஈடுபாட்டுடன் பங்கேற்கிறார்கள் என்பதே திட்டத்தின் வெற்றியினைப் பிரதிபலிக்கின்றது .மாறாக பங்கேற்பின்மை பல காரணிகளைப் பொறுத்து அமையலாம். குறிப்பாக மக்களின் ஒத்துழைப்பும், பங்கேற்பும் அதிகமாக இருப்பதில்லை. மக்களது எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும், தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. எனவேதான், திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது ,மக்கள் பட்டும், படாமலும் இருக்கக்கூடிய நிலையினைக் காண்கிறோம். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, திட்டங்களின் வெற்றிக்கு மக்கள் பங்கேற்பு ஆணிவேராக அமைகிறது என்பது புலனாகிறது.

மக்கள் பங்கேற்பு என்பதை முதலில் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது. ஏனெனில் மக்கள் பங்கேற்பு என்பதற்குப் பலர் பல்வேறு வகையில் பொருள் கொள்ளலாம். கிராமமுன்னேற்றத்துக்காக அரச அதிகாரிகள் அல்லது தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் திட்டமிட்டு, அதில் கிராம மக்களின் ஒத்துழைப்பை நாடுவதே மக்கள் பங்கேற்பு என ஒரு சாரார் கருதுகின்றனர். திட்டமிடுதலில் மக்களை ஈடுபடுத்துவதையே மக்கள் பங்கேற்பு என இன்னும் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் இவையெல்லாம், முழுமையான மக்கள் பங்கேற்பாக அமையாது.கிராமத்தின் பிரச்சினைகளை ஆராய்தல், தேவைகளைக் கண்டறிதல், முன்னுரிமைப்படுத்துதல், வளர்ச்சித்திட்டமிடல், திட்டத்தை மதிப்பீடு செய்தல் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் கிராம மக்களின் அறிவுபூர்வமான பங்கேற்புக்கும், சக்திபூர்வமான ஒத்துழைப்புக்கும் அரச அதிகாரிகளோ அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோ பின்னணியில் இருந்து செயற்படுத்தும் நிலைமையே மக்கள் பங்கேற்பு என நாம் பொதுவாகக் கூறுகின்றோம்.ஆனால் இதைவிட, கிராம வளர்ச்சி எனும் பொறுப்பை கிராம மக்களிடமே ஒப்படைத்து, அப்பொறுப்பை அவர்கள் செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவையான சூழ்நிலையையும், வசதிகளையும், அதிகாரங்களையும் அரசும், அரசு சாரா நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொடுத்தலையே மக்கள் பங்கேற்பு எனக் கூறலாம்.

### கிராம வளர்ச்சி

கிராமவளர்ச்சி என்பது எந்த ஒரு அரசு எந்திரமோ அல்லது தன்னார்வத்தொண்டு நிறுவனமோ வெளியிலிருந்து கிராமத்திற்குச் சென்று கிராம மக்களின் கையில் கொடுத்துவிட்டு வரும் ஒருபொருள் அல்ல. இவர்கள் உருவாக்கிய திட்டங்களில் கிராம மக்களை இழுத்து, ஈடுபடுத்தி, கிராம வளர்ச்சியை எட்டிவிட முடியாது. திட்டங்களில் கிராம மக்களின் ஆர்வமான தன்னியல்பான பங்கேற்பு இருக்கும் போது மட்டுமே முழுமையான கிராம வளர்ச்சி என்பது சாத்தியமாகும். குறிப்பாக மக்களின் மனப்பாங்கு, சமூக வலுவூட்டல் திறன் என்பன இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராமப் பிரச்சினையை ஆராய்வது, மக்களின் தேவைகளை அளவிடுவது, திட்டமிடுவது, திட்டத்தைச் செயற்படுத்துவது, கண்காணிப்பது, மதிப்பீடு செய்வது போன்ற அனைத்து நிலைகளிலும் கிராம மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதே கிராம வளர்ச்சிப் பணிகளின் வெற்றிக்கான சிறந்த அணுகுமுறை என்பதை அரசும், தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் உணரத் தொடங்கியுள்ளன. (வளரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் கலந்த 31 நாள்கள்

## அமரர் நாகலிங்கம் ஜெயரட்ணம் (பாப்பையா)

அவர்களை

## 31ஆம் நாளில் நினைவு கூருவோம்



பாரிலோர் பிள்ளையாகி
பண்புடைத் தந்தையாகி
ஊரிலோர் உறவுமாகி
உத்தம குணங்கள் தாங்கி
சீரிய வாழ்வு வாழ்ந்த
சிறப்புடைத் தலைவரெங்கள்
பேரினார் ஜெயரட்ணத்தார்
பிரிந்துமோர் திங்களாக
வாரியே மலர்கள்தூவி
வகையது பலவும் செய்து
நேரிய வாழ்வு வாழ்ந்து
நெடுந்தூரம் சென்றார் தன்னை
காரிய விழியுள் வைத்து
கண்ணீரால் நீருமாட்டி
பாரிய பாசத்தால் நாம்
பரிந்தின்று நினைவு கூருவோம்.

அன்னாரின் ஆத்மா
சாந்திபெறுவதாக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

651, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பாசத்தின் குடும்பத் தலைவரை
நினைவுகூரும்
குடும்பத்தினர்.



## கோழிக்குஞ்சு விநியோகம்

35நாளில் 2Kg மேல் வளர்ச்சிய டையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 22.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீன்,**
நவாலி வீதி ஆனைக்கோட்டை.
தொ.பே.இல: 0212222867
0776090926



## மிக விரைவில்
## சாவகச்சேரி நகரிலும்

GATEWAY
CfiCT

மற்றும்

ICDL
International Computer
Driving Licence

**சர்வதேசத் தராதரப் பத்திரப் பரீட்சை நிலையம்**

**IT ISLAND - GATEWAY CENTRE**
New Market Building,
Chavakachcheri
021 227 0323


## சேதமடைந்த வீதிகளில் பயணிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை வரையிலான பிரதான வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் பொதுமக்கள் அவ்வீதிகளில் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பாடசாலை வீதிகள், மைதான வீதிகள் உட்பட்ட பல வீதிகள் இவ்வாறு சேதமடைந்து காணப்படுகிறன. அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பிரதேங்களுக்கு உட்பட்ட வீதிகளே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-313-325)

## நத்தார் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நத்தார்தின நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிவரை இடம்பெறும். நத்தார் கீதங்கள், சிறப்புச் சொற்பொழிவு, பாலவிகாஸ் மாணவர்களின் நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். (201)


## விற்பனைக்கு

புதிய TATA 207 PICKUP (NP PP 4XXX) வாகனம் லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0777131858, 0777397735



## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 23.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944



# நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்

## விசேட விலைக்கழிவும் (10% முதல் 40% வரை)

## இலவச கொடுப்பனவுகளும்

LG No 1 Dealer in SriLanka

(20.12.2010 முதல் 31.12.2010 வரை)




# LG JAFFNA ELECTRICAL

141,Power House Road,
Jaffna.
T.P: 021 222 8378, 5766.

94 (6), Stanley Road,
Jaffna.
021 222 2353

No: 04, New Market,
Chavakachcheri.
T.P: 0213008702

No.135, A9 Road,
Kilinochchi.
T.P: 021 492 5289.

Cool Line: 0777725258

Authorized Dealer for Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஞ்சினோர்க்கு வரமருளும் யாழ். மரியன்னை பேராலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

யாழ்.மறை மாவட்ட ஆயர் போதிப்பது, வழிபாடுகள் நடத்துவது என்பனவெல்லாம் இப்பேரா லயத்திலேதான். ஆயரின் அதிகாரச் சின்னமாக விளங்குவது ஆசனக் கோவில். ஆயருக்கென இங்கே ஒரு கோமுறை இருக்கை (THRONE) 'சிம்மாசனம்' வைக்கப்பட்டுள்ளது. இந்த சிம்மாசனம் ஆயரின் அதிகாரச் சின்னமாக விளங்குகிறது.



1983 ஆம் ஆண்டுக்குப்பின் மோசமடைந்த மோதல்கள் யாழ். பேராலயத்தையும் விட்டு வைக்கவில்லை. 1990 இல் ஜூன், ஒக்டோபர் மாதங்களில் இடம் பெற்ற தாக்குதல்களில் பலத்த சேதத்தைச் சந்தித்தது. எனினும் 1991 ஆம் ஆண்டில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.


ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஓய்வுபெற 1992 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறைமாவட்டப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

யாழ். மறைமாவட்டத்தை நிர்வகிக்கும் தாய்க்கோயிலான பேரால‌த்தில் யாழ். மறை மாவட்டக் குருக்களை திருநிலைப்படுத்துதல், திருமுழுக்கு, நோயில் பூசுதல் போன்ற சடங்குகளுக்கான பரிசுத்த தைலம் மந்திரித்தல், சிறப்பு வரவேற்பு நிகழ்வுகள்,வழிபாடுகள் என்பன ஆயர் தலைமையில் இவ் ஆலயத்தில் நடைபெறும்.

யாழ்.மறை மாவட்டத்தில் பணியாற்றி இறந்த ஆயர்களின் உடல்களைப் புதைத்த இடங்கள் ஆலயத்தினுள் பெயர்க்கற்களுடன் காணப்படுகின்றன.

அண்மைய தசாப்தங்களில் பணியாற்றிய பங்குத் தந்தையர்களான ஜே.பி.ஈ செல்வராஜா, எச்.ஜெபநேசன், அன்ரன் ராஜநாயகம், பி.இருதயதாஸ், ஏ.சி கிறிஸ்தோப்பர், மைக்கல் ஏ.பி. ஆர் சவுந்தர நாயகம் அடிகளார்களைத் தொடர்ந்து அருட்திரு ஆர். எச் . சகாயநாகம் அடிகளார் பங்குத் தந்தையாக ஆலயத்தை நிர்வகித்து வருகிறார்.

ஆலயத்தின் திருப்பண்ட அறையின் அருகில் அமைதிச் சூழலில் 2007 ஆம் ஆண்டு நற்கருணைநாதர் ஆலயம் அமைக்கப்பட்டு யாழ். ஆயரால் திறந்து வைக்கப்பட்டது.



ஆயிரக்கணக்கான கத்தோலிக்க குடும்பங்களை உள்ளடக்கிய புனித மரியாள் ஆலயத் திருவிழா ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.பல்வேறு தரப்பினரையும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பல்வேறு தரப்பினரையும் இணைத்த ஆலய மேய்ப்புப் பணிச் சபை மற்றும் தூய அன்னம்மாள்சபை, ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபை, பொது நிலையினருக்கான பிரான்சிஸ்கன் சபை, வின்சன் டீ போல் சபை, மரியாயின் சேனை, திரு இருதயசபை, இறை இரக்க வழிபாட்டுக் குழு, கிறிஸ்தவ குடும்ப இயக்கம், இளையோர் உருவாக்கல் இயக்கம் ஆகிய பக்திச் சபைகள் செயற்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் யாழ். பேராலயத்தைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

அமைதி நிறைந்த விடுதலையை மனிதகுலத்திற்கு தர உலகில் உலகிற்கு வந்த இயேசுபிரானைத் தாங்கி வளர்த்த அன்னை மரியாள் அனைவருக்கும் நல்வழிகாட்டி பரிவுமிக்க பரிந்துரையால் நீடித்த தீர்வை நோக்கி வழி நடத்துவாள் என நம்புவோம்.

*(முற்றும்)*

# வளர்ச்சி - வீழ்ச்சி - மீளெழுகையுறும் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி

*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

தரம் 6 ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் உயர்தர பாடசாலையாக ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரியின் முதலாவது அதிபராக ஸீ.எம்.ஏ.ஜிப்ரி நியமனம் பெற்றார். அத்துடன் ஆறு ஆசிரியர்களும் கல்விப் பணியில் இணைக்கப்பட்டனர். அறிவுக் கண் திறக்கும் பேரொளியான கல்விச் சேவைக்காக தவமிருந்த 150ற்கு மேற்பட்ட மாணவர்கள் முதல் நாளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சில மாதங்களில் கல்லூரிக் கீதமும் இயற்றப்பட்டது.



உயர் வகுப்பு கல்விகளுக்காக நகரப் பகுதி பாடசாலைகளுக்குச் சென்று வந்த மாணவ மாணவியர்கள் தமது ஊரில் காலருகே அமைந்த கல்லூரிக்கு மாறத் தொடங்கினர். மாணவர் தொகையும் ஆசிரியர் வளங்களும் அதிகரித்தன. தரம் 6 இலிருந்து க.பொ.த சா/த வரை நடைபெற்ற இப்பாடசாலையில் 1975ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலை செயற்படத் தொடங்கிய நாள்முதல் சாரணர் இயக்க செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. தொடர்ந்து பணியாற்றிய அதிபர்களின் அளவற்ற சேவையால் பாடசாலை துரித வளர்ச்சி கண்டு பயணித்தது. அதிபர்கள் வரிசையில் எம்.எம். யூஸூப், அல்ஹாஜ் அப்துல் குத்தூஸ், பதில திபர் ஜனாப் ஏ.எச். ஹாமீம், எம்.கே. எம். ஹனீபா, அல்ஹாஜ் எம்.ஏ.அப்துல் றஹீம், கே.எம். ஹம்தூன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிலும், இணைப்பாட விதானங்களிலும், விளையாட்டுத் துறையிலும் யாழ். நகரப் பாடசாலைகளின் தரத்திற்கு உயர்வடைந்த வளர்ச்சியைக் கண்ணுற்று மாணவர்கள் தொகை அதிகரிக்கலாயிற்று. இடப்பற்றாக் குறை தோன்றவே மேலும் சில கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. 1986ஆம் ஆண்டு அதிபர் ஹாமிம்மினால் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய 1 ஏபி தரத்திலான ஒரே ஒரு முஸ்லிம் கல்லூரியாக துரித வளர்ச்சி பெற்று முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அரும்பணியாற்றும் அறிவுக் கூடமாக யா/ஒஸ்மானியாக் கல்லூரி திகழ்ந்தது.

பாடசாலைக்குரிய அனைத்து வசதிகள், பௌதிக வளங்கள் விஞ்ஞான, மனையியல் ஆய்வுகூட தொகுதிகளுடன் 1200இற்கு மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி கற்கும் கல்லூரியாக முஸ்லிம் பிரதேசத்தில் எழுச்சியுடன் காணப்பட்டது.

யாழ். பிரதேச பிரபல மைதானங்களில் ஒன்றான ஜின்னா மைதானம் இப்பாடசாலைக்குரியதாகும். கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுத்துறை, உதைபந்தாட்டம் என்பவற்றில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் சாதனைகளை நிலைநாட்டியது.

தொகுப்பு:

**எஸ்.யோசுதாஸ்**

இக்கல்லூரி தனது வெள்ளிவிழாவை 1988இல் சிறப்புடன் கொண்டாடியது. 'அல் ஹிக்மா' எனும் கல்லூரி நூலும் வெளி யிடப்பட்டது. இவ்வாறான பல வளர்ச்சிப் படிமுறைகளைத் தாண்டிப் பலரது அர்ப்பணிப்புமிக்க தியாகங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கல்லூரி சடுதியான வீழ்ச்சி ஒன்றைச் சந்திக்கும் அவலநிலை தோன்றியது. 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி ஒட்டுமொத்த முஸ்லிம்களின் இடப்பெயர்வால் பாடசாலை செயலிழந்தது.

அழகுமிகு தோற்றத்துடன் காணப்பட்ட பாடசாலை சிதைவடைந்தது. குண்டுத்தாக்குதல்களும், திருடர்களின் கைவரிசையும் பாடசாலையை நிர்மூலமாக்கியது. இறுதியில் கூரைகள், கதவுகள், தளபாடங்கள் அற்ற வெறும் கற்சுவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. 1995ஆம் ஆண்டு முதல் 2003 வரை [illegible] முகாமாகச் செயற்பட்டது.

2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து யாழ் முஸ்லிம்கள் சுயவிருப்பத்தின் பெயரில் தங்களது இருப்பிடங்களுக்கு மீளக்குடியேற ஆரம்பித்தார்கள். இக்காலப்பகுதியில் யாழ் , கிளிநொச்சி மாவட்ட உலமா சபை, மக்கள் பணிமனை, சமூக கல்வி அபிவிருத்தி அமைப்பு (செடோ), அல்பாக்கியதுஸ் ஹாலிகாத் நிறுவனம், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இங்குள்ள நிலைமைகளை அறிந்து ஆக்கபூர்வமாக சமய, சமூக கல்விப் பணிகளுக்காக முன்னெடுப்பு ஆய்வினை மேற்கொண்டு கொழும்பு திரும்பியது.

அதன் சிபார்சின் அடிப்படையிலும் மீளக்குடியேறிய மக்களின் கல்வித் தேவைக்கான வேண்டுகோளைக் கருத்திற் கொண்டும் முஸ்லிம் பிரமுகர்களின் ஆலோசனையின்படியும் 2003 ஆம்




ஆண்டு செப்ரெம்பர் 25ஆம் திகதி பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டது.

பாழடைந்த கட்டடங்களும், பற்றைக்காடுகளும், செல் சிதறல்களும் காணப்பட்ட பாடசாலை வளாகம் மூன்று தினங்களுக்குள் தயார்படுத்தப்பட்டது. வெள்ளிவிழாக் கொண்டாடிய பாடசாலை மீண்டும் தொடக்கப்புள்ளிக்குச் சென்றுவிட்டது.

அப்போது மீள்குடியமர்ந்திருந்த சிறிய தொகை மாணவர்கள் 41பேர் தரம் 1-5 வரை வகுப்புக்களுக்காக இணைந்து கொண்டனர். அன்றைய வலயக்கல்விப் பணிப்பாளரான ப.விக்கினேஸ்வரன் அவர்களால் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பஞ்சாட்சரம்

**(ஆசிரியர், ஸ்ரீபார்வதி வித்தியாலயம், அரியாலை)**



தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் இல. 05, கச்சேரி லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சாட்சரம் 16.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் பார்த்தீபன் (2ஆம் வருட மாணவன், மலேசியா பல்கலைக்கழகம்), கார்த்தீபன் (முதலாம் வருட மருத்துவ பீட மாணவன்,யாழ்.பல்கலைக்கழகம்), காயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா (கொழும்பு), இராஜேந்திரம் (நீர்வேலி), மல்லிகாதேவி, இராசலிங்கம் (பிரான்ஸ்), மகாதேவன் (லண்டன்), இரவிச்சந்திரன் (பிரான்ஸ்), அருள்நேசன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், பழனிநாதன், வரதலட்சுமி மற்றும் தர்மலிங்கம் (நயினாதீவு), நடேசபிள்ளை (நயினாதீவு), புஸ்பமலர் (கொழும்பு), பத்மராணி (நீர்வேலி), பிரேம்குமார்(பிரதேச செயலகம், நல்லூர்), சுதா (பிரான்ஸ்), ரூபினி (லண்டன்), ஷஜிதா (பிரான்ஸ்), மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.05, கச்சேரி லேன்,**
**சுண்டுக்குளி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இலங்கையின் சமூகநல நடவடிக்கைக்கு நிதி

இலங்கையின் சமூகநலன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் வாயிலாக அவுஸ்திரேலிய அரசு 1.1 கோடி ரூபாவை உதவியாக வழங்கவுள்ளது. தேசிய அரச சார்பற்ற 8 நிறுவனங்களுக்கு இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகர் கேத்தி குளுக்மன் கடந்த 14 ஆம் திகதி இலங்கைக்கான தூதுவராலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது இந்த நிதியை ஒப்படைத்தார். (ம-5)

## மலசலகூடம் அமைக்கக் கோரிக்கை

நாவற்குழி, டிசெ.20

புத்தூரில் அமைந்துள்ள பொதுச் சந்தைக்கு மலசலகூடம் அமைத்துத் தருமாறு பொது மக்கள் வலி. கிழக்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தையில் பல மணிநேரம் இருந்து வியாபாரத்தில் ஈடுபடுவோர் இந்த வசதியின்மையால் சிரமம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-121)


## வேலையாள்கள் தேவை

பிரபல சைவ உணவகத்துக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1) சப்ளையர் - 02
2) சமையல் உதவியாளர் - 01
3) பில் கிளார்க் - 01
4) தேநீர் தயாரிப்பாளர் - 01
5) ரொட்டி தயாரிப்பாளர் - 01

தொடர்பு:- 0771524785

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1252 சிகப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 17 29 46 55 17-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 3,066,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 239,089 | 20/- | 4,781,780/- |
| 2 இலக்கங்கள் | 21,956 | 40/- | 878,240/- |
| 1 இல. + லக்கினம் | 21,793 | 60/- | 1,307,580/- |
| 2 இல. + லக்கினம் | 1,983 | 200/- | 396,600/- |
| 3 இலக்கங்கள் | 585 | 1000/- | 585,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,066,550/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,249,200/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 639 | | 618,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 286,099 | | 9,867,200/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,134,400/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 10 12 44 49 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 636 | 500/- | 318,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 639 | | 618,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2183 திகதி 18-12-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள் 04 31 39 49

போனஸ் இல: 20

ஜக்பொட் பரிசு ரூ. 27,128,675/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 195531 | 20/- | 3,910,620/- |
| 2 இல | 13952 | 100/- | 1,395,200/- |
| 3 இல | 301 | 1,000/- | 301,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7877 | 40/- | 315,080/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 551 | 1,000/- | 551,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 27,128,675/- | - |
| 1 இல + போனஸ் இல | 9266 | 100/- | 926,600/- |
| 2 இல + போனஸ் இல | 428 | 500/- | 214,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 399 | 200/- | 79,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,398,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 228347 | | 9,998,800/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 302656448-3-32 |
| புத்தளம் | 302645033-4-44 |
| காலி | 302651676-3-34 |
| மாத்தறை | 302646092-3-38 |
| கம்பஹா | 302649252-4-29 |
| வவுனியா | 302645694-9-37 |
| மட்டக்களப்பு | 302666052-7-25 |
| அம்பாந்தோட்டை | 302645831-1-36 |
| குருநாகல் | 302644277-0-14 |
| குருநாகல் | 302644284-3-46 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 27,662,425/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

## Butterfly International School Chankanai



(Dr.Maria Montessori & Canadian Early Learning Method)

### 2011ஆம் ஆண்டுக்கான புதிய அனுமதிகள்

Butterfly International Schoolன் Play Group (2+) montessori(3+) Preschool (4+)

சிறார்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன உங்கள் அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை காலை 8.30- நண்பகல் 12.00 மணி வரை எல்லா நாள்களிலும் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

### எமது கல்லூரியின் சிறப்பான செயற்பாடுகளாவன:-



* ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட, அன்பு மிக்க அரவணைப்பு மிக்க, அனுபவம் மிக்க ஆசிரியர் குழாம்.
* பிரத்தியேக சீருடை
* கணினி அறை
* சகல வசதிகளுடனும் கூடிய வகுப்பறை வடிவமைப்பு
* உள்ளக, வெளியக, விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய கற்பித்தல்
* சாதாரண மக்களும் முகம் கொடுக்கக் கூடிய மிகக் குறைந்த கட்டணவசதிகள்
* வருடாந்த விளையாட்டுப் போட்டி, ஆங்கில கலை விழா, முத்தமிழ்விழா, பரிசளிப்புவிழா.
* தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமாகவும், ஏனையவை ஆங்கில மொழிமூலமும், சிங்களம் மேலதிகமாகவும் கற்பிக்கும் வசதி.
* சனி, ஞாயிறு காலை பாடசாலை செல்லும் சிறார்களுக்கு ஆங்கில வகுப்புகள்.
* திங்கள்- வெள்ளிவரை மாலை நேர 1ஆம் வகுப்புத் தொடக்கம் 5ஆம் வகுப்புவரை எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் உங்கள் அனுமதிகளுக்கு இன்றே:-

**Butterfly International School**
**Main Street, Chankanai.**
**T.P: 0777249678**

Education is Salvation



Butterfly International School
ஆசிரியர் தேவை

தரம் 1முதல் 5வரை மாலை நேர வகுப்புகளுக்கு அனுபவம் மிக்க ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடையோர் தம் சுயவிவரக் கோவையுடன் செவ்வாய்க்கிழமை (காலை 9மணிக்கு) நேரில் சமுகமளிக்கவும்.

Mrs.Sujatha Selvakumaran
Butterfly International School Chankanai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு முகாம்களிலுள்ள இளைஞர்களின் விடயத்தில் மிகக் கரிசனையுடன் நான் செயற்பட்டு வருகிறேன்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ.20

தடுப்பு முகாம்களிலுள்ள இளைஞர்கள் இப்போது கட்டங் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களது விடுதலை விடயத்தில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு வருகிறேன் என மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆயித்தியமலை மகிழவட்ட வான் பிரதேசத்துக்கான மின்விநியோகத்திட்டம் கடந்த வியாழக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நம்பிக்கையை நாம் அரசுக்கு ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் நமக்கான விடயங்களில் அரசு அக்கறையுடன் செயற்படும். அதற்கான காலம் இப்போது ஏற்பட்டு வருகிறது. என்னுடைய கோரிக்கையின் அடிப்படையில் முகாம்களில் வாடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் தற்போது கட்டங்கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகிறார்கள்.

அடுத்த வருடத்தில் பிரதேச சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன்போது நம்முடைய அரசின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நம்முடைய பலத்தை வெளிக்காட்ட வேண்டும். அப்போதுதான் நமக்கான அபிவிருத்திகளை அதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.




மட்டக்களப்பு மாவட்டத்தில் துரிதமாக அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்புக்குள் நுழையும் போது பெரிய நகரொன்றுக்குள் நுழையும் உணர்வு ஏற்படுகின்றது.

எமது பிரதேசத்தின் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவை உள்ளிட்ட துறைகளை அபிவிருத்திசெய்வதன் மூலம் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இதைக் கருத்திற்கொண்டே செயற்படுகின்றோம்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய பிரதேசங்களில் 40இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாண பிரதேசத்தினதும் ஏனைய பிரதேசங்களினதும் அபிவிருத்திப் பணிகள் அடுத்த ஆண்டு துரிதப்படுத்தப்படும். இங்கு நீர்ப்பாசனச் செயற்பாடுகளில் நான் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன்.

நம்முடைய நம்பிக்கை, செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலமும் ஒற்றுமையைக் கட்டி யெழுப்புவதன் மூலமும் நம்முடைய தேசத்தை நாம் கட்டி யெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப் பிரதி அமைச்சின் இணைப்புச் செயலாளர்களான பொன். ரவீந்திரன், திருமதி ருத்திரமலர் ஞானபாஸ்கரன், பிரதேச அமைப்பாளர்கள் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## இரண்டாம் கட்டமாக காசோலைகள் கையளிப்பு

மட்டக்களப்பு, டிசெ.20

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன, கிராமிய மின்சார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிழக்கு மாகாணத்தில் மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் மக்களுக்கு வீடு,கிணறு ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

வீட்டுக்கு தலா மூன்றரை லட்சம் ரூபாவும் கிணற்றுக்கு தலா ஐம்பது ஆயிரம் ரூபாவும் மூன்று கட்டங்களாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

முதற்கட்டமாக வீட்டிற்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும் கிணற்றிற்கு தலா இருபத்தையாயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது.

இதன் இரண்டாம் கட்டநிதி கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தனால் வழங்கப்பட்டது. (ளி)

## மீனவர்களின் பொருள்கள் எரிப்பு

அம்பாறை, டிசெ.20

சாய்ந்தமருது முதலாம், 2ஆம், 3ஆம் பிரிவு மீனவர் கூட்டுறவு சங்கத்தின் சுமார் 5 லட்சம் பெறுமதியான தோணி, வலை ஆகியவை உட்பட பல பொருள்கள் இனம் தெரியாத நபர்களால் கடந்த புதன்கிழமை இரவு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.



இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் இத்தோணியும், பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தால் சுமார் 100 மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர் என சங்கத் தலைவர் ஏ.ஆர்.மீராசாஹிவு தெரிவித்தார். (ளி)

## திருகோணமலையில் மின்தடை

திருகோணமலை கிரிட் மின் நிலையத்தின் திருத்த வேலைகள் காரணமாக நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும், திருகோணமலை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் மின்சாரத் தடை அமுலில் இருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி நாளை கந்தளாய், மூதூர், கிண்ணியா, விமானப் படை, 4ஆம் கட்டை, அனுராதபுர சந்தி, அபயபுர சந்தி, கணேஷ் ஒழுங்கை, அன்புவெழிபுரம், வரோதயா நகர், கன்னியா ஆகிய பிரதேசங்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணி வரையும் மின் தடை ஏற்படும்.

நாளை மறுதினம் 3ஆம் கட்டை, அலஸ் தோட்டம், 6ஆம் கட்டை, நிலா வெளி, திரியாய், குச்சவெளி, இறக்கக்கண்டி, ஜின்னாநகர், கும்புறுப்பிட்டி, புல்மோட்டை, பன்குளம், கிவுலக்கட, கோமன்கட வெல, பக்மீகம, மொறவெல புலிகண்டிவெல ஆகிய பிரதேசங்களில் பி.ப ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை மின்சாரத் தடை அமுலில் இருக்குமென இலங்கை மின்சாரசபை மேலும் அறிவித்துள்ளது. (ளி)

# சஜித் பிரேமதாஸ அணியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## பிரதியமைச்சர் ஏர்ள் குணசேகர கம்பளையில் அழைப்பு

கம்பளை, டிசெ.20

''ஐக்கிய தேசியக் கட்சி மீது எதிர்பார்ப்பை வளர்க்கும் பணியைக் கைவிட்டு விட்டு சஜித் அணியினர் அரசுக்கு ஒத்து ழைப்பு வழங்க முன்வரவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸ வருவதற்கு இன்னும் 25ஆண்டுகள் செல்லும்.''

-இவ்வாறு பெருந்தோட்டக் கைத் தொழில் அபிவிருத்தி பிரதியமைச்சர் ஏர்ள் குணசேகர குறிப்பிட்டார்.

கண்டி கன்னொருவவில் உள்ள அமைச்சரின் பணிமனையில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நான் எதிர்காலத்தில் எனது அரசியலை கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ளேன். தேர்தலிலும் குதிப்பேன். கட்சிக்குள் பிளவுகள் தோன்றுவது பற்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கவலை இல்லை. அவர் சம்மேளனத்தை நடத்தி கட்சி ஆதரவாளர்கள் மெல்வதற்கு இனிப்புக் கொடுத்து ஏமாற்றியுள்ளார். கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்கு நல்ல பல தலைவர்களை உருவாக்கியுள்ளது. ஆனால் துரதிஷ்டவசமாக அது தற்போது தவறான வழிநடத்தலில் சென்று கொண் டிருக்கின்றது. ஜனநாயகத்தைக் கொண்டுவர ஐ.தே.க.யாப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் எப்பயனும் கிடையாது.

எனவே, நாட்டின் நன்மை கருதி சஜித், தயாசிறி மற்றும் புத்திக அணியினர் அரசின் செயற்பாடுகளை எதிர்க்கும் போக்கைக் கைவிட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிராமப்புற மக்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சி குறித்த எதிர்பார்ப்பை வளர்ப்பதால் எதுவித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

நான் பதவி மற்றும் பட்டங்களுக்காக ஆட்சியாளர்களுடன் இணையவில்லை. என்மீது நம்பிக்கை வைத்தே ஜனாதிபதி எனக்கு பிரதியமைச்சர் பதவியை வழங்கியுள்ளார்.

- இவ்வாறு ஏர்ள் குணசேகர தெரிவித்தார். (ளி)

## நாவலப்பிட்டியில் வயோதிபப் பெண் மர்மமாக தீயில் கருகி உயிரிழப்பு

கொழும்பு,டிசெ. 20

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சொய்சாகலை பிரதேசத்தில் தனிமையில் வாழ்ந்து வந்த 65 வயது மதிக்கத்தக்க பேகர் இனத்து பெண்மணி ஒருவர் உடல் கருகி, பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நாவலப்பிட்டி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் வீட்டினுள் சென்று பார்த்தபோது அங்கு சமையலறைப் பகுதியில் தீயில்கருகிய நிலையில் பெண்மணி ஒருவர் உயிரிழந்துள்ளமையை அவதானித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து நாவலப்பிட்டி நீதிமன்றின் பதில் நீதிவான் நியானந்த மஹிந்தானந்த சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் பின்பு கண்டியிலிருந்து மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு பிரதேசத்தில் தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் சந்தேகத்துக்கிடமான தடயங்கள் கிடைக்கவில்லை.




கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் குறித்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பட்டி வைத்தியசாலைக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பெண் வசித்து வந்த வீட்டைச்சுற்றி பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. குறித்த பெண்ணின் மரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

## ஊவா மாகாண வைத்தியர்களின் பகிஷ்கரிப்பால் 100 சுகாதார நிலையங்களின் இயக்கம் ஸ்தம்பிதம்

கொழும்பு, டிசெ.20

ஊவா மாகாண வைத்தியர்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்த அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பால் மாகாணத்தின் சுமார் 100 வைத்திய நிலையங்களின் நாளாந்தப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் சுமார் 1000 வைத்தியர்கள் கலந்து கொண்டபோதும் அவசர சிகிச்சைகள் எவ்வித இடையூறும் இன்றி நடைபெற்றன என அரச வைத்தியர்கள் சங்கம் தெரிவித்தது. அரசசேவைகள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பிரதி நிர்வாகப் பதவியை ஊவா மாகாண வைத்தியர்களுக்குப் பெற்றுத்தர மாகாணத்தின் சுகாதாரப் பணிப்பாளர் மறுப்பு தெரிவித்ததைக் கண்டித்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப் பட்டது என பதுளை வைத்தியசாலையின் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆணைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட 101 பதவி உயர்வுகளில் பெரும்பாலானவை ஏனைய மாகாணங்களில் நிறை வேற்றப் பட்டிருக்கும்போது, ஊவா மாகாணத்துக்கான வெறும் நான்கு பேரின் பதவியுயர்வுகள் இழுத்தடிக்கப்படுவது அசாதாரணமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

## வீதிப்புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நுவரெலியா,டிசெ.20

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நுவரெலியா மாவட்டத்தில் வீதிகளை செப்பனிடுவதற்காக 68 கோடி 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

இந்நிதியின் மூலம் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள விவசாய திணைக் களத்துக்குச் செல்லும் வீதியும் ஏனைய வீதிகளும் மாவட்ட அபிவிருத்தி சபையின் ஊடாகச் செப்பனிடப்படவுள்ளன.

இந்நிதியின் மூலம் மாவட்டத்தில் ஒரு கிராமசேவை பிரிவிற்கு 5 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக் குழந்தை



சின்னக் குழந்தாய் சின்னக் குழந்தாய்
ஒரு சொல் கேட்டிடம்மா
கதிரவன் எழும் முன்னே தினம்
நீ காலையில் எழுந்திடம்மா
புறத்தூய்மை பேண நன்றாய் நீயும்
குளிர் நீரில் குளித்திடம்மா
அகத்தூய்மை பேண அனுதினமும்
இறைவனை மனதில் நினைத்திடம்மா.

நொடிப் பொழுதும் தாமதமின்றி தினம்
பள்ளி சென்று சேர்ந்திடவேண்டும்
நல்ல நண்பர் குழாம் உனைச்சுற்றி
பள்ளியில் நீ அமைத்திட வேண்டும்.
கற்றுத்தரும் ஆசானை ஆண்டவன் போல்
நாளும் மனதில் நினைத்திடவேண்டும்.
கற்ற கல்வி வழிநின்று தினம்
நீ வாழ்வில் உயர்ந்திடவேண்டும்.

வளர்ந்து வரும் உலகில் சிறந்திட
கணினியைக் கற்று தேர்ந்திடவேண்டும்
உலகத்தின் நடப்பை எல்லாம் நீ
வலைத்தளத்தில் அறிந்திட வேண்டும்
எவ்வளவு வளர்ந்திட்ட போதும் நீ
பழமையை போற்றி பேணிடவேண்டும்
அன்னை தந்தை ஆசான் பேணி
தாய் மொழியை வளர்த்திட வேண்டும்

சிவானி

## பிரசித்தி பெற்ற இடங்கள்...

(பிருந்து)

### மண்டபக் காடு

கற்பாறைகள் நிறைந்துள்ள கெருடாவில் தெற்குப் பகுதியில் மண்டபக் காடு காணப்படுகின்றது. குகையின் உட்புறம் அரசசபை போன்ற அமைப்பைக் கொண்டதாகவும் அங்கு பல மண்டபங்கள் இருப்பதாக இவ்வூர் மக்கள் குறிப்பிடுகின்றனர். நான்கு பக்கமும் குறுகிய வாயில்கள் காணப்படுகின்றன. ஏறக்குறைய ட மைல்களுக்கு இம்மண்டபம் பரந்துள்ளது. வரலாற்று ரீதியாக சுமார் அறுநூறு வருடங்களுக்கு முன் சிங்கை ஆரியனின் மூத்த மகன் பரராசசேகரன் போத்துக்கீசருக்கு அஞ்சி இக்குகைக்குள் ஒளித்திருந்ததாக இப்பகுதி மக்கள் குறிப்பிடுவர்.

### பொந்துக் கிணறு

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள இக்கிணறு மிகவும் பிரசித்தமானது. இடிவிழுந்து பொந்துக்கிணறு தோன்றியதாகக் குறிப்பிடப் படுகின்றது. நிலாவரைக் கிணறுபோல இறைக்க இறைக்க வற்றாத கிணறாகும். இக்கிணற்றிலிருந்து நாளொன்றுக்கு 42000 லீற்றர் நீர் தொண்டைமானாற்றிலிருந்து வல்வெட்டித் துறை நகரப் பகுதி, பொலிகண்டி, ஊறணி வரையான பகுதிகளுக்கு குழாய் மூலம் 24 நீர்த் தொட்டிகளுக்கு பொதுமக்களின் பாவனைக்கென நீர் வழங்கப்படுகின்றது. தொடர்ந்து இக் கிணற்றிலிருந்து நீரை எடுப்பதனால் அண்மையில் உள்ள விவசாயக் கிணறுகளின் நீர்மட்டம் குறைவடையும் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் ஆய்வுக்குரியது.

## சிந்தனைத் துளிகள்...




- மரியாதை பெறும் ஒரேவழி அதனை முதலில் கொடுப்பதாகும்.
- திருப்தியும் பேரின்பமும் எம்முள் இருப்பின் நாம் மற்றவர்களால் விரும்பப்படுவோம்.
- எல்லா சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.
- நிரந்தரமற்றதின் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல்படியாக அமையும்.
- பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.
- நிஸப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.
- வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்பு நெறியை உணர்ந்திருத்தல் அவசியம்.

## வினோத உயிரினங்கள்

இ.ஆத்மீகன், தரம் - 5.

| | |
|---|---|
| அதிக நீர் அருந்தும் பறவை | - புறா |
| மிகச் சிறிய முட்டையிடும் பறவை | - தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | - ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபக சக்தி கூடிய விலங்கு | - யானை |
| நீல நிற இரத்தத்தையுடைய உயிரினம் | - நண்டு, இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | - தேவாங்கு |
| கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை | - பென்குயின் |
| பறக்கும் போதே தூங்கும் பறவை | - ஆல்பட்றாஸ் |
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | - நீர்யானை |
| நாக்கு இல்லாத ஊர்வன | - முதலை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | - எலி |
| நீந்தத் தெரியாத விலங்கு | - ஒட்டகம் |
| பறக்கும் முலையூட்டி | - வௌவால் |
| கண்களின் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் | - முதலை |

## வெள்ளை யானை பறக்கிறது

(தொடர்ச்சி)

"தேவலோகம் வரை தேடிக் கொண்டு போனோம்!" என்று புளுகினான், மண்டு.

"ஐயோ! இதைப் பிடிக்க நாங்கள் பட்ட பாடு எங்களுக்குத்தான் தெரியும்!" என்றான் மூடன்.


"தந்தம் மட்டும் கறுப்பாக இருக்கிறதே?" என்று மந்திரி கேட்டதும், "அது வைரம் பாய்ந்த தந்தம்! அப்படித்தான் இருக்கும்!" என்றான் முட்டாள்.

இவர்கள் பேசிக் கொண்டே இருக்கும்போது, திடீரென்று பலத்த காற்று அடிக்க ஆரம்பித்தது. உடனே யானையின் மீது கட்டப்பட்ட இறக்கைகள் பிய்த்துக் கொண்டு கீழே விழுந்தன.

உடனே பலத்த மழையும் பெய்ய ஆரம்பித்தது. மழை நீர் யானையின் மீது பட்டதும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுண்ணாம்பு எல்லாம் கரைந்து, வெள்ளை யானை கறுப்பாக மாறியது.

இதைப் பார்த்த குருவுக்கும் சீடர்களுக்கும் பயத்தால் உடம்பு வெட வெட என்று நடுங்கியது!

சிறிது நேரத்திலேயே பரமார்த்தரின் சாயம் வெளுத்து விட்டது - ஊகும் - கறுத்து விட்டது. பிறகென்ன வழக்கம்போல் தண்டனைக்கு ஆளானார்கள். (முற்றும்)




## வில்லுப்பாட்டு

(தொடர்ச்சி)



இந்தியாவில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் போன்ற மாவட்ட கோடை விழாக்களில் இன்றைய காலத்திலும் வில்லிசை நிகழ்த்தப்படுகிறது. இக்கலையை வில்லுப்பாட்டு, வில்லடி, வில்லு, வில்லடிச்சான் பாட்டு என வட்டாரத்துக்கேற்ப பெயரிட்டு அழைக்கின்றனர். தற்காலத்தில் கோவில் சார்ந்த நாட்டார் கலையாக இதன் வடிவம் சுருங்கி விட்டது.

இந்த கலைக்குரிய மேடை, தெய்வத்தின் நேர் எதிரில் அமைக்கப்படும். வில்லுப்பாட்டு நடத்தப்படும் கோவிலின் தலைமை தெய்வத்தைப் பற்றிய கதையே பாடலில் முதன்மை பெறும். பனங்கம்பு, மூங்கில் ஆகிய மரங்களில் வில் செய்யப்படுகிறது. வில்லிசை கருவியின் நாண் இல்லாத பகுதி வில் கதிர் எனப்படுகிறது. ஏழு அடி நீளமுள்ள வில்கதிரின் நடுப்பகுதி பெரிதாகவும், வில்லோடு இணையும் அதன் முனைகள் சிறிதாகவும் இருக்கும். கதிரின் மேல் வண்ணத்துணிகளை கட்டி அழகுபடுத்தி சாயம் பூசப்படுகிறது. கதிரின் இரு முனைகளிலும் வெண்கலத்தால் இரண்டு பூண்கள் பொருத்தப்பட்டு அதில் நாண் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். விற்கதிரின் பின்னால் வளைந்த பகுதியில் நான்கு வளையங்கள் பொருத்தப்பட்டு அதில் வெண்கல மணிகள் இணைக்கப்பட்டிருக்கும். வில்கதிரின் நாண் மாட்டுத்தோலால் செய்யப்படும்.

பாடும் போது இசைவாணர் வில்லின் நாண் மீது வீசி இசையெழுப்பும் கம்புக்கு 'சுவீசுகோல்' என்று பெயர். குழாய் போன்ற [illegible] இருக்கும் அந்த கோலின் உள்ளே வெண்கல பரல்கள் இடப்பட்டிருக்கும். நாணில் இந்த வீசுகோல் விழும்போது சலசலவென்று பரல்கள் ஒலியெழுப்பி

சிவானி

## பாரம்பரிய கலைகளில் ஒன்று...

## ஒயிலாட்டம்

(தொடர்ச்சி)

ஆதி காலத்தில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் இக்கலையாடலில் சிறந்த ஆண்களையே பெண்கள் மணம் முடிக்க விரும்பியதாகக் குறிப்புகள் உண்டு.

ஆட்டத்தின் வேகத்தைத் தீர்மானிக்க ஆட்ட இலக்கணங்களும் உண்டு. ஆட்டத்தின் வேகத்தைப் பொறுத்து தக்கு, காலம் என்றும் அடவுகளின் வேகத்தைப் பொறுத்து அடி, சாரி, தட்டு என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.



தக்கு என்பது மெதுவான ஆட்டத்திற்கான இலக்கணம். வேகமாக அடவுகளுக்கு காலம் என்று பெயர். வேகமான அடவுகள் முதலாம் காலத்தில் தொடங்கி மூன்றாம் காலத்தில் நிறைவுறும். வாத்தியார் பாடலைப்பாட, குழுவினர் அதே வரிகளைப் பாடி ஆடுவார்கள்.

மரபுசார்ந்து இயங்கிய பலர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக, கிறிஸ்தவ ஆலயங்களிலும் அண்மைக்காலமாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் பைபிள் கதைகளைப் பாடி ஆடுகின்றனர். ஒயிலாட்டத்திற்கென்று தனித்த ஒப்பனை முறைகள் உண்டு. ஒழுங்காக தலை வாரியிருப்பார்கள். கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு, வலது கையில் ஒரே வண்ணத்திலான கைக்குட்டை பிடித்திருப்பதும், தலையில் ஒரே வண்ணத்தில் துணிகளை கட்டியிருப்பதும் அவசியம். பெரும்பாலும் கையில் பிடித்திருக்கும் துணி சிவப்பு நிறத்தில் இருக்கும். தலைமையாளர் மட்டும் பச்சை நிறத்தில் பிடித்திருப்பார். வெள்ளை வேட்டியை தார் பாய்ச்சிக்கொள்வதும் மரபாகும். தொடக்கத்தில் கை கூப்பி, ஒரு காலை மட்டும் தட்டி கடவுள் வணக்கம் செய்து, அடுத்து தரையைத் தொட்டு அவை வணக்கம் செய்து விட்டு அடவுகளைத் தொடங்குவர். (முற்றும்)

அபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராடியாவின் புதிய ஒலிநாடா வெளியானதால் ராசா - ரத்தன் டாடா இரகசிய பேரம் அம்பலம்

சென்னை, டிசெ. 20

தொழிலதிபர் ரத்தன் டாடாவுக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கும் இடையே நடைபெற்ற இரகசியப் பேரத்தை அம்பலப்படுத்தும் நீரா ராடியாவின் புதிய ஒலி நாடா வெளியாகியுள்ளது.



புதிய ஒலிநாடா விவரங்களை 'அவுட்லுக்' இதழ் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டது.

நீதிபதி ரகுபதியை நிர்ப்பந்தித்த விவகாரத்தில் ஆ.ராசாவின் பதவிக்கு ஆபத்து ஏற்படுமோ என்பது குறித்து ரத்தன் டாடாவும், நீரா ராடியாவும் தொலைபேசியில் பேசியது ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ராசா சர்ச்சையில் சிக்கியிருப்பது குறித்து ரத்தன் டாடா, நீரா ராடியாவிடம் கேள்வி எழுப்புகிறார்.

இதற்குப் பதிலளிக்கும் நீரா ராடியா, நீதிபதியிடம் ராசா பேசவில்லை, பார் கவுன்ஸில் தலைவர்தான் அவரது பெயரைப் பயன்படுத்தியுள்ளார், அதனை நீதிபதி ஏற்கவில்லை, இதனால் ராசாவின் பதவிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதாக உறுதியளிக்கிறார்.

ராசாவின் தனிச் செயலர் ஆர்.கே. சண்டோலியாவிடம், நீரா ராடியா பேசியது மற்றொரு ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ராசாவின் சொந்த ஊரான பெரம்பலூரில் டாடா நிறுவன உதவியுடன் 9 கோடி செலவில் மருத்துவமனை அமைப் பது குறித்து அந்த உரையாட லில் பேசப்படுகிறது.

ஆர்.கே.சண்டோலியாவிடம் பேசும் நீரா ராடியா, பெரம்பலூரில் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக டாடா சன்ஸ் நிறுவன இயக்குநர் கிருஷ்ணகுமாரிடம் பேசிவிட்டேன், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக அவர் உறுதியளித்துள்ளார் என்று கூறுகிறார்.

ராடியாவின் தொலைபேசி அழைப்பை ராசா எதிர்பார்த்து காத்திருக்கிறார் என ஆர்.கே. சண்டோலியா தெரிவிக்கிறார்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் டாடா டெலிகாம் நிறுவனத்துக்கு சாதகமாகச் செயற்பட நீரா ராடியா இரு தரப்பிலும் பேரம் பேசியிருப்பது புதிய ஒலிநாடா மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

# தமிழகம் வருகிறார் ராகுல்

சென்னை, டிசெ. 20

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி, 2 நாட்கள் சுற்றுப்பயணமாக வரும் 22 ஆம் திகதி சென்னை வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது அவர் மதுரை, திருச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளைச் சந்திக்கிறார்.

தமிழகத்தில் 13 இலட்சம் பேர் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அதைத்தொடர்ந்து நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலில் பஞ்சாயத்து முதல் நாடாளுமன்ற தொகுதி வரை பல்வேறு பதவிகளுக்கு 60 ஆயிரம் பேர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளிடம் கலந்துரையாடவும், சட்டப்பேரவை தேர்தலையொட்டி கட்சியைப் பலப்படுத்துவது குறித்தும் அவர் ஆலோசனை நடத்துவார் எனத் தெரிகிறது.

வரும் 22 ஆம் திகதி சென்னை வரும் அவர், இங்குள்ள கட்சி நிர்வாகிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுகிறார். அதே நாளில் விழுப்புரம், திருச்சி ஆகிய இடங்களுக்குச் செல்வார் என்று கூறப்படுகிறது. 23 ஆம் திகதி மதுரைக்குச் செல்ல உள்ளார். அவர் தனது மதுரைப் பயணத்தை முடித்துக் கொண்டு கேரளத்துக்குச் செல்வார் என தெரிகிறது.

இப்போதைக்கு சென்னை, மதுரை, திருச்சி ஆகிய 3 இடங்களுக்கு ராகுல் காந்தி செல்வது உறுதியாகி உள்ளது. மேலும் அவர் இரண்டு அல்லது மூன்று இடங்களுக்குச் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ராகுல் காந்தியின் தமிழகப் பயணம் குறித்து சென்னை சத்தியமூர்த்தி பவனில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் ராகுல் காந்தியின் சுற்றுப்பயணத் திட்டம், நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.


# சோனியா ஒரு சுயநலவாதி தாக்குகிறார் ஜெகன்மோகன்

சென்னை, டிசெ. 20

காங்கிரஸ் கட்சி தனது குடும்பத்துக்குள் விரிசலை ஏற்படுத்த முயல்கிறது எனவும், சோனியா மனிதநேயம் இல்லாத சுயநலவாதி என்றும் ஜெகன்மோகன் ரெட்டி கூறியுள்ளார்.

மறைந்த ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி மகன் ஜெகன்மோகன் ரெட்டி காங்கிரஸில் இருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்கத் திட்டமிட்டுள்ளார். அவர் தனது எம்.பி. பதவியையும் இராஜினாமாச் செய்தார்.

இந்நிலையில் ஜெகன் மோகன் ரெட்டி சொந்த ஊரான கடப்பாபில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ரெட்டி, எனது தந்தை ராஜசேகர ரெட்டிக்கு காங்கிரஸில் பொறுப்பு கிடைத்தபோது ஆந்திராவில் 26 எம்.எல்.ஏக்கள்தான் இருந்தனர். அவர் மாநிலம் முழுவதும் பாதயாத்திரை சென்று காங்கிரஸுக்கு மக்கள் ஆதரவைத் திரட்டினார். அவரது கடின உழைப்பால் கடந்த தேர்தலில் காங்கிரஸுக்கு 33 எம்.பி. தொகுதிகளைப் பெற்றுக் கொடுத்து மத்தியில் ஆட்சி அமைக்க உதவினார். இதை சோனியா மறந்துவிட்டார். என் தந்தை மரணச் செய்தியைக் கேட்டு இறந்த 600 தொண்டர்கள் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லக்கூட சோனியா அனுமதி மறுத்தார். அவர் மனித நேயம் இல்லாதவர் - சுயநலவாதி - என்றார்.



டில்லியில் தொடங்கிய காங்கிரஸ் மகா சபைக்கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் சோனியா பேசினார். அருகில் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# மூக்கு வழியாகக் குளிர்பானம் பருகும் இளைஞர் கின்னஸ் சாதனைக்கு முயற்சி



தர்மபுரி, டிசெ. 20

தர்மபுரி அருகே கின்னஸ் சாதனைக்காக பல்வேறு சாகசங்கள் செய்யும் இளைஞர், மூக்கு வழியாக குளிர்பானம் பருகி அசத்தி வருகிறார்.

தர்மபுரி அடுத்த மொரப்பூர், கோபிநாதம்பட்டியைச் சேர்ந்தவர் விவசாயி ஆதிமூலம். இவரது ஒரே மகன் வீரமணி (வயது - 20). பெயரில் மட்டும் வீரம் இல்லாமல் புதிய சாகசங்களை தினம் அரங்கேற்றம் செய்வதில் வீரமுள்ளவராகவும் உள்ளார்.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது கின்னஸ் சாதனைகள் பற்றித் தெரிந்து கொண்ட வீரமணி, ஏதாவது ஒரு கின்னஸ் சாதனை செய்ய வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினார்.

இதற்கு வீட்டில் அதிக எதிர்ப்பு இருந்ததால், தனியாக வாடகை வீடு எடுத்து தனிமையில் சாகசங் களைச் செய்யத் தொடங்கினார். ஆரம்பத்தில் செங்கல்லை தலையில் உடைப்பது, கருங்கல்லை வயிற் றில் வைத்து உடைப்பது எனச் சாசகங்கள் செய்தார். இவரது நண்பர்கள் எல்லாரும் செய்வதுதானே என அலட்சியப்படுத்தியதால் மனமுடைந்த வீரமணி, புதிய சாகசங்கள் செய்ய முயற்சித்தார்.

புதிய முயற்சியாக மூக்கு வழியாக வயரை விட்டு வாய் வழியாக இழுத்து மின்சாரத்தின் மூலம் பல்புகளை எரிய விட்டார். ஆச்சரியத்துடன் பார்த்த இவரது நண்பர்கள் ஊக்கம் அளித்ததையடுத்து, தன் சாகசங்களை புதுமைப்படுத்தத் தொடங்கினார். வாழைப்பழத்தில் பெற்றோல் ஊற்றிச் சாப்பிடுவது, கத்தியைத் தொண்டைக் குழியில் வைத்து வளைப்பது, ஓடும் வானை நாக்கால் நிறுத்துவது, மூக்கில் வயர் விட்டு வாய் வழியாக எடுத்து அதன் மூலம் ஒரு குடம் தண்ணீரைத் தூக்குவது, இரண்டு நிமிடங்கள் தூக்கில் தொங்குவது உட்பட 22 புதிய சாகசங்களைச் செய்துள்ளார்.

இந்தச் சாகசங்களைப் பார்த்த பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இவரை கின்னஸ் சாதனைக்கு வலியுறுத்தி வருகின்றனர். தொடர்ந்து வெளிநாடுகளில் இவரது சாதனை நிகழ்ச்சிகள் அரங்கேறுகின்றன. சாகசப் பட்டியலில் புதிய முயற்சியாக 'டியூப்' மூலம் மூக்கு வழியாக குளிர்பானம் குடிப்பது மற்றும் வாயில் பெற்றோலை ஊற்றி 3.85 மீற்றருக்கு நெருப்புச் சுவாலையை ஊதி கின்னஸ் சாதனையை முறியடிக்கும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளார்.

இந்தச் சாகசங்களால் உடல் ரீதியாக பெரிய அளவில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறும் வீரமணியின் உடலில் பல இடங்களில் பெரிய அளவுக்கு தீக்காயங்களும் வடுக்களும் உள்ளன. மனம் தளராமல் தொடர்ந்து கின்னஸில் இடம்பெற முயற்சிக்கும் கிராமத்து இளைஞனின் சாகசத்தை அனைவரும் பாராட்டிச் செல்கின்றனர்.

# பாக். ஆதரவாளர் ராகுல் காந்தி குஜராத் முதல்வர் குற்றச்சாட்டு!

மும்பை, டிச. 20

ராகுல் காந்தி பாகிஸ்தானின் ஆதரவாளர். பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கு ஆதரவாக அமெரிக்கத் தூதரிடம் ராகுல் கருத்துத் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது - என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தாக்கிப் பேசினார்.

காவி பயங்கரவாதம் என்று கூறுவதும், லஷ்கர் இயக்கம் அப்படி ஒன்றும் பயங்கரமானதல்ல என்று கூறியிருப்பதும் அவர் பாகிஸ்தானின் ஆதரவாளர் என்றே காட்டுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பேசியவை வருமாறு -

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஷ்கர்- இ- தொய்பா அமைப்புக்கு ஆதரவாக அமெரிக்கத் தூதரிடம் ராகுல் கருத்துத் தெரிவித்துள்ளார். இதுவே பல விடயங்களில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படக் காரணமாகவுள்ளது.

பாகிஸ்தான் பயங்கரவாத நாடு என்பது சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. இந் நிலையில் மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் பயங்கரவாத இயக்கத்துக்கு ஆதரவாக அமெரிக்கத் தூதரிடம் ராகுல் காந்தி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதனால் அவர் பாகிஸ்தானுக்கும், அங்குள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கும் ஆதரவாளரா என்று கேள்வி எழுகிறது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்தியா, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வரலாற்றைத் தெரிந்துகொண்ட பின் ராகுல் காந்தி பேச வேண்டும் என்று மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் உமா பாரதி கூறியுள்ளார்.

தேர்தலில் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக பயங்கரவாதிகளையும் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்ற காங்கிரஸின் நிலையைத்தான் ராகுல் காந்தியின் பேச்சு வெளிப்படுத்தியுள்ளது.


காஷ்மீரில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் ஆதரவை ஜவாஹர்லால் நேரு கோரியுள்ளார். இதேபோல குடியரசு தின அணிவகுப்பில் ஆர்எஸ்எஸ் அமைப்பு பங்கு கொள்ள ஆதரவு அளித்தவர் நேரு. அந்த அமைப்பு குறித்து கருத்துத் தெரிவிக்கும் முன் இதுபோன்ற வரலாற்று உண்மைகளை ராகுல் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும் உமா பாரதி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவைத் தேர்

இலங்கையில் உள்ள பழம்பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ் வரப்பெருமானின் ஆலயமும் ஒன்றாகும்.

மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய ஸ்தலச் சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்று தென்னகத்தில் தல மகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புப் பெற்றது. இத்தலம் இதனால் ஈழத்துச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயரினால் அழைக்கப்படுகின்றது.



இராமநாதபுரம் சேதுபதி மகாராஜாவின் கட்டளைப்படி சேதுக்கரையைக் காவல் செய்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்த அவர் தலயாத்திரையை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தார்.

பல தலங்களைத் தரிசித்த பின்னர் காரைநகருக்கு வந்தார். ஆனால் வியாவில் என்னுமிடத்தில் கோயில் கொண்டிருந்த ஐயனாரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவலை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. முன்னர் நல்ல நிலையில் இருந்த அந்த ஆலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு சிதைவுற்றிருந்தது.எனினும் தன் அடியவரின் மனக்குறையை அந்த ஆண்டவனே தீர்க்க முன்வந்தான். ''இங்கிருந்து வடகிழக்குத் திசையில் துர்வாரகிரிக்கு அண்மையில் ஓர் அரச மரத்தின் கீழ் நான் இருக்கிறேன்'' எனக் குரல் கொடுத்தான்.

அந்தக் குரலின்படி அரசமரத்தை தேடிக் கண்டுபிடித்து அங்கு தன்னிடமிருந்த சூலாயுதத்தை வைத்து வழிபடத் தொடங்கினார் அந்த அடியவர்.

ஆண்டி முனிவரின் பூசைச் சிறப்பால் ஊர் மக்கள் பலர் அங்கே வந்து வழிபாடாற்றத் தொடங்கினர். சில வாரங்களின் பின்னர் அந்த இடத்திற்கு தென்கிழக்குத் திசையில் திடீரென ஓர் ஒளி தெரிந்தது. இந்த அதிசயத்தைக் கண்ட ஆண்டி அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டினார். அவர் வணங்க விரும்பிய ஐயனார் உருவம் அங்கு வெளிப்பட்டது. அந்த ஐயனார் உருவத்தையும் சூலத்துடன் சேர்த்து சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டார்.

ஆண்டி நிலத்தைத் தோண்டிய இடம் 'ஆண்டிக் கேணி'' ஆனது. அவர் எடுத்த ஐயனார் ''ஆண்டிக் கேணி ஐயனார்'' ஆனார்.கனவில் கண்டபடி அவர் தேடிக் கண்டுபிடித்த அரச மரம் கோயிலின் தெற்கு வீதியில் இன்றும் செழிப்புடன் விளங்குகின்றது.

இறைவனே அடையாளப்படுத்திய இடம். தானாகத் தோன்றிய ஐயனார். முழுக்க முழுக்க இறைவனுக்கே தன்னை அர்ப்பணித்த ஆண்டி. இந்த மூன்றினதும் சங்கமம் அந்த இடம். அலை அடிக்கின்ற, அருட்காற்று வீசுகின்ற, அருள் ஒளி பிரசாசிக்கின்ற ஒரு திருத்தலமாக உருவாகிக் கொண்டிருப்பதை உணர்த்தியது. காரைநகர் கிழக்கில் களபூமியைச் சேர்ந்த அம்பலவி முருகர் என்னும் பெரியாரையும் அது கவர்ந்தது.

ஆண்டியுடன் இணைந்து கொண்ட அவர் ஐயனாருக்கு தாமும் கோயில் கட்டினார். வேதாகம விற்பன்னர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். ஊர்மக்களிடம் நெல் முதலிய பொருள்களையும் பெற்றுக் கோயில் பூசைகள் முறையாக நடக்க வழிசமைத்தார். ஐயனாரைச் சிவனாகப் பாவித்து திருவெம்பாவைத் திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். சிதம்பரத் திருத்தலத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஐயனார் ஆலயத்தின் பூசை, அபிஷேகம், திருவிழாக்களை நடத்தி வந்த அவருக்குச் சிவபெருமானுக்குத் தனியான ஓர் ஆலயம் எழுப்ப வேண்டும் என்ற எண்ணம் உதயமானது.

அம்பலவி முருகரின் பக்தி வைராக்கியத்தையும் நேர்மைத் திறனை-

**நாளை செவ்வாய்க்கிழமை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம் பெறவுள்ள திருவெம்பாவைத் தேரை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரம் செய்யப்படுகிறது.**

யும் எளிமையான வாழ்க்கையையும் நன்குணர்ந்த ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கினர். இதன் மூலம் கோயிலைக் கட்டி முடிப்பதற்கு உதவி செய்தனர்.

கோயிலைக் கட்டி முடித்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் நிறைவையும் அம்பலவி முருகருக்கு ஏற்பட்ட கவலை ஒன்று விரட்டியது. கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்குரிய சிவலிங்கத்திற்கு எங்கே போவது என்ற கவலை.

இலங்கையில் சிவலிங்கம் கிடைக்காது. அதனைச் செய்யக்கூடிய சிற்பாசாரியர்களும் இங்கு இல்லை. இந்தியாவிற்கு சென்றாலும் அதை யாரிடம் எங்கே எப்படிப் பெறலாம். கவலையில் கண்ணயர்ந்தார். அம்பலவி முருகர் கனவிலே தோன்றினார் கண்ணுதற் கடவுள்.''தில்லைச் சிதம்பரத்திற்கு வா, சிற்பாசாரியர் ஒருவருடைய வீட் டிலே பதினாறு லிங்கங்கள் இருக்கின்றன. நான் அடையாளம் காட்டும் லிங்கத்தை வாங்கிக்கொண்டு வந்து இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்.''சிதம்பரத்திற்குச் சென்று சிற்பாசாரி மார்களிடம் இருந்த லிங்கங்களை அம்பலவி முருகர் மிகுந்த பணிவுட னும் பயபக்தியுடனும் பார்த்த போது ஒரு லிங்கத்திலிருந்து காற்று எழுந்து வீசியது.அவருடைய கவனத்தை அது ஈர்த்தது அந்த சிவலிங்கத்தையே வாங்க முடிவு செய்தார் அம்பலவி முருகர்.

ஆனால் அதை வாங்குவதற் கென அவர் வைத்திருந்த பணம் சிற்பாசாரியார் கேட்ட பணத்திலும் மிகக்குறைவாகவே காணப்பட்டது. கவலை மீண்டும் அவருள்ளத்தைக் கௌவிக் கொண்டது. சித்தத்தை சிவன் பால் வைத்த அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஆனால் அடுத்த நாளே சிவலிங்கம் அம்பலவி முருகரின் கையிற் கிடைத்து விட்டது. சிற்பாசாரியாக அவரை அழைத்து அதைக்கொடுத்துவிட்டார்.


நடந்தது என்ன? மனத்திருந்த கருத்தறிந்து முடித்துவைக்கும் மன்று முதல்வன் மௌனமாக இருக்க வில்லை முதனாளிரவில் சிற்பாசாரியரின் கனவில் தோன்றி அம்பலவி முருகர் என் அடியவன் அவன் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவன் விரும்பிய சிவலிங் கத்தைக் கொடுத்துவிடு'' என்று கட்டளை இட்டுவிட்டான்.

சிவலிங்கப்பெருமான் அம்பாள் ஆகியோரின் அழகையும் அருட் சிறப்பையும் உணர்ந்த சிவாச்சாரியர்களுடன் பெரியோர்களும் சிவபெருமானுக்கு சுந்தரேஸ்வரன் என்றும் அம்மாளுக்குச் சௌந்தராம்பிகை என்றும் திருநாமங்கள் சூட்டித் தொழுது மகிழ்ந்தனர்.

இந்த காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் உலகெங்கிலும் வாழும் சைவத் தமிழ் மக்களிடையே ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயரும் புகழும் பெறுவதற்குச் சில ஆண்டுகள் எடுத்ததாயினும் இந்த இரு பெருந் தலங்களுக்கிடையேயான ஆத்மீக அருள் தொடர்புக்கு அதன் ஆரம்ப காலத்திலேயே அத்திவாரம் இடப் பட்டுவிட்டது.

அம்பலவி முருகரின் வாரிசுகளே அறங்காவலர்களாக இருந்துவந்துள்ளனர். இப்போதைய அறங்காவலர்களான ஆ. அம்பலவிமுருகர், மு.சுந்தரலிங்கம் ஆகியோரும் அவர் வழித் தோன்றல்களே.ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கிரியை - பூசை, திருவிழா முறைகள் எவ்வித மாற்றங்கள் குழப்பங்களின்றி ஒரே சீராக இன்றும் பின்பற்றப்பட்டு வருவதற்கு இந்த ஒரே பரம்பரைத் தொடர்பே பிரதான காரணமாகும்.பங்குனி மாதத்தில் சிவனுக்கு நடை பெறும் பெருந்திருவிழாவில் தேரேறி வரும் பஞ்சமூர்த்திகளில் நடு நாயக மாகத் திகழ்பவர் சோமஸ்கந்த மூர்த்தி சிவபெருமானின் எழில் உருவமும் சிதம்பரத்திலேயே வார்க்கப்பட்டது. பல தடவைகள் வார்ப்பு வேலை நடை பெற்றும் உருவம் சரியான முறையில் அமையவில்லை.அதை அவதானித்துக் கொண்டிருந்த அம்பலவி முருகர் கண்களில் நீர்மல்கதன் காதுகளில் இருந்த கடுக்கண்களைக் கழற்றி அவற்றையும் சேர்த்து உருக்கி விக்கிரகத்தை உருவாக்குமாறு சிற்பாசாரியரிடம் கொடுத்தார். கடுக்கண்கள் சேர்க்கப்பட்டவுடன் அமைந்து விட்டது சோமாஸ் கந்தர் விக்கிரகம்.

அடுத்த கணமே அம்பலவி முருகரின் உயிரும் பிரிந்து விட்டது. சோமாஸ்கந்த மூர்த்தத்திலே அம்பலத் தான் என்ற சிவனுக்குப் பக்கத்தில் இருப்பவன் முருகர் அல்லவா, தன் அடியவனுக்கு உரிய இடத்தினை அம்பலத் தான் அம்பலவி முருகருக்குக் கொடுத்து விட்டான். அனைத்து மக்களையும் கவரும் ஆதி நாயகன்- ஆதிரை நாயகன், ஆனந்த நடராசனின் அற்புதத் திரு வுருவம் இந்த திண்ணபுரம் சிவன் கோயிலிலேயே வார்க்கப்பட்டது. தமிழ் நாடு சோழ வந்தான் என்ற இடத்தைச் சேர்ந்த குருசாமி என்பவர் சாமிக்கே குருவாய் நின்று சாமியை உருவாக்கியிருக்கிறார்.



பதஞ்சலி, வியாக்கிரகபாத முனிவர்களுடன் கூடிய நடராஜப் பெருமானின் அழகுத் திருவுருவம் இந்தியாவிலேயே ஒருசில தலங்களில் மட்டும் தான் இருக்கின்றனவாம். அழகொளிரும் இத்திருவுருவத்தை தரிசிப்பதற்கென்றே இத்தலத்திற்குப் பலர் வருகின்றார்கள்.

விக்கிர அமைப்பு முறையில் நிரம்பிய அறிவு பெற்ற பாஸ்கர தொண்டமான், சித்தாந்த சிகாமணி க.வச்சிர வேலு முதலியார், திருமுருக கிருபானந்த வாரியார், திருவாவடுதுறை ஆதின வித்துவான் வீர.சுப்பிரமணியம், வித்துவான் தண்டபாணி தேசிகர், கி.வா.ஜகந்நாதன், திருவாவடுதுறை ஆதீனத்தின் தற்போதைய குருமுதல்வர் சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நடராசப் பெருமானின் அமைப்பிலும், அழகிலும் அருள் ஒளியிலும் தம் நெஞ்சைப் பறிகொடுத்த தமிழ் நாட்டுப் பெருமக்களுட் சிலராவர்.

திருவெம்பாவைக் காலத்தில் தேரேறி வரும் பஞ்சமூர்த்திகளில் நடு நாயகனாக விளங்கும் நடராசப் பெருமானின் ஆனந்த நடனத்தையும் அன்றிரவு வசந்தமண்டபத்தில் நடைபெறும் ஆருத்-

**தர்ணிகா**

திரா அபிஷேகத்தையும் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் கொடுத்துவைத்தவர்களே. இரட்டைக் கோயில்கள் என்று சொல்லக்கூடியவாறு இருக்கும் சிவன் உமையாள் சந்நிதிகள் அழகான தனித்தனி இராஜ கோபுரங்களுடன் திகழ்கின்றன. ஆடல் வல்லானின் 108 வகையான நடனத் தோற்றத்தைக் காட்டும் சிற்பங்கள் ஆலயத்தின் உள் வீதியை அலங்கரிக்கின்றன.

மூன்றாம் வீதி யான தேரோடும் வீதி ஒரு கிலோமீற்றர் நீளமுடையது. பங்குனி மாதப்பெரு விழாவில் வெயில் சுட்டெரித்தாலும் திருவெம்பாவை நாள்களில் வீதியே வெள்ளத்தில் மூழ்கினாலும் பஞ்சரத பவனி ஒழுங்காக நடைபெறுவது வழமையாகிவிட்டது.

ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்ட அம்பாள் பெருந்திருவிழாவில் அம்பாளின் தனித்தேரை இழுப்பதில் அடியவர்களிடையே போட்டிதான். திருவெம்பாவை காலத்தில் காலை மாலை இரு வேளைகளிலும் திருவெம்பாவை ஓதப்படுவது எல்லா நாள்களிலும் ஒருவரே அதை ஓதுவது இரு வேளைகளிலும் மாணிக்க வாசகர் வீதிவலம் வருவது நீண்டகாலமாக இங்கே நடந்து வருபவை. இந்த ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள மணிவாசகர் சபை, மாணிக்க வாசகர் மடாலயம், ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம் என்பன பல்வேறு அறப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கத் துடிக்கிறது அமெரிக்கா; விக்கிலீக்ஸ் அசேஞ்ச் முறைப்பாடு



லண்டன், டிசெ. 20

அமெரிக்கா என்னைப் பழிவாங்கத் துடிக்கிறது என்று 'விக்கிலீக்ஸ்' நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

லண்டனில் வீட்டுக்காவலிலுள்ள அசேஞ்ச் சனிக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது இவ்வாறு முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:-

எனது இணையதளத்தின் செயற்பாட்டால் அமெரிக்கா அதிருப்தி அடைந்துள்ளது. என்னை எப்படியாவது பழிவாங்கவேண்டும் என்று துடிக்கிறது. வேவு பார்த்ததாக என் மீது வழக்குப் பதிவு செய்யத் தயாராகி வருகிறது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளது. எனக்கு எதிராகச் சட்டவிரோதமான புலனாய்வு விசாரணையையும் செய்து வருகிறது. என் மீது வழக்குப் பதிவுசெய்து லண்டனிலிருந்து என்னை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதையெல்லாம் பார்க்கும்போது எனது சுதந்திரத்தை பறிக்க அந்நாடு முனைப்போடு செயல்படுவது உறுதியாகிவிட்டது.

என்மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டு அபத்தமானது. விசாரணைக்காக நான் சுவீடன் சென்றால் அங்கிருந்து என்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

என்னையும், எனது ஊழியர்களையும் கைதுசெய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

- இப்படி அசேஞ்ச் கூறியுள்ளார்.

ஸ்வீடனில் பாலியல் பலாத்காரம் செய்தார் என ஜூலியன் அசேஞ்சுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து அவர் லண்டனில் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு சில தினங்களுக்கு முன்னர் பிணை வழங்கப்பட்டது. பிணை கிடைத்தும் அவர் விடுவிக்கப்படவில்லை. லண்டனில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 103 வயது பிரி. மூதாட்டி பேஸ்புக்கில் இணைவு

லண்டன், டிசெ. 20

உலகிலேயே அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள பேஸ்புக் இணையதளத்தில் பிரிட்டனைச் சேர்ந்த 103 வயதான பெண்ணொருவர் இணைந்துள்ளார்.

லண்டனில் வசிக்கும் லில்லியன் லோவி என்ற பெண்மணி தன்னுடைய 7 பேரக் குழந்தைகள், 13 கொள்ளுப் பேரக் குழந்தைகள் உதவியுடன் பேஸ்புக்கில் இணைந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது இதனை பெரிதும் விரும்புகிறேன். மேலும் ஒவ்வொரு பாட்டி தாத்தாக்களும் இதனை பயன்படுத்துவதன் மூலம் குடும்பத்துடன் சந்தோசமாக இருக்க முடியும் என்று குறிப்பிட்டார்.




## பட்டாசு லொறி விபத்து: 9 பேர் பலி; 9 பேர் காயம்!

சீனாவில் பட்டாசுகளை ஏற்றிச்சென்ற லொறி மின்கம்பத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர், 9 பேர் காயமடைந்தனர். இந்த லொறியில் 600 பெட்டிகளில் பட்டாசுகள், மத்தாப்புகள் நிரப்பப்பட் டிருந்தன.

மத்திய சீனாவிலுள்ள நிங்ஸியாங் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்த விபத்து நிகழ்ந்தது. மின் கம்பத்தின் மீது லொறி மோதியதால் வயர் அறுந்து விழுந்து தீப்பொறி பரவியது. இதனால் லொறியிலிருந்த பட்டாசுகள் வெடித்தன.

லொறி முழுவதும் எரிந்து சாம்பலானதோடு பட்டாசுகள் வெடித்துச் சிதறியதில் அருகிலிருந்த வீடுகளும் சேதமடைந்தன. விபத்து நிகழ்ந்த 100 மீற்றர் சுற்றளவுக்குள் இருந்த கட்டடங்களில் சேதம் கடுமையாக இருந்தது.

இந்த விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, விர்ஜினி மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலைக்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுடன் பேசி மகிழ்கிறார்.

## மெக்ஸிக்கோ சிறையிலிருந்து 140 கைதிகள் தப்பி ஓட்டம்

மெக்ஸிக்கோ சிட்டி, டிசெ. 20

அமெரிக்காவுக்கு அருகேயுள்ள மெக்ஸிக்கோவில் அமெரிக்க எல்லை அருகேயுள்ள மொன்டேரி என்ற இடத்திலுள்ள சிறையில் அடைக்கப்பட்டு இருந்த 140இற்கும் மேற்பட்ட கைதிகள் சிறையின் பிரதான வாசல் வழியாக தப்பிச் சென்றுள்ளனர்.

ஒரு பொலிஸ் நிலையத்துக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது குண்டு வீசி சிலர் தகர்த்தனர். இதன் கரணமாக 2 பேர் காயம் அடைந்தனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இது நடந்த சிறிது நேரத்தில் சிறையின் பிரதான வாசல் வழியாக கொஞ்சம் கொஞ்சமாக கைதிகள் வெளியேறி தப்பி ஓடிவிட்டனர். இந்த சம்பவங்களுக்கு பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது தெரியவில்லை. தப்பி ஓடிய கைதிகளை பொலிஸார் தேடிவருகிறார்கள்.

# போர் ஒத்திகை தொடரும் பட்சத்தில் தென்கொரியா மீது போர் தொடுப்போம்

## வடகொரியா கடும் எச்சரிக்கை

சியோல், டிசெ.20

வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்குமிடையே பல ஆண்டுகளாகக் கருத்து வேறுபாடு நிலவிவருகிறது. இதனால் இருநாடுகளுக்குமிடையே அடிக்கடி பதற்றமான சூழ்நிலை நிலவிவருகிறது.

இந்த நிலையில் சமீபத்தில் தென்கொரியாவின் யான்பியாஸ் தீவு மீது வடகொரியாவின் கடற்படை பீரங்கித் தாக்குதல் நடத்தியது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தென்கொரிய இராணுவமும் வடகொரியாவைத் தாக்கியது.

இதனால் அங்கு போர் பதற்ற சூழ்நிலை உருவானது. எனவே, உலக நாடுகள் இதில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தின. இதற்கிடையே தென்கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்தது. தென் கொரியாவுடன் சேர்ந்து போர் ஒத்திகை நடத்தியது. இதனால் அங்கு மீண்டும் பதற்றம் அதிகரித்தது.

இந்த நிலையில் கடலில் தட்வெப்ப நிலை சரியில்லாததால் போர் ஒத்திகை நிறுத்தப்பட்டது. இதையடுத்து, மீண்டும் அமைதி நிலவிய நிலையில் மறுபடியும் போர் ஒத்திகையை ஆரம்பிக்க தென்கொரியாவும், அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன. இது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர் ஒத்திகை தொடரும் பட்சத்தில் தென்கொரியா மீது போர் தொடுப்போம் என வடகொரியா அறிவித்துள்ளது.

எனவே, போர் ஒத்திகையை நிறுத்தி அமைதி ஏற்படுத்தும்படி தென்கொரியாவை ரஷ்யாவும், சீனாவும் வலியுறுத்தி வருகின்றன. மேலும் போர் பதற்றத்தை ஏற்படுத்தவேண்டாம் என வடகொரியாவிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆனால் போர் ஒத்திகை தொடரும் என தென்கொரியா அறிவித்துள்ளது. எனவே, தட்பவெப்ப நிலை சரியானதும் நாளையோ அல்லது நாளை மறுதினமோ மீண்டும் கூட்டுப் போர் ஒத்திகை தொடரும் என அறிவித்துள்ளது.

ஆனால், வடகொரியாவோ தனது நிலையில் பிடிவாதமாக உள்ளது. இதை நாங்கள் எளிதாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. போர் ஒத்திகை தொடர்ந்தால் தென்கொரியா மீது மீண்டும் தாக்குவோம் என்று அறிவித்துள்ளது.

தென்கொரியாவின் யான்பியாங் தீவில் வாழும் மக்கள் பெரும் கலக்கத்தில் உள்ளனர். போர் தொடுக்கவேண்டாம் என்று 2 இலட்சம் வாசகங்கள் அடங்கிய பலூன்களை வடகொரியா கடல் எல்லையில் பறக்கவிட்டுள்ளனர்.

## பங்களாதேஷில் படகு கவிழ்ந்து 35 பேர் பலி 20 பேரை காணவில்லை

டாக்கா, டிசெ.20

பங்களாதேஷில் பயணிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 35 பேர் பலியானார்கள். 20 பேரைக் காணவில்லை.

சுனம்கான்ஜ் மாவட்டத்தில், சனிக்கிழமை நள்ளிரவு 80 பயணிகளை ஏற்றிக்கொண்டு மண் ஏற்றிச் செல்லும் சரக்கு படகு ஒன்று சுர்மா ஆற்றில் சென்று கொண்டிருந்தது.

திடீரென படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினரும், கிராம மக்களும் இணைந்து ஆற்றிலிருந்து 35 சடலங்களை மீட்டனர். 20 இற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை.

# ஐரோப்பாவில் கடும் பனிப்பொழிவு: ஆயிரம் விமானசேவைகள் ரத்து!

பேர்ளின், டிசெ.20

குளிர்காலம் என்பதால் தற்போது ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு பனி கடுமையாகக் கொட்டுகிறது. இதைத்தொடர்ந்து சாலை போக்குவரத்து, விமானப்போக்குவரத்து ஆகியவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை காலை முதல் இரவு வரை கடுமையான பனிப்பொழிவு நிகழ்ந்தது. இதனால் ஜேர்மனியின் பேர்ளின் விமானநிலையம் பனியால் மூடப்பட்டது. எனவே, அங்கு 600 விமானங்களின் தரை இறக்கம் இரத்துச் செய்யப்பட்டன.

பிராங்பட் விமானநிலையத்திலும், ஆம்ஸ்டார் பாமின்சியோல் விமானநிலையத்திலும் இதேநிலை நீடித்தது. எனவே அங்கு 200இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

இதனால் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். நீண்ட நேரம் விமானநிலையங்களில் காத்திருந்தனர். நாலரை மணிநேர தாமதத்துக்குப் பின்னர் பயணிகள் புறப்பட்டுச் சென்றனர்.

பிரிட்டனில் பனிக் காற்று வீசியது. இதனால் வழக்கத்தைவிட கடும் குளிர் நிலவியது. ரயில்சேவைகள் நிறுத்தப்பட்டன; பாடசாலைகள் மூடப்பட்டன. சாலை வழிப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. வெள்ளிக்கிழமை காலை பெல்பாஸ்ட் சர்வதேச விமானநிலையம் மூடப்பட்டது.

கடும் பனிப்பொழிவு காரணமாக ஜேர்மனியில் போக்குவரத்து நெருக்கடியும், விபத்துகளும் ஏற்பட்டன. இவற்றில் 3 பேர் பலியானார்கள். 25இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டி: யாழ்ப்பாணக்கல்லூரி அணி சம்பியன்

வலி.வடக்கு, டிசெ, 20

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச்சங்கம் யாழ். மாவட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப்பிரிவுப் பெண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் மூன்று பாடசாலை அணிகள் லீக்முறையில் மோதிக் கொண்டன.



ஒவ்வொரு பாடசாலையும் இரண்டு போட்டிகளில் மோதிக் கொண்டதன் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளைக் கொண்டு சம்பியன் அணித் தெரிவு இடம் பெற்றது.

இதனால் தான் விளையாடிய இரண்டு போட்டிகளையும் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனாகவும், உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (எ-86)

# பாடசாலைகளுக்கு உபகரணங்கள்; உதைபந்தாட்ட லீக்குகள் பாராட்டு

வலி.வடக்கு, டிசெ, 20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமையிட்டு பாடசாலைகளும் உதைபந்தாட்ட லீக்குகளும் பாராட்டி உள்ளன.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் வைத்து அண்மையில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்கு கொண்ட பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட் டன. அத்துடன் ஒரு தொகை காலணிகளும் வழங்கப்பட்டன.




இந்த உபகரணங்கள் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப் பயிற்சிகளை வழங்கிய ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரான்ஸ் பெக்கன் பாவா மற்றும் கொல்கோ ஒபமன் ஆகியோ ரின் உதவியின் மூலம் பெறப் பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

யாழ்.உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியன இந்த முயற்சியை பெரிதும் பாராட்டியுள்ளன. (எ-86)

# சென்.ஜோன்ஸ், யாழ்ப்பாணக்கல்லூரி ஹொக்கி இறுதியாட்டத்துக்குத் தகுதி

வலி.வடக்கு, டிசெ, 20

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச்சங்கம் நடத்திய யாழ்.மாவட்டப்பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கு இடையேயான ஹொக்கி சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டிகளில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன வெற்றி பெற்றுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இந்த அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன.


இதன்போது மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற அரையிறுதிப் போட்டி ஒன்றில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் யாழ்ப்பாணக்கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரியை வெற்றி கொண்டது. இந்த வெற்றிகளின் மூலம் இவ்விரு அணிகளும் இறுதிப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. (எ-86)

# நான் பார்த்ததிலேயே மோசமான வீரர் றொனால்டோ - கிளாஸ்போ

போர்த்துக்கல் மற்றும் ரியல்மாட்ரிக் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ நான் பார்த்ததிலேயே மோசனமான கால்பந்து வீரர் என்று 'பிபா' நடுவர் கிளாஸ்போ லார்சன் கூறியுள்ளார்.

பிரபல டென்மார்க் உதைபந்தாட்ட நடுவர் கிளாஸ்போ லார்சன் கடந்த 14 ஆண்டுகளாக சர்வதேச உதைபந்தாட்ட நடுவராகப் பணியாற்றி வருகிறார்.இவர் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் போர்த்துக்கல் கப்டனும் ரியல்மாட்ரிட் வீரருமானகிறிஸ்டியானோ றொனால்டோ ஏமாற்றும் எண்ணத்துடன் களத்தில் அடிக்கடி 'டைவ்' அடிப்பவர் என்று குற்றம் சுமத்தியுள்ளார்.



றொனால்டோ குறித்து அவர் கூறுகையில், ''சமீபத்தில் ஏ.சி.மிலானுக்கு எதிரான சம்பியன்ஸ் லீக்ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் மோதியது. இந்த போட்டியில் அடிக்கடி றொனால்டோ 'பிறிக் கிக்' கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'டைவ்' அடித்த வண்ணம் இருந்தார். ஆனால் அவரது ஒவ்வொரு அசைவையும் நான் உண்ணிப்பாகக் கண்காணித்துக் கொண்டே இருந்தேன். நான் 'ப்ரீகிக்' கொடுக்கவில்லை என்றால் என்னைப் பார்த்து ஒரு புன்முறுவல் செய்வார். அதுவும் சொந்த மைதானத்தில் விளையாடினால் அவரிடம் 'டைவ்' அதிகமாக இருக்கும். நான் எனது நடுவர் பணியில் பார்த்த மிக மோசமான ஏமாற்றும் எண்ணம் கொண்ட வீரர் றொனால்டோதான் - என்றார்.

# சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான2010ஆம் ஆண்டுக்கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. இப் போட்டிகள் நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில்ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் 'பி' விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்ற லைட்ஸ் 'ஏ' விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் சென்றலைட்ஸ் 'ஏ' விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் 'பி' விளையாட்டுக் கழகத்தை 84:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாது ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் 'ஏ' விளையாட்டுக் கழகமும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழமும் மோதிக் கொண்டன.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொலிஸ் ரார்'ஏ' எதிர்த்துக் களமிறங்கிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 65:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்து வெற்றியைத் தனதாக்கியது. (எ-23)

# கூடைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று நடைபெறும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் கூடைப் பந்தாட்டக் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது. இதில் இன்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு

ஆண்கள் பிரிவு

காலை 8 மணி சென்றலைட்ஸ் பி விளையாட்க்கழகம் எதிர் ஜொலிஸ்ரார். ஏ விளையாட்டுக் கழகம்.

காலை 9மணி சென்றலைட்ஸ் ஏ விளையாட்டுக் கழகம் எதிர் யாழ் கேகஸ் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி ஓல் கோட்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கோப்பாய் விளையாட்டுக் கழகம்.

பெண்கள் பிரிவு

பிற்பகல் 3.30 மணி பட்டர்பினை விளையாட்டுக் கழகம் எதிர் எச்.எல்.எஸ்விளையாட்டுக்கழகம்.(எ-23)

# ஐ.பி.எல். தொடர் சிக்கலில்

நான்காவது ஐ.பி.எல்., தொடருக்கான அணிகள் மற்றும் ஏலம் தொடர்பாக பெரும் குழப்பத்தில் உள்ளது இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி).

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 'ருவெண்ரி-20' போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நான்காவது ஐ.பி. எல்., தொடர் அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்க உள்ளது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள கொச்சி, புனே அணிகளை சேர்த்து இந்த முறை 10 அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உரிமையாளர்கள் குறித்த சரியான தகவல்களை தெரிவிக்க மறுத்ததாக, ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் அணிகள் மீது பி.சி.சி.ஐ. குற்றம் சாட்டியது. இதனையடுத்து கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி இவ்விரு அணிகளின் உரிமையை அதிரடியாக ரத்து செய்தது. இதனால் வழக்கம் போல 8 அணிகள் மட்டுமே பங்கேற்கும் என பி.சி.சி.ஐ., அறிவித்து அட்டவணையும் வெளியிட்டுவிட்டது. இதன் படி அடுத்த ஆண்டு ஏப்பிரல் 8 ஆம் திகதி, 4 ஆவது ஐ.பி. எல்., தொடர் ஆரம்பமாகவுள்ளது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பி.சி.சி.ஐ., யின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ராஜஸ்தான் றோயல் மற்றும் கிங்ஸ் லெவன் அணிகள் மும்பை உயர் நீதிமன்றம் வழக்கு தொடர்ந்தன. இதன் முடிவில், இரு அணிகளையும் ரத்து செய்த பி.சி.சி.ஐ., யின் முடிவுக்கு தடை விதித்தது மும்பை உச்ச நீதிமன்றம் இதனையடுத்து இவ்விரு அணிகளும் 4 ஆவது ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் தகுதியை பெற்று விட்டன. இதனால் பி.சி.சி.ஐ., பெரும் குழப்பத்தில் உள்ளது. மும்பையில் நடந்த பி.சி.சி.ஐ., செயற்குழு கூட்டத்தில், ராஜஸ்தான், பஞ்சாப் அணிகளின் வழக்கு தொடர்பாக, உயர் நீதிமன்றம் மேல் முறையீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால் அங்கும் இதே நிலை நீடித்தால் மேலும் சிக்கல் ஏற்படும். இதனால் உச்ச நீதிமன்றம் மேல்முறை யீடு செய்யும் எண்ணத்தை பி.சி.சி.ஐ., கைவிடவும் வாய்ப்பு உள்ளது. இதனால் 4 வது ஐ.பி. எல்., தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மொத்தம் 74 போட்டிகள் நடக்கும். தவிர, திட்டமிட்ட படி, அடுத்த ஆண்டு ஜன. 8 ஆம் 9ஆம் தேதிகளில், வீரர்கள் ஏலத்தை நடத்தவும் பி.சி.சி.ஐ., முடிவு செய்துள்ளதாகசெய்திகள் வெளியாகி உள்ளன.

# நான் அடித்த கோல்கள் எனது பாட்டிக்கு சமர்ப்பணம் - மேசி



தான் அடித்த கோல்கள் அனைத்தையும் தனது பாட்டிக்கு சமர்ப்பணம் செய்வதாக பார்சிலோனா சுப்பர் ஸ்டார் லயனல் மேசி கூறியுள்ளார்.

பார்சிலோனா வீரர் லயனல் மேசி ஸ்பெயினில் பள்ளிக் குழந்தைகளைச் சந்தித்து உரையாடினார்.இந்த நிகழ்ச்சிக்கு யூனிசெப் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியின் போது குழந்தைகள் மேசியிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தன. குழந்தைகளின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்ததாவது,

உதைபந்தாட்டத்தை நான் நேசித்தேன் அதனால் தான் நீங்கள் விரும்பும் வகையில் இப்போதும் விளையாட முடிகிறது. உதைபந்தாட்டத்தை எனக்கு அறிமுகப்படுத்தியது எனது பாட்டி. அவர்தான் சிறு வயதில் என்னை தினமும் உதைபந்தாட்ட மைதானத்திற்கு அழைத்துச் செல்வார். எனக்குப் பல நுணுக்கங்களையும் கற்றுத் தருவார், ஆலோசனைகளையும் வழங்குவார். ஆனால் இப்போது நான் விளையாடுவதை அவரால் நேரில் காணமுடியாத நிலை.

அவர் ஆர்ஜென்டீனாவில் இருக்கிறார். நான் ஸ்பெயினில் விளையாடுகிறேன்.ஆனால் இன்னமும் எனது பாட்டி எனக்கும் எனது தாய் தந்தைக்கும் உதவியாகத்தான் இருக்கிறார்.நான் அடித்த அத்தனை கோல்களையும் அவருக்குச் சமர்ப்பணம் செய்கிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 207 ஓட்டங்கள் பின்னிலையில் இந்தியா

செஞ்சூரியன்,டிசெ.20

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், நேற்று மதியம் உணவு இடைவேளையின் போது இந்திய அணி, 4 விக்கெட்டுகளை மாத்திரம் கைவசம் வைத்துக்கொண்டு 207 ஓட்டங்கள் பின்னிலையுடன் காணப்பட்டது. அப்போதைய கள நிலவரப்படி இந்திய அணியின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

இந்திய - தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றுவருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 136 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

பின்னர் தனது இனிங்ஸை ஆடிய தென்னாபிரிக்க அணி, 2ஆவது நாள் ஆட்ட நேரம் முடியும்போது, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 366



ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அம்லா (116), கலிஸ் (102) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. அம்லா, கலிஸ் ஆகியோர் தொடர்ந்து ஆடினார்கள். இருவரும் இந்திய வீரர்களின் பந்து வீச்சை சிரமமின்றி அடித்து ஆடினார்கள். சிறப்பாக ஆடிய அம்லா (140), இஷாந்த் ஷர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் டிவில்லியர்ஸ், கலிஸுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்திய பந்து வீச்சை நாலாபுறமும் விளாசித்தள்ளி ஓட்டங்களைக் குவித்தனர். அதிரடியாக ஆடிய டிவில்லியர்ஸ் விரைவில் சதம் கண்டார்.

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்த கலிஸ் இரட்டைச் சதத்தைக் கடந்தார். அவர் 267 பந்துகளில் 15 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் இரட்டைச் சதத்தைக் கடந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டிவில்லியர்ஸ் 129 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர், தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 620 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அப்போது கலிஸ் (201) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

பின்னர், 484 ஓட்டங்கள் பின்னிலையுடன் இந்திய அணி 2ஆவது இனிங்ஸை ஆரம்பித்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கம்பீர் - ஷேவாக் ஜோடி சிறப்பாக ஆடியது.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு ஷேவாக் 63 ஓட்டங்களுடனும், கம்பீர் 80 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர், போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முன்னதாகவே முடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடிவின்போது இந்திய அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

டிராவிட் 28 ஓட்டங்களுடனும், இஷாந்த் ஷர்மா 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, விக்கெட்டுகளை விரைவாகவே இழக்கத் தொடங்கியது.

டிராவிட் (43), இஷாந்த் சர்மா (23), லக்ஷ்மன் (8), ரெய்னா (5) ஆகியோர் உணவு இடைவேளைக்கு முன்னரே ஆட்டமிழந்து சென்றனர்.

நேற்று உணவு இடைவேளையின்போது, இந்திய அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 277 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்போதைய நிலவரப்படி 207 ஓட்டங்கள் பின்னிலையுடன் காணப்பட்டது. இன்று ஒருநாள் ஆடவேண்டிய நிலையுள்ளதாலும், இந்திய அணியிடம் கைவசம் 4 விக்கெட்டுகள் மாத்திரமே உள்ளதாலும் அந்த அணியின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

# ஆஸி. அணி தக்க பதிலடி!

பேர்த்,டிசெ.20

பேர்த்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் மூன்றாவது போட்டியில் 267 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றிமூலம், அடிலெய்டில் வைத்து இங்கிலாந்திடம் வாங்கிய அடிக்கும் தக்க பதிலடி கொடுத்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, தனது முதலாவது இன்னிங்ஸை 268 ஓட்டங்களுக்குள் சுருட்டிக்கொண்டது.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, 187 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தனது இன்னிங்ஸை முடித்துக்கொண்டது.

பின்னர், 81 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, ஹஸி, வோட்ஷன் ஆகியோரின் சிறப்பான ஆட்டம் காரணமாக ஓரளவு ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், 391 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, ஆரம்பம் முதல் தடுமாறத் தொடங்கியது.

ஆஸ்திரேலியப் பந்துவீச்சுத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் திணறியது.

வீரர்கள் அனைவரும் சிறிது நேரம் நின்று ஆடிவிட்டு களத்தை விட்டுச் சென்றனர். அந்த அணி சார்பாக, டிராவிட் மட்டுமே ஆகக்கூடுதலாக 31 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

ஏனைய வீரர்களுள், ஸ்டிரஸ் (15), குக் (13), கொலிங்வூட் (11), பெல் (16), பிரையர் (10) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்ட எண்ணிக்கையுடன் 'பெவிலியன்' திரும்பினர்.

இறுதியில் இங்கிலாந்து அணி, 123 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால், ஆஸ்திரேலிய அணி, 267 ஓட்டங்களால் வெற்றிபெற்ற அதேவேளை, இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கண்ட தோல்வியால் ஏற்பட்ட சர்ச்சைகளுக்கும் தற்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், அபாரமாகச் செயற்பட்ட ஹரிஸ் 6 விக்கெட்டுகளையும், ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும், ஹில்பனாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய வீரரான ஜோன்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

## பெக்காமுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



லண்டன்,டிசெ.20

இங்கிலாந்தின் உதைபந்தாட்ட நட்சத்திரமான டேவிட் பெக்காமுக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது ஒன்றை பி.பி.ஸி. வழங்கியுள்ளது.

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான டேவிட் பெக்காம், 115 போட்டிகளில் பங்கேற்றுள்ள அதேவேளை, 59 போட்டிகளில் அணியின் தலைவராகச் செயற்பட்டுள்ளார். 10 ஆண்டுகள் (1993-2003) மான்செஸ்டர் யுனைடெட் கழக அணிக்காக விளையாடியுள்ளார். இவரது சிறப்பான ஆட்டம் காரணமாக 6 தடவைகள் 'பிரீமியர் லீக்' கிண்ணத்தை மான்செஸ்டர் கைப்பற்றி அசத்தியது.

அதன்பின்னர் ரியல் மாட்ரிட் (2003-2006) அணிக்காக விளையாடிய இவர், 'ஸ்பானிஷ் லீக்' கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாகத் திகழ்ந்தார்.

தற்போது அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் காலக்சி கழக அணிக்காக விளையாடி வருகிறார்.

2001ஆம் ஆண்டு பி.பி.ஸி. வழங்கிய உலகின் மிகச் சிறந்த வீரர் விருது வென்ற இவர், தற்போது வாழ்நாள் சாதனையாளர் விருதையும் வென்றுள்ளார். பர்மிங்ஹாமில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விழாவில், பெக்காமுக்கான இந்த விருது வழங்கப்பட்டது.

# கொழும்பு நகர வீதிகளில் நேற்று மக்களின் பார்வைக்கு உலகக் கிண்ணம்

கொழும்பு, டிச. 20



2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றிபெறும் அணிக்கு வழங்கப்படவுள்ள கிண்ணம், மக்கள் பார்வைக்காக கொழும்பு வீதிகளில் நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான கிண்ணம், போட்டிகளை நடத்தும் ஒவ்வொரு நாட்டிற்கும் கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இக்கிண்ணம், கொழும்பு வீதிகளில் நேற்று மக்கள் பார்வைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. வாகனம் ஒன்றில் வைக்கப்பட்ட உலகக் கிண்ணம், பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் பல வாகனங்கள் புடை சூழ, இலங்கைத் தேசியக் கொடி நாலாபுறமும் பறக்க மருதானை முதல் மொரட்டுவை வரை எடுத்துச் செல்லப்பட்டது. உலகக் கிண்ணம் தத்தமது வீதி வழியாக வருவதை

# உலகக் கிண்ணத் தொடரில் டிராவிட்டுக்கு இடம் இல்லை

மும்பை,டிசெ.20

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய உத்தேச அணியில் டிராவிட், இர்பான் பதான் ஆகியோருக்கு இடம் கிடைக்கவில்லை. இதனால், இவர்கள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடமாட்டார்கள் என்பது உறுதியாகியுள்ளது.

10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடருக்கான 30 பேர் கொண்ட இந்திய உத்தேச அணி மும்பையில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் ஒருநாள் போட்டிக்கான அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டுவரும் மூத்த வீரரான டிராவிட்டுக்கு, உலகக் கிணண் அணியிலும் இடம் வழங்கப்படவில்லை. அதேபோல, வேகப்பந்து வீச்சாளரான இர்பான் பதானுக்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை. புதுமுக வீரராக நடுவரிசைத் துடுப்பாட்ட வீரரான ரஹானே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றொரு இளம் வீரரான புஜராவுக்கும் அணியில் இடம் கிடைத்துள்ளது.



தமிழகத்தைச் சேர்ந்த எம்.விஜய், தினேஷ் கார்த்திக், சுழற்பந்து வீச்சாளரான அஷ்வின் ஆகியோருக்கும் அணியில் இடம் கிடைத்திருக்கிறது.

சமீபத்தில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான 4ஆவது ஒரு நாள் போட்டியில் 98 பந்துகளில் 123 ஓட்டங்களை விளாசிய யூசுப் பதான், நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி 2 ஆட்டங்களிலும் அரைச் சதம் அடித்த பார்த்தீவ் பட்டேல் ஆகியோரும் அணியில் இடம்பிடித்துள்ளனர். 30 பேர் கொண்ட உத்தேச அணியிருந்து 15 பேர் கொண்ட இறுதி அணி ஜனவரி 19ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இந்திய உத்தேச அணி விவரம் வருமாறு:-

டோனி, ஷேவாக், டெண்டுல்கர், கெளதம்கம்பீர், விராத் கோஹ்லி, யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன்சிங், சஹீர்கான், நெஹ்ரா, ஸ்ரீசாந்த், முனாப்பட்டேல், இஷாந்த் ஷர்மா, வினய்குமார், எம்.விஜய், ரோஹித் ஷர்மா, ரவீந்திர ஜடேஜா, ரஹானே, செளரவ் திவாரி, யூசுப்பதான், பார்த்தீவ்பட்டேல், அஷ்வின், விர்த்மான் சாஹா, தினேஷ் கார்த்திக், ஷிகார் தவான், அமித்மிஸ்ரா, பயுஷ் சாவ்லா, புஜரா, பிரக்யான் ஓஜா, பிரவீன்குமார்.




# பருத்தித்துறை லீக் இறுதியாட்டத்தில்

வலிவடக்கு,டிசெ.20

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளத்தினால் உதைப்பந்தாட்ட லீக்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்திற்கு பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் தகுதி பெற்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நீர்கொழும்பு உதைப்பந்தாட்ட லீக் அணியுடன் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் அணி மோதியது.

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் அணி எதிர்த்து விளையாடிய நீர்கொழும்பு லீக் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ஜ-86-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி, கிழக்குப் பகுதிகளுக்கு புதிய படைத்தளபதிகள் நியமனம்

வன்னிப்படைகளின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவும் கிழக்குப் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் நத்தன உடவத்தவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வன்னிப் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவும், கிழக்குப் படைகளின் தளபதியாக இருந்த பிரிகேடியர் பொனிபொஸ் பெரேராவும் வெளிநாடு ஒன்றுக்கு மேலதிக பயிற்சிக்காகச் செல்லவுள்ளனர். இதையடுத்தே இந்தப் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் முக்கிய பங்கு வகித்தவர். அவரது படைப்பிரிவினரே இசைப்பிரியா உள்ளிட்ட சரணடைந்த போராளிகளைப் படுகொலை செய்ததாகவும், போர்க்குற்றங்களில் தொடர்புபட்டிருந்தாகவும் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆயினும் இவர் எந்த நாட்டுக்கு மேலதிக பயிற்சிக்காகச் செல்லவுள்ளார் என்ற தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

அதேவேளை தற்போது வன்னிப்படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, 2004ல் இராணுவப் பேச்சாளராக இருந்த போது மோசடி வழக்கு ஒன்றில் நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டு அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டவர். இவர் பிரிகேடியர் பதவியில் இருந்து மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டே வன்னிப்படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் எனவும்- அதன்காரணமாகவே மூத்த மேஜர் ஜெனரல்கள் நியமிக்கப்படும் வன்னிப் படைகளின் தளபதி பதவிக்கு பிரிகேடியர் தரநிலையில் இருந்து புதிதாக மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டு இவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதே பெரோரா சென்னையில் அடிப்படைப் பயிற்சியைப் பெற்றவர். கஜபா படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போது அதில் இணைத்துக் கொள்ளப்பட்ட முதலாவது அணியைச் சேர்ந்தவர். வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கை தொடக்கம் ஏராளமான படைநடவடிக்கைகளில் இவர் பங்குபற்றியுள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் மேற் கொண்ட 'ஓயாத அலைகள் -3' தாக்குதல் நடவடிக்கையின் போது - 2000 மே 21ம் திகதி 533வது படைப் பிரிவைச் சேர்ந்த இவரது அணியே சரசாலையில் புலிகளின் தாக்குதலை முறியடித்தது. இலங்கை இராணுவத்தின் வான்வழி நகர்வுப்படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டபோது கஜபா படைப் பிரிவின் முதலாவது அணியின் கட்டளைத் தளபதியாக அதில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். (எ)

## லண்டன்-கொழும்பு விமானசேவை பனிப்பொழிவால் இடைநிறுத்தம்

கொழும்பு,டிசெ.20

லண்டனில் ஏற்பட்டுள்ள அதிக பனிப்பொழிவு காரணமாக இலங்கைக்கும் - லண்டனுக்கும் இடையிலான விமான சேவைகள் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் செல்வதற்காக பதிவு செய்துள்ள பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன்னர் 0197 335555 அல்லது 019 7332 377 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்காதரன் பங்கஜச்செல்வி

(மங்கை)



யாமாலை, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதரன் பங்கஜச்செல்வி 18.12.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சரவணமுத்து (London), செல்வமலரின் (Denmark) பாசமிகு சகோதரியும் மனோரஞ்சிதம், காலஞ்சென்ற மனோகரனின் அன்பு மைத்துனியும் பிரகலாதன், பிரமீனா, பிரவீனா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2010) திங்கட்கிழமை சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாமாலை,
சுழிபுரம்.

தகவல்: சரவணமுத்து (தம்பி),
செல்வமலர் (தங்கை).

(107655)

## தவறிவிட்டது

கட்டப்பிராய் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியுடைய கதிர்வேலு மகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (521153862V), விசேட அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்திற்கும் கட்டப்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது T.P. 021 4590252 க்கு தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

### செல்லர் இரத்தினசிங்கம்



அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் இரத்தினசிங்கம் (படவரைஞர், நில அளவைத் திணைக்களம்) நேற்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் செல்லர் - எஸ்தர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் கிறிஸ்ரின் தர்சினி, சத்தியேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரெலின்குமார், அனுசா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற றெபேக்கா தர்மலிங்கம் மற்றும் பரிமளசிங்கம், ஜீவானந்தம் (ஆசிரியர்), துரைசிங்கம், ஷாம் தேவபாலசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமசாமி, விஜயராசா, இந்திராணி (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.12.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் (227, புனித ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு) இடம்பெற்று, பூதவுடல் நல்லூர், பரி.யாக்கோபு ஆலயம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

227, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை.

தகவல் :
மனைவி.

(107649)

## மரண அறிவித்தல்

### திருமதி குணரத்தினம் பவானிதேவி (சாவகச்சேரி)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் பவானிதேவி நேற்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி-தங்கரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் மருமகளும் குணரத்தினத்தின் மனைவியும் கனகாம்பிகை, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் செந்தில்வடிவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருந்ததி (லண்டன்), பிரணவராசா(சிவாஜி), காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பரிந்தில்லைராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நிஜாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவின்(லண்டன்), பிரவினா(லண்டன்), பிரதிகா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றாரர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் ஒழுங்கை,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர் -
பிரணவராசா (சிவாஜி) 0776425049,
பரிந்தில்லைராசா 00442088649714

(107654)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் :
14.10.1988

மறைவு :
05.11.2010





### செல்வன் அருளீஸ்வரன் நர்சுதன்

(ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், 3ஆம் வருட முகாமைத்துவபீட மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி - வர்த்தகப் பிரிவு மாணவன் A/L-2007)

நாள்கள் நாற்பத்தைந்து கடந்தனவோ
நம்மை விட்டுப் பிரிந்து நீ...?
நாளும் உந்தன் நினைவுதான்
நம் நெஞ்சில் உந்தன் உறைவிடம்!
நிலையற்ற வாழ்வுதனில்
நிற்காமல் நீ சென்றாய்
நீங்காது உன் நினைவுகள்...
நின் ஆத்மா சாந்தியடையட்டும்...!

நண்பர்கள்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
2007 A/L மாணவர்கள்.

(107652)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்புக

## ஆஸியிடம் ஐ.நா. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 20

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகளை அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்புமாறு ஐக்கிய நாடுகள் சபை ஆஸ்திரேலியாவை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையகத்தின் பிராந்திய இணைப்பாளர் ரிச்சட் டௌல் மேற்படி வலியுறுத்தியுள்ளார்.

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்படுவது முறையற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் ஆஸ்திரேலியா செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்பும் வழிகள் குறித்து, ஆஸ்திரேலியா தீவிரமாக ஆராய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கண்டியில் கட்டுத் துப்பாக்கிச்சூடு; பொலிஸார் படுகாயம்

சட்ட விரோத மதுபானம் தயாரிக்கப்பட்டது எனக் கூறப்படும் இடமொன்றை சுற்றி வளைப்பதற்காக காட்டுப் பகுதிக்கு சென்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ள சம்பவம் கண்டியில் நடைபெற்றுள்ளது. படுகாயமடைந்த பொலிஸார் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி கலகெதர பிரதேசத்தில் நேற்றுக் காலை சட்ட விரோத மதுபானம் தயாரிக்கும் இடமொன்றைச் சுற்றி வளைப்பதற்காக கலகெதர காட்டுப் பிரதேசத்துக்கு சென்ற போது, மிருகங்களை வேட்டையாடுவதற்காகக் கட்டப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியில் சிக்கியே இவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 50,000 வீடுகள் அமைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டு நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் ஆகியவற்றின் உதவியுடனான கட்டட நிர்மாணப் பணிகளை இடைநிறுத்தும்படி டிசெம்பர் 9ஆம் திகதி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது வெளிநாடொன்றுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் சார்பாக அந்த அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டட புனர் நிர்மாணப் பணிகளுக்கும் நெற் களஞ்சியக் கட்டடங்கள் மற்றும் உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்தும் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதை இடைநிறுத்துவதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்து சிவலிங்கத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோது தான் கொழும்புக்கு வெளியே இருப்பதாகவும் இது விடயம் குறித்து விரிவாக எதுவும் தெரிவிக்க முடியாதெனவும் தெரிவித்த அவர் இந்திய உதவியுடனான 50ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் அப்பணிகள் தொடரும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார். (ஒ-சி)

(முன்னர் வந்த செய்தி 8 ஆம் பக்கத்தில்)

# இலங்கை பிரிட்டிஷ் உறவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் பிரதமரிடமிருந்து கடிதமொன்று கிடைத்ததை ரட்னபால உறுதிப்படுத்தினார். ஆனால் அதை வெளியிடுவதற்கான அதிகாரம் தனக்கு இல்லையெனவும் பந்துல ஜயசேகரவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கூறினார். அதன் பின் தனக்கு அத்தகைய கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என ஜயசேகர தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் கெமரூனின் கடிதத்தில் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்திற்காக வாழ்த்து தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் முன்னெப்போதுமில்லாத வகையில் இலங்கையில் நல்லாட்சி குறித்து ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது என ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியின் விஜயத்தின்பின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரை இரத்துச் செய்யப்பட்ட நிலையில் இக்கடிதத்தின் இரகசியம் வெளிவந்துள்ளது.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸ், கதிர்காமர் ஞாபகார்த்த சொற்பொழிவாற்றுவதற்காக கொழும்புக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டமை இரு நாடுகளுக்கும் இடையிலான உடையப்படக்கூடிய நிலையிலுள்ள உறவை மேலும் சீர்கெடச் செய்துள்ளது.

கலாநிதி பொக்ஸின் விஜயம் தனிப்பட்டதெனக் கூறப்பட்டாலும் அவர் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற்றிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சின் கரிசனைகள் காரணமாகவே அவர் தனது விஜயத்தை இரத்துச் செய்ததாக கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

எனினும் கலாநிதி பொக்ஸ் அடுத்த வருட முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார் எனவும் அது உத்தியோகபூர்வ விஜயமாக தரமுயர்த்தப்படும் எனவும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து வியாழனன்று நள்ளிரவு கதிர்காமர் மன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. இத்தகவலை லண்டனிலுள்ள இலங்கைக் தூதரகத்திற்கு அன்று மாலை கலாநிதி பொக்ஸின் அலுவலகம் அறிவித்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்தபோது அவர் சந்தித்த ஒரேயொரு பிரிட்டிஷ் அரசியல் தலைவர் கலாநிதி லியாம் பொக்ஸ் ஆவார். அவர் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதியைச் சந்தித்தார். பிரிட்டிஷ் அரசின் ஏனைய அங்கத்தவர்கள் சந்திப்புகளுக்கான நேரம் ஒதுக்க மறுத்தனர்.

இவ்வார ஆரம்பத்தில் பதவிக்காலம் முடிந்து செல்லும் பிரிட்டிஷ் தூதர் பீற்றர் ஹேய்ஸ் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்புவரை அவருடனான பிரியாவிடைச் சந்திப்புக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மறுத்தார். பின்னர் பீற்றர் ஹேய்ஸ் இலங்கையிலிருந்து புறப்படும் தினத்தில் காலை உணவுவிருந்துக்கு அவரை ஜனாதிபதி அழைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் அதிகாரி டேவிட் கிளாட்ஸ்டோன் உள்ளூர் தேர்தல் விடயத்தில் தலையிட்டதன் காரணமாக 'வரவேற்கப்படாதவராக' அறிவிக்கப்பட்டதன் பின்னர் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் மிக மோசமான நிலைமையாக தற்போதைய நிலையை இராஜதந்திர வட்டாரங்கள் நோக்குகின்றன.

- இப்படி [illegible] டிருந்தது.

# நாளை முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லையென சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான டியூ.குணசேகர தெரிவித்தார்.

கடந்த நவம்பர் 22ஆம் திகதி 10 சிரேஷ்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது முதல் அவர்கள் தமது தனிப்பட்ட வீடுகளிலேயே தங்கியிருந்து கடமையாற்றி வந்துள்ளனர். (ஒ)

# இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்காகவே அவர் இலங்கை வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்படுவது இந்தியாவிற்கும், இலங்கைக்கும் நன்மை அளிக்கும் என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிரூப்மா ராவ் தெரிவித்துள்ளார்.

இவ் விஜயத்தின்போது தனிப்பட்ட ரீதியில் எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள், கூட்டாக இணைந்து இரு நாடுகளும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன தொடர்பில் பேச்சு நடத்தப்பட உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வையாக வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே சமாதான ஏற்பாட்டாளராக நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திப்பதற்காக ஐ.நா நிபுணர்கள் குழு இலங்கை வரவுள்ளதாக ஐ.நா பொதுச்செயலர் அறிவித்ததை அடுத்தே நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திக்க ஐ.நா நிபுணர் குழு இலங்கை வந்தால் அதைக் கையாள்வது எப்படி என்பது குறித்தே வெளிவிகார அமைச்சர் பீரிஸ் இந்தச் சந்திப்பின் போது விரிவாகக் கலந்துரையாடியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க ஐ.நா நிபுணர் குழு இலங்கை வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தமிழ் இனப்படுகொலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் மைலந்தனை, கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலைப் பல்கலைக்கழகம், அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், அம்பாறையில் சத்துருக்கொண்டான், வீரமுனை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் ஆகியவை குறித்தும் தான் சாட்சியங்களைத் திரட்டியிருக்கிறார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஒரு சமூகசேவையாளனாக, அரச ஊழியனாக, ஊடகவியலாளனாக, மக்கள் பிரதிநிதியாக இருந்து தான் அவ்வகையான ஆதாரங்களைத் திரட்டி வைத்திருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் டக்ளஸ் தேவானந்தா, கருணா அம்மான் ஆகிய அமைச்சர்களின் தலைமையிலான ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல் காரணமாக தான் நாட்டைவிட்டும் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறான நிலையில் ஐ.நா. நிபுணர் குழுவின் வரையறைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனது முறைப்பாட்டை அனுப்ப முடியாதுள்ளதால் தான் நேரில் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# ஐரோப்பிய நாடாளுமன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

கடந்த வாரம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக பரிமாறப்பட்ட கருத்துகளுக்கு இலங்கை பதிலளிப்பதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டது. இதனை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

அவ்வேளையில் தலைமை வகித்த அதிகாரி, இந்த நிராகரிப்பை மேற்கொண்டதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான உப குழு இலங்கை விவகாரத்தில் நியாயமான சமத்துவமான கலந்துரையாடலை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை,

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துவதற்கு இந்நாடாளுமன்றம் அனுமதியளிக்கிறது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

மேற்படி மனித உரிமைகள் உபகுழுவின் தலைவி ஹெய்டி ஹௌதாலாவுக்கு இலங்கைத் தூதுவர் ஆரியவன்ஸ அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

டிசெம்பர் 6 ஆம் திகதி இலங்கை தொடர்பாக ஒரு மணித்தியால கலந்துரையாடல் நடத்தப்பட்டது. உபகுழுவிலுள்ள 32 எம்.பிக்களில் ஒருவர் மாத்திரமே பேசினார்.

ஐரோப்பிய ஆணைக்குழுவினால் ஒருசில கருத்துகள் தெரிவிக்கப்பட்டதைத் தவிர, பெரும்பாலான நேரம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

- இப்படி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

# ஐ.நா.நிபுணர் குழு - நல்லிண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான மக்கள், தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் பற்றி இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவிடம் ஏற்கனவே முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்துள்ள நிபுணர் குழு இலங்கை வந்து ஆணைக்குழுவை சந்திப்பது முக்கியமான விடயமாகும்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கவே ஐ.நா. நிபுணர் குழு இலங்கை வருகிறது என அரசு அறிவித்துள்ளது. எனவே, இலங்கை வரும் ஐ.நா. நிபுணர் குழு நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் பகிரங்கமாக சாட்சியமளிக்க வேண்டும்.

- இப்படி சுமந்திரன் எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

### வடக்கு - கிழக்கு முன்வைத்த சாட்சியங்களை ஆராய வேண்டும்

இதேவேளை, ஐ.நா. நிபுணர் குழு இலங்கை வருவது குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக நிபுணர் குழு இலங்கை வருவதற்கு வெளிவிவகார அமைச்சு அனுமதி அளித்துள்ளபோதும், அரசிலுள்ள விமல் வீரவன்ஸ போன்ற அமைச்சர்கள் அதனை எதிர்த்து வருகின்றனர் என மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எப்படியிருப்பினும், ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்து, நல்லிணக்க ஆணைக்குழுவிடம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு, கிழக்குப் பகுதி மக்கள் முன்வைத்துள்ள சாட்சியங்களை ஆராய்ந்து அதற்குச் சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாயின், அது வரவேற்கத்தக்கது என மனோ கணேசன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் இன்று முதல் விநியோகம் ஆரம்பம்

புதிய கல்வி ஆண்டுக்கான பல் கலைக்கழக அனுமதிக்குரிய விண்ணப்பப்படிவங்களை இன்றுமுதல் மானிய ஆணைக் குழுவினால் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேலதிகச் செயலாளர் கலாநிதி பிரியந்த பிரேம்குமார தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மற்றும் சமய விவகார முகாமைத்தும் என்ற புதிய பாடநெறியொன்று இம்முறை ரஜரட்ட மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாவும் அவர் கூறினார்.

கடந்த வருடத்தை விட சுமார் ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஒ-எ)

## ஐ.நா. தகவலின்படி ஒன்பதாயிரம் அரசியல் கைதிகள் தடுத்துவைப்பு

ஐ.நாவின் தகவல்களுக்கு அமைய இலங்கையில் சுமார் 9000 அரசியல் கைதிகள் சிறைகளிலும், தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

2600ஆம் பௌத்த ஜயந்தி விழா கொண்டாடப்படும் சந்தர்ப்பத்திலேனும் இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.குரோத அரசியலிருந்து விடுபடுவதற்கான காலம் மலர்ந் துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப அரசியல் தீர்வு அத்தியாவசியமானது

### திஸ்ஸ வித்தாரண தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.20

ஐக்கிய இலங்கையைக் கட்டிழுப்புவதற்கு அரசியல் தீர்வும் புதிய அரசமைப்பும் அத்தியவசிய தேவை - என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரிகள் கட்சியின் 4 ஆவது சம்மேளன கூட்டம் நேற்று மஹரகமவில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இலங்கைத் தேசத்தை உருவாக்குது அவசியம். எனினும், இதுவரையில் அதனை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு தமிழ்த் தரப்புத் தலைவர்களுடன் ஜனாதிபதி நீண்ட தெளிவான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்தச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு, சர்வதேச ரீதியாக பல சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு ஒன்று இல்லாமல் பொருளாதார முன்னேற்றமே போதுமானது என சிலர் கருதுகின்றனர். அது மிகவும் தவறான கருத்து என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு என்பது நாட்டுக்கு மிகவும் முக்கியமான விடயம் எனவும், புதிய அரசமைப்பு ஒன்றும் நாட்டுக்கு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனநாயக இடதுசாரிகள் கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர், வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கிடைத்த சுதந்திரம், நிலைப்பதற்கான பின்புலங்களை உருவாக்க வேண்டியது அவசியம் என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(ஒ-எ)


**வீடு வாடகைக்குத் தேவை**

7 பேர் கொண்ட குடும்பத்துக்கு பருத்தித்துறை, சாரையடி, மாலுசந்தி, மந்திகை, நெல்லியடி ஆகிய பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 0772487653, 0716182182

**வான் விற்பனைக்கு**

HC xxxx தொடர் இலக்கமுடைய HIJET (சிறிய) A/C Power Staring வான் விற்பனைக்கு அல்லது நீண்ட கால வாடகைக்குண்டு.

தொடர்பு : 0779218444

**Personal Class (ENGLISH)**

தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் - பிரபல்யமான ஆசிரியரினால் சகல வயதினருக்கும் Spoken English, English Language வீடுகளுக்கு வந்து வித்தியாசமான முறையில் கற்பிக்கப்படும்.

T.P : 077-5242809

**ICT ICT ICT**

Grade 10 / 11 - English / Tamil Medium

இன்று புதிய பிரிவுகள் ஆரம்பம் : 12 மணி

By : R. Kumaran - B.Sc.

74, சபாபதி லேன், தலையாழி, பிரம்படி. T.P : 0776577359

| | |
|---|---|
| PHP, Mysql Apache, Joomla | JAVA (SCJP) Programming |
| Dynamic Web Development | By : R. Kumaran 74, சபாபதி லேன், தலையாழி, பிரம்படி. |
| 0776577359 | |

**PHYSICS PARK**

அனுக்கர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்.

PHYSICS - DAY BATCH

முற்றுமுழுதான விளக்கத்துடனான கடந்தகால வினாக்களுக்கான மீட்டல்

ஆரம்பம் : 21.12.2010 (Tue)

செவ், வியா : (5.00-6.15) P.m

சனி, ஞாயிறு : (2.45-4.00) P.m

By - A.Anapayan B.Sc. (Hons) Spl. in phy.

**தொழில்நுட்பவியலாளர் தேவை**

ரேடியோ, TV பழுது பார்த்தலில் முன் அனுபவம் உள்ள தொழில்நுட்பவியலாளர் வேலைக்குத் தேவை. யாழ்ப்பாணம், கொழும்பில் தங்குமிடம், உணவு, சம்பளம் கொடுக்கப்படும். மேலும் கணினி, கணினி உபகரணங்கள் திருத்துவதற்கு மேலதிகப் பயிற்சி வழங்கப்படும்.

தொடர்பு : 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0212225893

**சுன்னாகம் சிங்கரின் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான செய்திகளுடன் நத்தார் தாத்தா**



சுன்னாகம் சிங்கரில் உங்களுக்காக! மேலதிக விலைக்குறைப்புக்கும் அதிகமாக விசேட ...... விலைக்கழிவுகள். வாடிக்கையாளர்களை குதூகலப்படுத்த சின்னஞ்சிறு அன்பளிப்புக்கள்!

மற்றும் எதிர்வரும் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று சுன்னாகம் சிங்கரின் வாடிக்கையாளர்களின் இல்லத்துக்கு நிச்சயம் அதிஷ்டத்தை அள்ளித்தரும் செய்தியுடன் நத்தார் தாத்தாவை எதிர்பாருங்கள்.

சிங்கர் பிளஸ், இல. 136, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். தொ.பே. 0212240555

**பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் விற்பனையாகிறது**

இன்று முதல் தொடர்ச்சியாக விற்பனை செய்யப்படும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தொ.பே : 021222-6693, 1637

**FIRST FORM**

மக்மிலன் புத்தகசாலையின் அனுசரணையுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவம் [FIRST FORM] விற்பனையாகிறது.

ஸ்ரீகாந் புத்தகசாலை

இல. 165, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**விற்பனையாகிறது**

பல்கலைக்கழக முதல் படிவம் University First Form இன்று முதல் விற்பனையாகிறது.

கொழும்பு விலை - 300/=

யாழ். விலை - 300/=

அன்னை புத்தகசாலை யாழ்ப்பாணம்.

2229881

**ஐடியல் அக்கடமி**

சிறாணிச்சந்தி, சண்டிலிப்பாய். கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

A/L - DAY CLASS

| | |
|---|---|
| தமிழ் | A.K. கீர்த்திராஜன் / T. அஜந்தகுமார் (வடமராட்சி முன்னணி ஆசிரியர்) |
| இந்துநாகரிகம் | T. ஸ்ரீஸ் |
| நாடகமும் அரங்கியலும் | K. சுதா |
| அளவையியல் | E.S. பவன் |
| அரசியல் | S. கோகுலன் |
| வரலாறு | R.S. சந்திரன் |
| புவியியல் | Y. ஆனந்தன் |

ஆரம்பம் : இன்று 20.12.2010 (திங்கள்) நேரம் : 2 P.m

*** IELTS- 3months**



1. Academic Training Group
2. General Training Group

18.12.2010

*** Spoken English - 3months**

வார/ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்..

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
★ ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
★ கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தும் வசதி
★ இன்றிலிருந்து அனுமதி வழங்கப்படும்.

European College

தொடர்பு:
European College of Higher Studies,
315 1/2, Parameeswara Junction,
Palaly Road, Jaffna.
(யாழ்.பல்கலை கழகத்திற்கு அருகில்)

Tel: 0771882507, 0213734747

**PC REPAIRS**



HOT LINE 0777425974

| | |
|---|---|
| PC stuck | Power supply/Pack Problems |
| LCD Problems | Capture Card problems |
| Virus Problems | Internet & Email Setup |
| Display problems | Net-2-Phone configuration |
| Memory errors | Printers, Scanners & other |
| Windows problems | Software/Drivers installation |

MICRO PC SYSTEMS

யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

**IIS கணனிக்கற்கை நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

கல்வியாண்டு 2011ற்குரிய அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

Institute of Informatics Studies
100,Clock Tower Road,Jaffna
T.P : 021 2222831 , 021 4922741

**Bsc காமராசர் பல்கலைக்கழகம்**

★ புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L இல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமையான சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகும்.
★ புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம் : 01.01.2011 காலை 8 மணி.
★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு :- 1] B.Sc, BA,B.Com இற்குரிய பரீட்சைகள் ஆரம்பம் : 19.12.2010
2] MA M.Com, MSC இற்குரிய பரீட்சைகள் ஆரம்பம் : 27.12.2010

★ மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் நேர அட்டவணையையும் அனுமதி அட்டையையும் நிறுவனக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
★ மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

முக்கிய கவனிப்பு :-
மேற்குறிப்பிட்ட பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ். இணைப்பாளர்கள், காமராசர் பல்கலைக்கழகம்.

(சி/573251)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.